~~46~~
1492

செங்குந்த மித்திரன்

தொகுதி: ௩ (3)

பகுதி - க.௨ (12)

மார்ச்

1929-30

ட
Y592 ஞ 241, N27CH.
N29.3.12
129812

129812.

Registered No. M. 1514

# செங்குந்த மித்திரன்

OFFICE OF THE REGISTRAR
No.
18 DEC 1929
MADRAS

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

பத்திரிகாசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.
துணை ஆசிரியர் : பண்டிதர், பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி - ௩] | சுக்கில௵ - மார்கழிமீ | [பகுதி - ௧௨

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை | .... ௪௫௩ |
| செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு | ... ௪௫௫ |
| சமயப் பகுதி : இந்து தெய்வ மூர்த்தம் | ... ௪௫௭ |
| பொது விஷயங்கள்: நல்லாரிணக்கம் | ... ௪௫௯ |
| செங்குந்த யாத்திரைவாசி : | ... ௪௬௧ |
| நமது இயக்கத்தை பலப்படுத்துவ தெப்படி | ... ௪௬௫ |
| சுகாதாரப் பகுதி: ஓஜோன் | .... ௪௬௭ |
| குலதிலகர் பகுதி | .... ௪௭௦ |
| விகடத் துணுக்குகள் | ... ௪௭௧ |
| ஆன்றோர் அமுதமொழிகள் | .... ௪௭௨ |
| சாரதா மசோதா என்னும் சட்டம் | .... ௪௭௩ |
| நமது கடிதங்கள் | ... ௪௭௪ |
| சிறு கதைத்திரள் | .... ௪௭௭ |
| பாமாலைப் பகுதி | ... ௪௭௯ |
| நமது இரண்டாவது மகாநாடு | ... ௪௮௧ |
| செங்குந்தர் கிளர்ச்சி | .... ௪௮௩ |
| மதிப்புரை | ... ௪௮௯ |
| வர்த்தமானப் பகுதி | ... ௪௯௦ |
| செங்குந்தமித்திரன் பஞ்சாங்கம் | ... ௪௯௨ |


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
சென்னை.

# "செங்குந்த மித்திரன்"

தென்னிந்திய சேங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு.

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம் ஏ., எல்.டி.,
துணை-ஆசிரியர் : பண்டிதர் பி. சே. மாணிக்கவாசக முதலியார்

இது உண்மைச்செங்குந்தர்கள் முன்னேற்றமடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப்பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப்புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும, உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குகளும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாக கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும்: பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சிறிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள ஆதரவு அதிகமும் எதிர்ட்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'சேங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானல் நமது 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| தபாற்கூலி உள்பட வருடச் சந்தா | ரு அ.பை. | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா ,, | 2—0—0 | 0—2—6. |

நமது தலைவர்களின்
அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. அ. பை. |
|---|---|
| ஒட்டக்கூத்தர் | ... 1 8 0 |
| தலைச்சங்க நிர்வாகசபை அங்கத்தினர் (22 பேர் கொண்ட படம்) | ... 2 8 0 |
| ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) | ... 1 8 0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் | .... 1 8 0 |

செங்குந்தமித்திரன்
2-ம் ஆண்டு பைண்டு புத்தகம்

அநேகர் விரும்பிக் கேட்டதனால் செலவழிந்துவிட்ட முதல் 3 மாதப் பத்திரிகைகளையும் மீண்டும் அச்சிட்டு 12 சஞ்சிகைகளையும் சேர்த்து பைண்டு செய்துள்ளோம்.

இன்னும் சொற்ப காபிகளே உள்ளன.

தபாற்செலவு உள்பட விலை ரூ. 2.

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத தெருவு, சென்னை.

OFFICE ... 18 DEC 1929 MADRAS
129 812

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய சேங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

பத்திரிகாசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.
துணை ஆசிரியர் : பண்டிதர், பி. சே. மாணிக்கவாசக முதலியார்.

| தொகுதி - ௨ | சுக்கில - மார்கழி | பகுதி - ௧௨ |
|---|---|---|

முருகன் துணை.

இருவினை மங்க மலவகை மங்க இருள்பிணி மங்க—மயிலேறி
இனவரு ளன்பு பொழியக டம்பு வினதக முங்கோ—டளிபாடக்
கரிமுக னெம்பி முருகனே னண்டர் களிமலர் சிந்த—அடியேன்முன்
கருணை பொழிந்து முகமு மலர்ந்து கடுகி நடங்கோ—டருள்வாயே
திரிபுர மங்க மதனுடல் மங்க திகழ்நகை கொண்ட—விடையேறி
சிலவெளி அங்க ணருள்குடி கொண்டு திகழ நடஞ்செய்—தெமையீனும்
அரசி யிடங்கொள் மழுவுடை எந்தை அமலன் மகிழ்ந்த—குருநாதா
அருணை விலங்கல் மகிழ்தரு மங்கை அமளி நலங்கொள்—பெருமாளே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

**தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு.**

இவ்வாண்டு முதலில் (சென்ற தைமீ) ஈரோட்டில் கூடிய நம்மவர் முதலாவது மகாநாடு நம்மவர்க்குள் எவ்வளவு ஒற்றுமை உணர்ச்சியையும் கிளர்ச்சியையும் முன்னேற்ற தாகத்தையும் உண்டாக்கியிருக்கின்றதென்பது வெள்ளிடை மலைபோல் நம்மவர்க்கெல்லாம் இப்போது விளங்கி நிற்கின்றது. அத்தகைய மகாநாட்டின் பெருமையினையும் பயன்களையும் உன்னியுன்னிப் பேரானந்தங் கொண்டு தம் மகிழ்ச்சியை நமக்கு எழுதுவோரும் நேரில் சொல்வோரும் பலர் உளர். அத்தகைய மகாநாடு மற்றொன்றினைக் கூடிய சீக்கிரத்தில் கூட்டிவைக்கவேண்டுமென வற்புறுத்திக் கூறுவோர் எண்ணிலடங்கா. செங்குந்த உலகமுழுவதுமே நம்மவரது இரண்டாவது மகாநாட்டினை வெகு ஆவலுடனும் ஆர்வத்துடனும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்நிலைமையில், நம்மவரது இரண்டாவது மகாநாடு காஞ்சிமா நகரத்தில் அடுத்த வசந்த காலத்தில் சித்திரை முடிவிலாவது வைகாசி முதலிலாவது கூடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள்

அதிதீவிரமாக நடைபெற்று வருகின்றன என் பதைக் கேள்விப்பட நமது அன்பர்கள் கரை காணு ஆனந்தங் கொள்வார்களென்றே நம்பு கின்றோம். தைமாதங் கூடவிருந்தது மூன்று மாதங்கழித்து நடைபெறவேண்டியதற்கு முக்கிய காரணம், நமது தொண்டர்களுக்குத் தைமாதம் ஓய்வும் விடுமுறையும் கிடைக்காமலிருப்பதே யாகும். மேலும், அச்சமயம் உற்சவகாலமா தலால் காஞ்சிபுரம் மிக்க பொலிவுடன் விளங்கி அன்பர்கள் பல திக்குக்களிலுமிருந்து வந்து கண்டு களிப்பதற்கான நிலையிலிருக்கும். நமது மாபெருந் தலைவர் உயர் திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் இம் மகாநாட்டு சம்பந்த மான சகல முயற்சிகளிலும் ஈடுபட்டு அதனை வெகு ஒழுங்காகவும் மிக்க பயனளிக்கும் முறை யிலும் நடத்திவைக்க அதிஊக்கமாக இருக்கின் றனர். டிசம்பர்மீ 12உ வியாழக்கிழமை (கார்த்திகைமீ 27உ) மாலை 4-30-மணிக்கு காஞ்சிக் கச்சபேசுவரர் ஆலயத்தில் கூடிய கூட் டத்தில் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள கிளைச் சங்கங்களும் கிராமங்களும் நமது பிரதிநிதிகளை அனுப்பிவைத்து இம் மகாநாட்டைச் செவ் வனே நடத்திவைப்பதற்கான வரவேற்புச் சபையை நிர்ணயித்துள்ளன. இதா விவரங்க ளைக் கிளர்ச்சிப் பகுதியிலும் அடுத்த மாதத்துச் சஞ்சிகையிலும் கண்டுகொள்க. நமது குலத் தவர்க்குப் பெருமைமிக்க நகராகிய காஞ்சியில் நம்மவர் இரண்டாவது மகாநாடு நடைபெறு வது பலருக்கும் திருப்தியை யுண்டுபண்ணு மென்றே நம்புகின்றோம. பதினாயிரக்கணக் காக அதற்கு நம் குலப் பிரதிநிதிகள் விஜயஞ் செய்வார்களென்றே எதிர்பார்க்கின்றோம்.

### சீட்டுக் குலுக்குந் தேதி.

மகாநாடு தள்ளிவைக்கப்படினும், நமது கல்வி நிதிச்சீட்டினை குலுக்குந் தேதியும் இடமும் மாறவில்லை என்பதை அன்பர்கள் உணர வேண்டுகின்றோம். முன்குறித்தபடி 1930௵ ஜனவரிமீ 26உதேதி பகல் 12-மணிக்கு காஞ்சி புரத்தில் ஸ்ரீ கச்சபேசுவரர் ஆலயத்தில பல பிர முகர்கள் முன்னிலையில் சீட்டுக்கள் குலுக்கிப் பரிசுகள் நிர்ணயிக்கப்பெறும். இது சம்பந்த மாக விவரங்கள் அடுத்த சஞ்சிகையில் வெளி வரும்.

பணம் அனுப்புவதற்கு கடைசி நாளாகக் குறிப்பிட்ட தேதி 31-12-29 ஆகும். 1930-௵ ஜனவரிமீ 15உ வரையிலும் பணம் ஏற்றுக் கொள்ளலாமென இப்பொழுது தீர்மானமாயி ருக்கிறது.

### நான்காம் ஆண்டு.

நமது பத்திரிகைக்கு அடுத்த தைமீ நான்காம் ஆண்டு ஆரம்பமாகின்றது. அது முதல் நமது மித்திரன் புதிய பொலிவுடன் வெளிவர ஏற் பாடுகள் செய்திருக்கின்றோம். அன்பர் தமது சந்தாபாக்கிகளை செலுத்துவதோடு, புதிய சந் தாதாரர்களையும் சேர்த்துக் கொடுக்குமாறு வேண்டப்பெறுகின்றனர்.

### தேர்தல் வெற்றி.

அருப்புக்கோட்டை யூனியன் போர்டுக்குத் தலைவராக திரு. அ. கு. சி. சிவசுப்ரமணிய முதலியார் அவர்களும், சைதாப்பேட்டை நகர பரிபாலன சபைக்கு உபதலைவராக திரு. S. ரத் தினவேலு முதலியாரவர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றனர். இப்பெரி யார்களுக்கு எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### பிழை திருத்தம்.

சென்றமாத நமது மித்திரனில் 447-வது பக் கத்தில் கோயமுத்தூர் ஜில்லா பள்ளியபாளை யம் செங்குந்தர்களின் தீவிர முயற்சி என் றிருப்பதை சேலம் ஜில்லா என்று திருத்தி வாசித்துக்கொள்ளும்படி அன்பர்களை கேட்டுக் கொள்ளுகிறோம்.

ம. ச.

---

### வசம்பின் பயன்.

பச்சைவசம்பின் வாசனை பட்டவுடன் பாம்பு பிரக்ஞையற்றுப் போய்விடும். அதன் வாடை எவ்வளவு தூரம் வீசுமோ அவ்வளவு தூரம் நல்ல பாம்பு தலைகாட்டாதாம். எனவே, பச்சை வசம்பை வீடுகளில் வைத்து பயிரிடுதல் நல்லது.

* * *

### எலுமிச்சம்பழ ரசம்.

காலராக் கிருமியைக் கொல்லுஞ் சக்தி எலு மிச்சம்பழச் சாற்றுக்கு இருப்பதால் காலரா பரவியுள்ள இடத்தில இருப்போர் அடிக்கடியா வது நாளொன்றுக்கு மூன்று வேளையாவது எலுமிச்சம்பழச் சாற்றை பானகமாகவோ வேறு எந்த விதமாகவோ அருந்தினால் காலரா நோய் அணுகாதென ஒரு டாக்டர் கூறினார்.



முருகன் துணை.

# செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு

### சீட்டுப் போடவேண்டிய அவசியமும் நோக்கமும்

சமூக முன்னேற்றத்திற்கும் தேச முன்னேற்றத் திற்கும் கல்வி இன்றியமையாத தென்பது யாவருமறிந் ததே. இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முத லிய தேசங்கள் மற்றெல்லாத் தேசங்களினும் சிறந்து திகழ்வதற்குக் காரணம் அத்தேச மக்களின் கல்வி யறிவுத் தேர்ச்சியே. நம் நாட்டில் நூற்றுக்குப் பத்துப்பேரும் எழுதப் படிக்கத் தெரிந்தவரல்லர். அதிலும் நம்குல மக்களில் படித்தவர் தொகை பிறர் எள்ளி நகையாடுதற் கிடமான சொற்பஎண்ணிக் கையே. இவ்விழுக்கை நீக்குதற்குஆரம்பப் படிப்பு, கலாசாலை உயர்தரப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, மற் றும் வியாபாரம், வைத்தியம், போதனு முறை, சட்டம், கைத்தொழில் (நெசவு), என்ஜினீரிங் முத லிய துறைகளில் நம் குல மாணுக்கர்கள் தேர்ச்சிபெற லவசியம்.

அங்ஙனம் தேர்ச்சி பெறுதற்குப் பண ஒத்தாசை இன்றியமையாதது. சாசுவதமான உபகார நிதி யொன்று ஏற்படுத்தி அதன் வருவாயிலிருந்து நம் இனத்து மாணுக்கர்களுள் தக்கவர்க ளெல்லோருக் கும் உதவி செய்தல் வேண்டும். இந்நிதியிலிருந்து வெளிநாட்டுச் சர்வகலாசாலைப் பயிற்சிக்கும், 'கைத் தொழிற் கல்விக்கும் புத்திகூர்மையும் ஊக்கமு முள்ள மாணுக்கர்களைத் தேர்ந்தெடுத்து அனுப் புவதற்கு வேண்டிய அளவு வருவாய் ஏற்படு தல் அவசியம். பரம ஏழைகளாகிய சில புத்தி கூர்மையான செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளமேயன்றி உண்டி, உடை, இருப்பிடங்களையும் இலவசமாகத் தந்துதவுவதும் அவசியமே. இதற்கொரு விடுதியினை இராஜதானி நகராகிய சென்னையில் ஏற்படுத்த நம் சங்கம் முயன்றுவருகிறது. இதற்கும் ஒரு பெருநிதி அவசியமென்பது அன்பர்கள் அறிந்ததே.

### நிருவாக சபை.

இதனைக் கருதியே சென்ற விபவ௵ தைமீ 7. 8 தேதிகளில் ஈரோட்டில் கூடிய தென்னிந்திய செங் குந்தர் முதலாவது மகாநாட்டில் செங்குந்தர் கல்வி நிதிக்குப் பொருள் திரட்டுதற்குக் கூறிய மார்க்கங்க ளில் "சீட்டு" ஒன்று ஆரம்பித்து அதில் பெருந் தொகை மிச்சப்படுத்துதல் வேண்டுமெனத் தீர்மான மானது. இதை முன்னிட்டுத் தென்னிந்திய செங் குந்த மகாஜன சங்கத்தின் நிருவாக சபையார் 1-5-29-ல் கூடிய தமது கூட்டத்தில் நமது சங் கத்தின் மேல்பார்வையில் 'செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு' ஒன்று நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள்,

### செங்குந்தர் கல்விநிதிச் சீட்டின் விபரம்.

டிக்கட் ஒன்றுக்கு எட்டணு (0-8-0) வீதம் 1 லக்ஷம் ரூபாய் வசூல் செய்து, அச்சுக்கூலி, சிப்பந்திச் சம்பளம், பிரயாணச் செலவு முதலியவற்றிற்காக ரூ. 15,000 போக, மீதி ரூ. 85,000-த்தில் ரூ. 60,000 செங்குந்தர் கல்விநிதிக்காக வைத்துக்கொ ண்டு, மிகுதியுள்ள ரூ. 25,000-த்தைச் சீட்டுக்கள் வாங்கிய நண்பர்களுக்குச் சீட்டுக் குலுக்கிக் கீழ்க்கண் டபடி பிரைசுகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | 1-வது பிரைஸ் | 1-க்கு | ரூ. 5000ஆக | ரூ. 5000 |
| (2) | 2-வது ,, | ,, | ,, 2500 | ,, 2500 |
| (3) | 3-வது ,, | ,, | ,, 1000 | ,, 1000 |
| (4) | 4-வது ,, | ,, | ,, 500 | ,, 500 |
| (5) | | 5-க்கு | ,, 200 | ,, 1000 |
| (6) | | 10 ,, | ,, 100 | ,, 1000 |
| (7) | | 20 ,, | ,, 50 | ,, 1000 |
| (8) | | 40 ,, | ,, 25 | ,, 1000 |
| (9) | | 100 ,, | ,, 15 | ,, 1500 |
| (10) | | 300 ,, | ,, 10 | ,, 3000 |
| (11) | | 600 ,, | ,, 5 | ,, 3000 |
| (12) | | 1500 ,, | ,, 3 | ,, 4500 |

மொத்தத் தொகை ரூ. 25,000

ஒரு டிக்கட்டின் விலை எட்டணுவாக 21 டிக்கட்டு களடங்கிய ஒரு புத்தகத்தை விற்கும் நபர் ரூ. 10 அனுப்பிவிட்டு 1 டிக்கட்டைக் கமிஷனுக்காக எடுத் துக்கொள்ளலாம். 20 டிக்கட்டுகளுக் குறைந்து விற் கிறவர்களுக்குக் கமிஷன் கிடையாது.

### கல்விநிதிச் சீட்டுக்கள் வாங்குவோர் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

மேற்படி கல்விநிதிக் கமிட்டியார் ஏற்பாட்டின்படிச் சீட்டுச் சம்பந்தமான கணக்கு, ரிக்காடு முதலியவை ஜாக்கிரதையாய் வைக்கப்பட்டுவருகின்றன. டிக் கட் வாங்கியவர் எவரேனும் கணக்குப்பார்க்க விரும்

பினால் ஆபீஸ் ரோத்தில் தேவையான்போது பார்த்துக்கொள்ளலாம்.

டிக்கட்டிலுள்ள ஒவ்வொரு ஐடத்தையும் பூர்த்தியாக எழுதி அதன் ஒருபாகத்தைப் பணம் கொடுத்தவர் பெற்றுக்கொள்ள வேண்டும். மற்றொரு பாகத்தையும் பணத்தையும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவிடவேண்டும். டிக்கட் புத்தகங்கள் தேவையானவர்கள் ஷைகமிட்டிக் காரியதரிசிக்கு அல்லது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கக் காரியதரிசிக்கு எழுதியாவது, அல்லதுஆங்காங்குப் பிரசாரம் செய்துவரும் நமது தலைச்சங்கப் பிரசாரகர்கள் மூலமாவது பெற்றுக் கொள்ளலாம். ஷை கல்விநிதிக் கமிட்டிக்குப் பணம் சேராத டிக்கட்டுக்கள் குலுக்கப் பெறும் சீட்டுக்களோடு எவ்விதத்திலும் சேர்க்கப்படமாட்டா. டிக்கட்டுப் பெற்றவர்கள் தங்கள் நெம்பர் கல்விநிதிச் சீட்டில் சேர்ந்திருக்கிற விபரம் தெரிய வேண்டுமானால் ரிப்ளை கார்டில் தங்கள் டிக்கட்டு நெம்பரையும் புத்தக நெம்பரையும் குறித்தனுப்பித் தெரிந்துகொள்ள வேண்டும்.

**கல்விநிதிச் சீட்டு எடுத்தல்.**

1930ஹூ ஜனவரிமாதக் கடைசியில் நமது இரண்டாவது மகாநாட்டுப் பந்தலில் சீட்டுக் குலுக்கிப் பிரைஸ் எடுக்கப்படும். சீட்டுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பூராத்தொகை ஒரு லக்ஷரூபாயும் வசூலாகாது குறையுமானால் விகிதாசாரப்படிப் பிரைஸ்கள் குறைத்தே கொடுக்கப்படும். எல்லாத் தொகைகளும் டிக்கட்டுகளும் 1929ஹூ டிசம்பர்மீ 31௳க்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்துசேர்ந்துவிடவேண்டும்.

**பிரைஸ் வந்தவர்களுக்கு அறிவிக்கும் விதம்.**

சீட்டு எடுத்தானவுடன் முடிவு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். பிரைஸ் வந்த முதல் 20 நபர்களுக்கு அவர்கள் செலவில் தந்தி கொடுக்கப்படும். மற்றவர்களுக்குத் தபால் மூலம் அவர்கள் செலவில் தெரிவிக்கப்படும். பிரைஸ் பெற்றவர்கள் சீட்டுப் போட்ட ஒரு மாதத்திற்குள் தங்களிடமுள்ள ரசீதில் கையெழுத்திட்டு அனுப்பிப் பணத்தை நேராகவோ அல்லது மணியார்டர்மூலமாகவோ பெற்றுக்கொள்ள வேண்டியது.

ஒவ்வொருவரும் நம்மவருள் கல்வியினை வளர்ப்பதனையே தங்கள் முக்கியக் கடமைகளுள் ஒன்றாகக் கருதிப் பொது நன்மைக்கான இந்நிதியினைத்தவறாது ஆதரிக்க வேண்டுகிறோம்.

**ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி.,**
**பி. சே. மாணிக்கவாசக முதலியார்,**

அமைச்சர்கள்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
சென்னை. 3—5—29.

---


## "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு"

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்துவிட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது', 'எழுப்பெழுபது', மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப்போருபது, திருக்கை வழககம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை, தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிகை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை செங்குந்த சிலாக்கியர் மாலை, செங்குந்த வேற்பதிகம், செங்குந்த மரபு விளக்கம், சூருவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த குலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத்திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோ பயிண்டில் பொன்கிலிட் செய்தது, விலை ரூ. 2-8-0.

தபாற்கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம் :—

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
பவழக்காரத்தெரு, சென்னை.




## சமயப் பகுதி

### இந்து தெய்வமூர்த்த தத்துவார்த்த விளக்கம்

(மித்திரன் பகுதி 3, 419-ம் பக்கத் தொடர்ச்சி)

**சந்திரசேகர மூர்த்தம்.**

அநாதிமலமுத்த சித்துருவாய விளங்கும், சாக்ஷாத் சிவபெருமான், முதிர்ந்த பக்தி மேலீட்டினால், தம்மையடைந்து வழிபட்டேத்தும், மெய்யன்பர்கட்கருள் செய்வான் விரும்பி, யருட்டிருமேனி கொண்டருளிய மூர்த்தங்கள் பல, அவற்றுள் நாம் மேலே காட்டிய சந்திரசேகர மூர்த்தமுமொன்று. இது தக்ஷப் பிரசாபதியின் சாபமேற்று, கலைகள் தேயப்பெற்று, ஒரு கலையோடு கைலையடைந்து சரண்புகுந்த சந்திரனை, இறைவன் அச்சாபத்தினின்று நீக்கிச் சோடச கலையும் வளர நல்கி, யவைகள் தேய்வும் வளரவுமாக விருக்க வனுக்கிரஹஞ் செய்து, அவ்வொரு கலையோடு கூடிய சந்திரனைத் தமது முடியின்மீது தரித்த திவ்ய திருக்கோலம். இது தான் சந்திரசேகர மூர்த்தமெனப்படும். சந்திரசேகரரென்பதற்கு திருப்பாற்கடலிற்றோன்றியவனும், அத்திரி மகாரிஷிக்கு அநசூயையிடத்துப் பிறந்த புத்திரனுமான சந்திர பகவானை முடியின்மீது தரித்தவர் என்பது பொருள். சந்திரன் இறைவனின் அஷ்டமூர்த்தத்தி லொன்று. தம்மைப் புகலடைந்த சந்திரனாகிய திங்கட்கொழுந்தை தம்முடிமீது தரித்து ஆதரித்துக் காப்பாற்றியதனால் இறைவனுக்குச் சந்திரசேகரனென்னும் திவ்ய திருநாமம் வழங்கி வரலாயிற்று. வேறொரு ஆதாரவுமின்றி தம்மைப் புகலாகச் சரணடைந்த சுத்தாத்மாக்களுக்கு இறைவன், அவைகள் விரும்பியவாறே இகபர சுகபோக பாக்கியங்களை நல்குகின்றனரென்பது, இம்மூர்த்தத்தினால் நாம் நன்கு அறிந்துகொள்ளக் கிடக்கின்றது. தமது திருவடியிற் சரண்புகுந்த திங்கட் கடவுளை, இடர்நீக்கித் தம் முடிமீது தரித்துக் காத்தலால், யாதொரு பற்றுக்கோடுமின்றித் தம்மிடம் தாழ்ந்து புகலடைந்த ஆன்மகோடிகளின் பூர்வகன்ம இடுக்கணீக்கி மேலாமுயர்பதத்திருத்துவாரென்பது இதனால் உள்ளங்கை நெல்லிபோல் தெள்ளிதின் விளங்குகின்றது. தஞ்சமென்றடைந்தோரைக் காக்குந் தயாநிதி தாமேயென்பதை யிம் மூர்த்தம் குறிப்பிக்கின்றது. இனி சந்திரனைத் தமது முடியிற் றரித்து, இறைவன் சந்திரசேகர மூர்த்தியாயின வரலாற்றைப்பற்றி மீண்டொரு சிறி தாராய்வோமாக. முன்னொரு பதும கற்பத்தில் சத்தியலோகத்துக் கிறைவனாய் விளங்கும் பிரமதேவனது மானத புத்திரர்களி லொருவனாகிய தக்ஷப் பிரசாபதி என்பவன் தான் பெற்ற புத்திரிகளாகிய இருபத்தேழு நட்சத்திரங்களையும், அத்திரி முனிவரின் மனைவியாகிய அநசூயையின் புத்திரனாகிய சந்திரன், மிக்க வனப்புடையோனாயிருத்தல்பற்றி யவனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்து, அம் மருமகனை நோக்கி "உனது மனைவியர்களனைவரையும், ஒரே விதமாகப் பாவித்து பாரபக்ஷமின்றி யன்புபாராட்டித் தழுவிக் களித்திருப்பாயாக." என்று சொல்லி யப்பெண்களைக் கூட்டியனுப்ப, அவ்வாறேயவனும் தினமொரு கன்னிகையைக்கூடிக் களித்துவருங் காலத்தில், தனது மனைவியர்களில் கார்த்திகை, உரோகணி, என்னுமிம்மாதர்க ளிருவருமே மிக்க பேரழகு வாய்ந்தவர்களாதலால், அவர்களிடத்தே அதிக மையல்பூண்டு அவர்களை விட்டுப் பிரியாமல், ஏனையோரை முகநோக்கானாயினன்.

இஃதுணர்ந்த அம்மங்கையர்கள் தனது நாயகனின் கொடுஞ்செயலை நெடுநாட்பொறுத்துப் பார்த்தும் மனஞ் சகியார்களாகித் தமது தந்தையாருக் கறிவிக்க, தக்ஷன் தன்து மருமகனாகிய சந்திரனை வரவழைத்து பலவகையாகப் புத்திமதிகளைக் கூறித் தனது மனைவிமார்களனைவரையும் பேதமின்றிக் கூடிச் சுகித்திருக்குமாறு கட்டளையிட்டனுப்பவும் "தையலார் மயலிற்பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ" என்ற வாசகப்படி, மதிக்கடவுள் தன் மாமன் வார்த்தையைப் பொருட்படுத்தாது, அவ்விரு மாதர்களுடன் மட்டில் கூடிக்குலாவி இன்ப சுகந்துய்த்து மற்றேனையோரைப் பாராமுகஞ்

செய்து வெறுக்கலாயினன். இதுகண்ட அப் பேதையர் மீண்டும் தன் தந்தைபாற் சென்று "எங்கள் நாயகன் தாங்கள் சொல்லியுங் கேளாமல் முன்போலவே அவ்விரு வனிதையர்களுடன் மட்டில் விருப்புடையோனுய் எங்களை வெறுத்து முகம் நோக்காதிருக்கின்றனன். யாங்களென் செய்வோம்" என்று குறைகூறக் கேட்ட தக்ஷன் ஆற்ருெணுச் சீற்றங்கொண்டு அத்திங்கட் செம்மலை நோக்கி "நீ யென் கட்டளைக்கு மாருக மீறி நடந்தமையால் இன்று முதல் தினமொரு கலையாகக் குறைந்து ஒளி மழுங்கிப் பலராலும் இகழப்படுவாய்" என்று சபிக்கச் சாபமேற்ற சந்திரன், அவ்வாறே நாளுக்கு நாள் ஓர் கலையாகப் பதினைந்து தினங்களில் தன் கலைகளெல்லாமழிந்து, ஒரு கலையோடு மனம் வருந்தித் தனக்கு நேர்ந்த ஆபத்தைத் தேவர்கோமானுகிய இந்திரனிடஞ் சென்று முறையிட, அவர் பிரமனிடம் போகுமாறு பணித்தனர். பின்னர் அத்திரி மைந்தன் அவ்வாறே சத்தியலோகஞ் சார்ந்து தாமரைப் பொகுட்டில் வைகும் பிரமதேவரிடம் தன் குறைகளனைத்துங் கூறி விண்ணப்பஞ்செய்து நிற்றலுங் கமலாசனன் பெரிது மிரங்கிச் சந்திரனை நோக்கி "அமிர்தமதியே! தக்கன் என் புதல்வனுயினும் தந்தையென்றெண்ணி எனக் கடங்கி நடவான். அவன் தன் மனத்தின்படியல்லாலொருவர் சொல்லையுங் கேட்பவனல்லன் யானுமவனிடஞ் செல்லேன். பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்து இப்படிப்பட்ட மஹைதைசுவரியத்தைப் பெற்றுன். இப்பொழுது அக்கடவுளையும் அவமதிக்கிறுன். கெடுமதி கண்ணுக்குத் தோற்றுது. இவன் விரைவில் நசித்துப்போவதற்கறிகுறியாக, விப்படிப்பட்ட தீக்குணங்க ளிவனுக்குண்டாயிருக்கின்றன. ஆதலால் பல சொல்லிப் பயனென்ன! பரமசிவனையடைந்து உன் மனக்கவலை யொழிவாயாக." என்று கூறிச் சந்திரனை திருக்கைலாயஞ் செல்லுமாறேவினர். அதுமேற்கொண்டு அச்சந்திரன் திருக் கைலாயகிரியையடைந்து, நந்தியெம்பெருமானருளினுல், முக்கட்பரமன் திருமுன் சென்று பணிந்து தனக்குத் தக்கனுல் நேர்ந்த சாபமுதலிய நிகழ்ச்சிகளை விண்ணப்பஞ்செய்து நிற்றலும்; பரமகருணுநிதியாகிய பெருமான் திருவுளமிரங்கிச் சந்திரனை நோக்கி "ஏ! குளிர்மதியே! அஞ்சற்க! அஞ்சற்க!! தேய்ந்த நின் கலைகளியாவும் பண்டுபோல்செழிவதாக." எனக் கூறி அவனது ஒற்றைக் கலையினை விரிஞ்சனுங் காணுதற்கரிய தமது திருமுடியிற் றரித்தருளினர். அதுகண்ட தக்ஷ சாபமும் கிட்டுதற்கஞ்சி விலகியோடிற்று சிவபெருமான் சந்திரனை நோக்கி இந்த ஒரு கலை இப்படியேயிருக்க நாளுக்குநாள் கலைகளெல்லாம் வளர்ந்து 16 கலைகளும் நிரம்பப்பெற்று மீண்டும் பதினுறு முதல் நாளுக்குநாள் ஒவ்வொரு கலை மறைந்தும் பட்சங்கடோறும் மாறி விளங்கும். எப்போதும் ஒருகலை உன்னை விட்டு நீங்காது என்று அனுக்கிரஹஞ் செய்தனர் என்பது சரித்திரம். இதனுலிவர்க்குச் சந்திரசேகரரென்பதோர் திருநாமம் மெய்தியது. இந்த ஐதீக பாவனையை யுணர்த்தவே, சிவாலயங்களில் இச்சந்திரசேகர மூர்த்திக்குப் பட்சோற்சவம் செய்விக்கப்படுகிறது போலும். தவிர இம்மூர்த்தம் பாசாயுதங்கொண்டு மானேந்தி நிற்றலால் தம்மையடைந்த ஆன்மாக்களின் பூர்வ ஜென்ம கன்மாதி மும்மலப் பாசங்களை யொருங்கே வேறச் சேதித்து ஜென்மப்பிணியகற்றி மனோலயம் நல்கி சிவபோக வின்ப சாகரத் தழுத்துமென்பதைக் குறிப்பிக்கின்றது வரதாபயங்கொண்டமையானது தம்மையடைந்தோர்க் காறுதலளித்து ஜென்மவிடாய் தணித்து தன் திருவடிப்பேற்றை நல்குவோமென்பதையுங் காட்டுகின்றது. கங்கையைத் தரித்திருத்தல் ஜீவர்கள்பால் தண்ணருட் பெருக்கத்தையுடையவர் என்பதை வெளிப்படுத்துகின்றது. சடைமுடி யுடையோனுயிருத்தல் முற்றத் துறந்த முனிவர்கட்கும் இஷ்டசித்தி நல்கி இருநலனுதவுவோன் தானென்பதையுணர்த்துகின்றது. உமாதேவியாராம் சிற்சக்தியாருடன் மருவி நிற்றல் சத்தியென்னும் தனது வல்லபத்தாலே சிருட்டி, திதி, சங்கார, திரோபவ, அநுக்கிரஹாதி பஞ்சகிருத்தியங்களைச்செய்து இவ்வுலகத்தை நடைபெறச் செய்யவல்லவர் தாமே யென்பதையும் இம்மூர்த்தம் நன்கு விளக்குகின்றது. ஆகையால் இந்து சகோதர, சகோதரிகளே!! இத்துணை மாட்சி பெற்றிலங்கும் சந்திரசேகர மூர்த்தத்தை மெய்யன்போடு வணங்கி வழிபாடாற்றி இம்மை நலமியாவுந் துய்த்து, மறுமையின்பச் சிவானந்தப் பெருவாழ்வடைய முன் வருவீர்களாக. இதற்கு நம் வெற்றிவேலுடைக் கொற்றவன் திருவருள் நமக்குத் துணை புரிவதாக. சுபம்.

(தொடரும்.)

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவ சித்தாந்த செங்குந்த சமாஜம்,
கண்டாச்சிபுரம்.



# பொது விஷயங்கள்

## நல்லாரிணக்கம்.

இப்பூவுலகில் முற்றத்துறந்த மெய்ஞ்ஞானிகளைத் தவிர, மக்கள் யாக்கையிற்றேன்றிய நாமெல்லோரும் தத்தமக்கிசைந்த ஒருவருடனே அல்லது பலபேர்களுடனே சகவாசஞ் செய்துகொண்டு உறவாயிருக்கக் காண்கிறேம். ஆனல் சிலர் தம்மறிவு மேலீட்டால் நல்லிணக்கமெய்தி நலனுறவும். வேறுசிலர் "தம் மறிவீனத்தால் புல்லிணக்கமாந் தீயொருறவெய்திக் கேடுறவுங் காண்கிறேம். ஆதலின எத்தகையோருற வெய்தின் (சேர்க்கை அல்லது நேசம்) நலம் பெறலா மென்பதைப் பற்றி யீண்டாராய்ச்சி செய்தலே நாம் எடுத்துக்கொண்ட "நல்லாரிணக்கம்" என்னும் வியாசத்தின் முக்கிய நோக்கம் "நல்லாரிணக்கம்" என்பதற்கு, நல்லார் = உத்தமர், அறிஞர்; (அதாவது கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த ஆன்ருேர்களது இணக்கம் = இசைவு, சம்மதம், சோமானம் (அதாவது கூட்டுறவு, நட்பு அல்லது சிநேகிதம வேண்டுமென்பது பொருள். இவ்விடயத்தைப்பற்றி விவரித்துக்கூற இடந்தரும், மெய்ஞ்ஞானச் செல்வராகிய பட்டினத்தடிகளின் திருவாக்கு பினவருமாறு.

"நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
யல்லாது வேறு நிலையுளதோ"

என்று காணப்படுகின்றமையால் நமக்கு நல்லவர்களுடைய சகவாசம் (சேர்க்கை அதாவது நட்பு) வேண்டுமென்பது பெறப்படுகிறது. அறிவிற்சிறந்த பெரியவர்கள் விரும்புவதைக் குறிப்பாலுணர்ந்து செய்வது "அவர்களைத் தனக்குச் சிறந்த நட்பினராகக் கொள்ளுதல், உலகிலொரு வன்லடையும் பேறுகளெலலாவற்றிலும் அரிய பேறு என்று கூறலாம். இதன் சிறப்பை நோக்கியே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

என்று கூறியிருக்கின்றனர். திருவருட் பிரகாச வள்ளலாராகிய நமது இராமலிங்க சுவாமிகளும் தமது திருவருட்பாவில

"ஒருமையுட னினது திரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவா
ருறவுகல வாமை வேண்டும்."

என்று உத்தமோத்தமர்களாகிய நல்லாரின் இணக்கத்தைப் பெரிதுங் காதலித்துப் பேசுகின்றனர். இதனுல் பளிங்குபோல் கலங்கமில்லா மனத்தினையுடைய பெரியார்களின் சேர்க்கை அதாவது நேசம் வேண்டும் என்பது நன்கு தெளிவாகின்றது. இத்தகை மேன்மையாளரைத் தெரிந்து அவரை யணுகி அவரிடம் நட்பு கோடல் வேண்டு மென்பதை யுணர்த்தவே ஔவைப் பிராட்டியரும்,

"சேரிடமறிந்து சேர்."

என்று வெகு அழகாக நன்மதி கூறுகின்றனர். இனி இத்தகைய நல்லோர்கள் யாவர்? ஏன் அவர்களுடன் இணங்குதல் வேண்டும்? அவர்களிணக்கத்தாற் பெறுமூதியம் யாது?? என்பனவற்றைப் பற்றி யொரு சிறிதறைவாம்.

நாம் மேலே சொன்ன பெரியார்கள் யாவரென்று கவனிக்குமிடத்து பொய் கொலை களவு கட்காமம் என்னும் பஞ்சபாவங்களை யறவே விடுத்து கல்வியறிவொழுக்கங்களினுலும் குண விசேடத்தினுலும் மேம்பாடெய்தி, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, ஜீவகாருண்யம் ஒழுக்கம் முதலிய நற்குண நற்செய்கைகளினுல் நிரம்பப் பெற்றவர்கள் யாவரோ அவர்களே நல்லாரெனப்படுவர். இதனை

"அருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளி [லன்பில்
இருவறு சொல்லினுங் காணத்தகும்."

என்ற பட்டினத்தடிகளின் திருவாக்கு நன்கு வலியுறுத்தும். ஆதலினித்தகைய குண நலத்தினையுடைய மாணபினரைத் தெரிந்து சகவாசஞ் செயதல் வேண்டுமென்பதே நூல்களின் துணிபு. ஏனெனில்,

"நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று."

என்று கூறியிருத்தலினுல் எங்க. குற்றமற்ற நல்ல பெரியார்களைக் கண்டு தெரிசித்தலும்

அவர்கள் சொன்ன சொற்கேட்டு அதன்படி நடத்தலும், அந்நல்லார்களுடைய மேன்மை பொருந்திய குணநிசயங்களைப் பிறருக்குப்போதித்தலும் அன்னார்களுடன் கூடிப் பழகி சகவாசஞ் செய்திருத்தலும் நன்மையைத் தருமென்க. இதுபற்றியே நமது கல்விச் செல்வியாகிய ஔவைப்பிராட்டியாரும் "பெரியாரைத் துணைக்கொள்" என்று பணித்தனர். தவிர திருக்குறளாசிரியரும்

"தம்மிற் பெரியார் தமரா யொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை"

என்று நல்லாரிணக்கத்தைப் பெரிதும் பாராட்டிச் சிறப்பிக்கின்றனர். ஆதலின் நாமெல்லோரும் நல்லார்கள் நட்பைப் பெற்று புல்லோர்கள் தொடர்பை நீக்கவேண்டுமென்பது தெளிவாகின்றது. "நல்லிணக்கமல்லதல்லற் படுத்தும்" என்ற ஔவை வாக்கும் ஈண்டு கவனிக்கற்பாலது.

இனி அத்தகை நல்லோர்களின் சகவாசமுறுவதினாலடையும் பலன்கள் யாவை யென்றாராயுமிடத்துப் பூவுடனே கூடிய நார் புனிதர் முடிக்கணி யாகுமாறுபோல் அப்பெரியார்களிடத்திலுள்ள பெருந்தகைய குணங்கள் யாவும் அவர்களைத் தமராய்க் கொண்டொழுகும் நம்மிடத்திலும் தோற்றப்படும். அங்ஙனம் தோற்றப்படவே நம்மிடத்திலுள்ள தீக்குணங்களெல்லாம், சிறிது சிறிதாக அகன்றுவிடும். சந்தன விருக்ஷத்தைச் சார்ந்த அகில் மரமும் தன் புன்மை நீங்கி மணங்கமழ்தல்போல நல்லோர் சகவாசமுற்ற கீழோர்களும் நலனுறுகின்றனர். இதனை

"பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம்—தேரில்,
சிறியார் சிறுமையும் தோன்றாதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து."

என்ற ஆன்றோர் வாக்கானுய்த்துணர்க. தவிர மேலோர்கள் தம்மை யடைந்த கீழோரை மனமுவந்து கல்வி கேள்விகளைக் கசடறப்போதித்து பேதமையை நீக்கி மேதை யுண்டாக்கி இழுக்கெலா மிரியவொழுக்கம் பயிற்றி தம்மைப் போலவே சீர்மை பெறச் செய்வர். இதனைத்,

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர் எனுமிது வழக்கே"

என்று நம் கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார் கூறிய கவியமுதத்தா லுணர்க. மேலும் நல்லோர்களுடைய சேர்க்கையானது கல்வியில் அவாவும், குருவினிடத்தில் வணக்கமும், பழிப்பிலச்சமும், கடவுளிடத்தில் மிகுந்த பக்தியும், தீயோரிடத்தில் பிரிவுமுண்டாக்கி, நாவில் சத்தியத்தை நிலை நிறுத்தி, யாவரிடத்தும் நன்மதிப்பை யுண்டாக்கும் இவ்விதகுணங்களமைந்த நல்லோருடைய நட்பை எவர்தாம் விரும்பார். இத்தகையோரை நட்பினராய்ப் பெற்றவர்களுக்கு அறம் பொருள் இன்பம் வீடென்பவைகளில் எதுதானரிதாகும். 'கற்பகத் தருவைச் சார்ந்த காகமுமமுதமுண்ணுமல்லவோ. ஆதலினிவர் தம் நட்பின் பெருமையை என்னென்று புகல்வேம். இவர்தம் நட்பே நமக்கு இம்மை மறுமைக் கேற்ற நற்றுணையென்பதைப் புலப்படுத்தவே அறநெறிச் சாரமுடையாரும்

"இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை யுயர்கதிக் குய்த்தலான்--மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரோ
நட்டா ரெனப்படு வார்."

என்று கூறுவாராயினர். இத்தன்மையினோர் பெரு நட்பே அழிவிலின்ப முத்தியாகிய மோக்ஷவீட்டையு மளிக்கவல்ல தென்பதை

"முத்திக்கு வித்தாகு முழுதுணர்ந்தோர்பெருநட்பே
சித்திக்கு நாடோறுந் தேவர்பெறற் கருந்திருவும்
சித்திக்கும் படியருளுஞ் செப்பரிதால்."

என்னுஞ் செய்யுளான் நன்குய்த்துணர்க. ஆதலின் இவ்வித அருமைக் குணங்களமைந்த நல்லோர்களை நட்பினராகப் பெற்றுத் தீயொழுக்கம் நீங்கி இம்மையில் வேண்டிய நலனும் மறுமையில் அழிவிலின்ப முத்தியாம் மோக்ஷத்தையும் பெற்று வாழ்வீர்களாக. இதற்கு நம்மறுமுகக் குமரன்றிருவருள் துணை புரிவதாக.

சுபம்.

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர் சைவ சித்தாந்த செங்குந்தர் சமாஜம்,
கண்டாச்சிபுரம்.

செங்குந்தர் கல்வி நிதிச் சீட்டை ஏராளமாய் விற்று
ஏழைச் செங்குந்த மாணவர்களை ஆதரியுங்கள்.



# செங்குந்த யாத்திரைவாசி

## கடாக்களுக்கு விடைகள்.

எனது அரிய செங்குந்த சகோதரர்களே! யான் திருநீற்றுப் பதிகத்தைச் சொல்லிக்கொண்டே திருநீறு கொடுப்பதைக் கண்ட ஒரு வயோதிகர் எழுந்து வணங்கி சுவாமிகளே! தாங்கள் இப்போது ஓதும் திருநீற்றுப் பதிகத்திற்கு ஒரு பெரியவர் வெகு அற்புதமான அர்த்தம் சொன்னார். அந்த அர்த்தம் இதுவரையில் வேறு யாருக்கும் தோன்றியதாகத் தெரியவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னேதான் அதைக்கேட்டு ஆனந்திக்கும் புண்ணியம் எனக்கு வாய்த்தது. பலர் கூடியிருக்கிற இந்த சமயத்தில் அதை வெளியிட்டுத் தங்கள் அபிப்பிராயத்தையும் கேட்க விரும்புகிறேன் என்றார். யான் புன்னகை செய்து தலையசைத்தேன். முத்து முதலியார் உடனே எழுந்து சபையோரை நோக்கி 'உங்களில் யாருக்காவது சந்தேகங்கள் இருப்பின் இப்போதே சுவாமிகளைக் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம். சுவாமிகள் இங்கு நெடுநாள் இயலாது எனத் தெரிகிறது. கேட்பவர்கள் எல்லோருக்கும் கேட்கும்படி ஒவ்வொருவராகக் கேட்கவேண்டும்' எனக்கூறி உட்கார்ந்தார். நின்றுகொண்டிருந்த வயோதிகர் என்னை நோக்கி சுவாமிகளே! திருநீற்றுப் பதிகத்திற்கு அப்பெரியார் சொல்லியருளிய அர்த்தம் என்னவென்றால் 'செந்துவர்வாய்=சிவந்த பவளம் போன்ற அதரங்களை யுடைய, உமைபங்கன்= உமாபிராட்டியாரை ஒரு பாகத்தில் வைத்தருளியவரும், திருஆலவாயான்=திருஆலவாய் என்னும் க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யுள்ளவரும் ஆகிய, திருநீறே=தேவரீரே! மந்திரமாவது நீறு=மந்திர சொரூபியாயிருப்பவரும் நீர்தான், வானவர்மேலது நீறு=தேவர்களுக்கெல்லாம் மேலாயிருப்பதும் நீர்தான், சுந்தரமாவது நீறு=(சோம) சுந்தரக் கடவுள் என்னும் திருநாமமுடையவரும் அல்லது தெரிசிக்கும் அடியார்க்கு என்ஞான்றும் நவநவமாய்த் தோன்றும் அழியா அழகுடையவரும் நீர்தான். துதிக்கப்படுவது நீறு=தேவராலும் யாவராலும் எப்போதும், ஸ்தோத்திரிக்கப்படுவதும் நீர்தான், தந்திரமாவது நீறு=எப்போன்ற ஆத்யகோடிகள் இகபரபோகங்களைப் பெறுவதற்கு அருந்துணையாயிருப்பவரும் அல்லது 28 சைவாகமங்களா யிருப்பவரும் நீர்தான், சமயத்தில் உள்ளது நீறு=விரிவிலா கனதறிவோர்கள் வேறொரு சமயம் செய்தே எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும் என ஆளுடைய அரசுபணித்துள்ளபடிச் சமயங்கள்தோறும் அவ்வச்சமயத் தெய்வங்களாய் நின்று அவரவர் பக்குவத்திற்கேற்றவாறு அருள் செய்பவரும் அல்லது காலன் உதித்திடும்போது உறும் இடரைக் கடவுள் நீ அறிவாய்! என்றபடி எத்தகைய திண்ணிய நெஞ்சம் வாய்த்தோரும் கலக்கங்கொண்டு இடர்ப்படும் மரண சமயத்தில் உற்றதுணையாயிருப்பவரும் நீர்தான்' என்பதாம். மற்றொரு பாசுரத்தில் இராவணன் மேலது நீறு என்ற விடத்து கைலையங்கிரியைத் தூக்கிய இராவணனுக்குமேலே உமாபிராட்டியார் முதலியோர் பயந்தோட அசையாமலிருந்ததும் நீர்தான் எனப் பொருள் கூறியபோது எனக்கு பேரானந்தம் உண்டாய்விட்டது. சுவாமிகளே! இந்த அர்த்தம் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது பாருங்கள். இதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயத்தை இங்குள்ள யாவரும் தெரிந்து கொள்ளுமாறு சொல்லியருளவேண்டும்' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

யான் சற்று மௌனமாயிருந்து 'கேள்வி கேட்டவர் படித்தவராகவும் தோன்றுகிறார். கேட்ட கேள்வியோ படிப்புவாசனை அறியாதார் கேள்வியாக இருக்கிறது. முத்து முதலியாரோ சபையோரைக் கேள்வி கேட்கும்படித் தூண்டிவிட்டிருக்கிறார். நாம் நடராஜனோடு மாடியில பேசிக்கொண்டிருந்தபோது கீழே நடந்த ஊர்க்கூட்டத்தில் இவ்வாறுதான் முடிவுகட்டியிருக்கலாம் என்று உத்தேசித்ததற்கு இது பொருத்தமாகத்தான் இருக்கிறது. இனி முன்னினும ஜாக்கிரதையாகத்தான இருக்கவேண்டும் என்று எனக்குள்ளே யோசிக்கலானேன். மனதைத் திடப்படுத்திக்கொண்டு எழுந்தேன். அதைக் கண்ட சபையோர் அனைவரும் ஒரே கூச்சலாக 'சுவாமிகள் உட்கார்ந்தே சொல்லவேண்டும்' என்றார்கள். யானும் அவ்வாறே உட்கார்

ந்து என் ஆருயிர்த்துணையாகிய ஆறுமுகப் பெருமானையும் எனது குருமூர்த்திகளையும் தியானித்துக்கொண்டு எனது அரிய செங்குந்த சகோதரர்களே! சொல்லி முடிக்குமுன் சபையிலுள்ளோர் அனைவரும் மூன்று நான்கு நிமிஷங்கள்வரையில் பெருத்த கரகோஷம் செய்து முகமலர்ச்சி யடைந்தார்கள். யான் இன்று இவ்வூருக்கு ஒரு சாதாரண யாத்திரைவாசியாக வந்தேனேயொழிய ஒரு வித்வான் என்றாவது ஒரு சுவாமி என்றாவது சொல்லிக்கொண்டு வந்தேனில்லை. யான் வெகு நாட்களாகப் பிடிவாதம்கொண்ட ஒரு கசடனாக இருந்தேன், திடீரென என்மனம் மாறுதல் அடைந்தது. மாறுதல் அடைந்த சில நாட்களுக்குள் சற்குருமூர்த்திகளைத் தரிசிக்கப்பெற்றேன். நல்லுபதேசமும் பெற்றேன். சில காலம் யாத்திரை செய்யுமாறு கட்டளையும் பெற்றேன். எனது குருமூர்த்திகளால் தரப்பெற்ற க்ஷேத்திரக்கோவையில் கண்டுள்ள க்ஷேத்திரங்களுள் இத்தலமே முதலாவதாகும். இன்று காலை ஸ்நானம் செய்து குளக்கரையில் பூசைமுடித்து வழக்கப்படி திருமுறை பாராயணம் செய்து கொண்டிருந்தேன். கூட்டம் சேர்ந்து விட்டது. பின்னர் நடந்தவற்றை நீங்கள் யாவரும் அறிவீர்கள். யானோ மௌன விரதங்கொண்டவன். அதையும் நீங்கள் அறிந்திருக்கலாம். ஆனால் யான் மேற்கொண்டுள்ள மௌனத்திறகும சாதாரணமாய் சந்நியாசிகள் மேற்கொள்ளும் மௌனத்திற்கும் வித்தியாசமுண்டு. வாயினால் மாத்திரம் பேசாமலிருந்து மனதையும், காயத்தையும் போனபடி யெல்லாம விட்டு மனதிலுள்ளவற்றை ஜாடையாலும் எழுத்தாலும் வெளிப்படுத்துவது எனது கொள்கையல்ல. யான் பேசுவதுண்டு. ஆயினும் பயனற்றவற்றைப் பேசேன். என் மனமும் காயமும் சொல்லிய அளவிலேயே நிற்கும். இதுவே யான் மேற்கொண்டுள்ள மௌன விரதமாகும். இத்தகையேன் உங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்யவேண்டியதாகும் கூடும். ஆகையால் என் பதில் சுருக்கமாகவே இருக்கும். இனி விஷயத்தைக் கவனிப்போம்.

(கேட்ட முதியோரை நோக்கி) 'பெரியவரே! நீர் திருநீற்றுப் பதிகத்திற்குக் கூறிய உரை வெகு வேடிக்கையாக இருக்கிறது. முதலாவது முன்னிலை ஒருமையைக் குறிப்பது நீ என்னும் சொல். மரியாதையின் பொருட்டு நீர் என்று பன்மையில் சொல்வதுண்டு. உமது அர்த்தப்படி நீர் என்னும் சொல்லின் ஈற்றெழுத்து இடையின ரகரமெய்யாக இருத்தல் வேண்டும். ஒரு சமயம உகரச்சாரியை பெற்று நீரு எனவருவதாக வைத்துக்கொண்டாலும் அச்சொல் இடையினரகர உகரத்தையே ஈற்றெழுத்தாகக் கொண்டிருக்கவேண்டும். ஆனால் திருநீற்றுப் பதிகத்திருப்பது வல்லினறகர மெய்யன்றோ? அன்றியும் நீர் என்னும் முன்னிலைச் சொல்லுக்கு திரு என்னும் அடைகொடுக்கும் வழக்கத்தை யாண்டும் கண்டிலம். திருநீரே என்பதற்கு தேவரீரே எனப் பொருள் கொண்டாலும்கூட நீர் என்னும் சொல்லோடு இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐகாரம் சேர்ந்தால் நும்மை என்றாகுமே யொழிய கடைசி பாசுரத்திலுள்ளபடி நீற்றை என்றாமோ? (முதலிய பலவிதத்தாலும் அவர் கூறிய உரை பொருந்தாது என விளக்கிக்காட்டி) திருநீரும் படித்தவராகத் தோன்றுகிறீர். குறும்புத்தனமாக யாரோ கூறியதை குறும்புத்தனமாக நீரும் இங்கு சொல்லவந்தது உமக்குப் பொருத்தமாகுமா? என்றேன். வயோதிகர் எழுந்து வணங்கி 'சுவாமிகளே' மன்னிக்க வேண்டும். தேவாரத்தை இப்போதுதான் கவனித்தேன் என்று வழவழ சமாதானம் சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

பின்னர் அங்கமுத்து முதலியார் என்னும் ஒரு இளைஞர் எழுந்து 'சுவாமிகளே' திருமாலுக்கடிமை செய் நீவினையகற்று என்னும் ஔவையார் வாக்கிற்குப் பலபடியாகப் பொருள் கூறுகிறார்களே அதற்கு உண்மையான பொருள்தான் யாதோ? சுவாமிகள் விளக்கியருள வேண்டும் எனப் பணிந்து நின்றார். இவ்வூரார் முதல்தரமான குறும்பர்கள் போலிருக்கிறது என்று எனக்குள்ளே எண்ணிக்கொண்டு 'நண்பரே' உமது கருத்தை யான் அறிந்து கொண்டேன். பெரியாரைத் துணைக்கொள் பேதமையகற்று என்னும் இடத்தில் பொருள் கொள்ளுமாறே நீர் சொல்லிய விடத்தும் கொள்வீராக. தெய்வமிகழேல் என்னும் அதே ஆசிரியரது வாக்கையும் நீர் மறந்தீர்போலும் எனப் பதிலிறுத்தேன். அங்கமுத்து முதலியார் சுவாமிகளே! இப்போது உண்மைப பொருள் எனக்கு விளங்கிவிட்டது மன்னித்தருளவேணும் என்று சொல்லி உட்கார்ந்தார்.

அடுத்தபடி பழநியாண்டி முதலியார் என்னும் மற்றொருவர் எழுந்து ஐயரே! எனக்கும் எனது நண்பர்களுக்கும் ஒரு சந்தேகமுண்டு. அதாவது நமது செந்தமிழ்க் காவியங்களிலெல்லாம் நாட்டுச்சிறப்புக் கூறுங்கால் வயல்களில் எருதுகள் வேலை செய்வதாகச் சொல்லாது எருமைக்கிடாக்களைப்பற்றிக் கூறியிருப்பதன் காரணம் விளங்கவில்லை. இதைச் சிலர் சிவபெருமானது வாகனமாகிய ரிஷபத்தை ஏரிலும் வண்டியிலும் கட்டி வேலை வாங்குவது பாவமாகையால் கிடாக்களைக்கொண்டு தொழிலாற்றுவதாகக் கூறியுள்ளனர் எனச் சொல்லுகிறார்கள். உண்மைக்கருத்து எங்களுக்கு விளங்கவில்லை என்றார். யான் சபையோரை நோக்கி 'அன்பர்களே! இது ஒரு சாதாரணமான கேள்வியே யாகும். இலக்கணத்தில் சிறிது பயிற்சியுள்ளவர்களுக்கும் இது நன்கு புலனாகும். பசுவும் எருதும் முல்லை நிலத்திற்குரியவைகள் எருமை மருத நிலத்திற்குரியது. மருத நிலத்தின் வளப்பத்தைக் கூறுமிடத்து அந்நிலத்திற்குரிய எருமையைப்பற்றிக் கூறுவதுதான் சரி. ஆண்டு எருதைப்பற்றிக் கூறுவது திணைமயக்கமாகும் என்னும் கருத்தடங்கிய ஒரு சிறு உபந்யாசம் செய்தேன். அச்சமயம் நானிலப் பாகுபாடுகளைப்பற்றியும் அவற்றிற்குரிய பொருள்களைப்பற்றியும், திணைமயக்கத்தைப்பற்றியும் அதைக் கூறுவதன் கருத்தைப்பற்றியும் நன்கு புலனாகுமாறு மேற்கோள்களோடு விளக்கிக் கூறினேன். அங்கமுத்து முதலியார் 'சுவாமிகளே! விளங்கிவிட்டது இப்போது' என்று சொல்லி உட்கார்ந்தார்.



பிறகு சில இளைஞர்கள் எழுந்து சைவத் திருமுறையிலும் வைணவப் பிரபந்தத்திலுமிருந்து சில பாசுரங்களைச் சொல்லி சைவ வைஷ்ணவ சாம்பிரதாயங்களுக்குப் பொருத்தமற்றதும் விநோதமானதுமான அர்த்தங்கள் சொல்லி என் அபிப்பிராயத்தைக் கூறுமாறு கேட்டார்கள். யான் பொருளமையாக அவ்வர்த்தங்கள் இலக்கணத்திற்கும் மதசாம்பிரதாயத்திற்கும் முற்றிலும் பொருத்தமற்றவை என விளக்கிக்காட்டி சிவபக்தியில் மேம்பட்டு விளங்கிய நவவீரர் பரம்பரையில் தோன்றிய உங்களுக்கு இத்தகைய குதர்க்கவாதங்களும் குறும்புத்தனமும் கூடாதென்றும் குறும்புத்தனத்தால் பூர்வம் செங்குந்தர்கள் திருவண்ணாமலை பேரூர் முதலிய தலங்களில் பெற்ற சாபத்தைப்பற்றியும் நீண்டதோர் உபந்யாசம் செய்தேன். சபையிலுள்ளோர் குதர்க்கவாதியை எள்ளி நகையாடினார்கள். அவர்களும் வெட்கித் தலைகுனிந்தனர்.

பின்னர் என் அருகே உட்கார்ந்திருந்த இளம்பூரண முதலியார் எழுந்து 'சுவாமிகளே! நமது முன்னோர்களாகிய நவவீரர்கள் சோழ நாட்டிற்கு வந்ததைப்பற்றியும் அன்னோர் வழித்தோன்றி சோழமன்னரிடத்துச் சேனைத்தலைவர்களாகவும், போர்வீரர்களாகவும் இருந்துவந்த செங்குந்தர்கள் எக்காலத்தில் எக்காரணத்தால் நெய்தல் தொழிலை மேற்கொண்டார்கள் என்பதைப் பற்றியும் நம் முன்னோர்கள் வெளிநாட்டிலிருந்து சோழநாட்டில் குடி ஏறினார்களா? அல்லது தமிழ் நாட்டிலேயே இருந்தவர்களா என்பதைப் பற்றியும் நாடு வகுத்தது எக்காலத்தில் என்பதைப்பற்றியும் தற்கால சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் அபிப்பிராயம் என்னவென்று விளங்கவில்லை. இவற்றைக் குறித்து நாம் இதுவரையில் கந்தபுராணம் ஈட்டிஎழுபது முதலிய நூல்கள் வாயிலாகமாத்திரமே ஒருவாறு அறிந்துள்ளோம். சரித்திர ஆராய்ச்சி முறையில் சொல்லியருளும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன் என்று சொல்லி உட்கார்ந்தார்.

இந்த இளம்பூரண முதலியாரைப்பற்றி நமது வாசகர்கள் தெரிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகையால் எனக்குத் தெரிந்த இரண்டொரு விஷயங்களைப்பற்றி யான் சொல்லவிரும்புகிறேன். பின்னர் யான் விடுத்தவிடையினைக் கூறுவேன். இளம்பூரண முதலியார் விடாமுயற்சியும் சுருசுருப்பும் உள்ள ஒரு செங்குந்தவாலிபர் இவருக்குக் கல்வியில் ஊக்கமூட்டிய இவரது ஏழைத் தந்தை ஐந்து வருஷங்களுக்கு முன்னரே இறந்துவிட்டார். ஆயினும் கொஞ்சமேனும் ஊக்கம் தளராது சிற்றுயிர்க்குற்ற துணை கல்வியின் ஊங்கில்லை என்ற ஓரே கருத்தைக்கொண்டு பல நண்பர்கள் உதவி பெற்றும் சில சமயங்களில் நெசவுத்தொழில் செய்தும் இரவு பகலாகப் படித்து ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் முதல் வகுப்பில் இராஜதானியில் இரண்டாவதாகத் தேறினார். அதற்குமேல் படிக்க அவாவுடையவராயிருந்தும், ஆதரிப்பாரின்மையால் படிப்பை அதனோடு நிறுத்திக்கொண்டு சென்னையிலுள்ள ஒரு பிரபல வியாபாரியின் சிபார்சினால் வடநாட்டிற்குச் சென்று மேல்நாட்டு வியாபாரமுறைகளைக் கற்றுவருகிறார். ஆங்கிலத்தில் மிகவும் வல்லவர். அரசாங்க உத்தியோகத்தில் அமர அவருக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. சரித்திர ஆராய்ச்சியுமுடையவர். கூடிய சீக்கிரம் இவர் ஒரு பிரசித்திபெற்ற வியாபாரியாவார் என்பதில் ஐயமில்லை. யான் சாப்பிடுவதற்கு முன் சுமார் 20 நிமிஷம்வரையில் இவருடன் பேசிக்கொண்டிருந்தேன். சாப்பிடும்போதும் என் பக்கலிலேயே உட்கார்ந்து சாப்பிட்டார். இனி யான்

அவருக்கு அளித்த பதிலைக் கூறுகிறேன். யான் முதலில் இளம்பூரணரை நோக்கி எனது அரிய வாலிப நண்பரே! நமது குலவரலாற்றைப்பற்றி இச்சபையில் சொல்ல நீர் எனக்குச் சந்தர்ப்பம் அளித்ததைப்பற்றி மிகவும் சந்தோஷிக்கிறேன்.

(தொடரும்.)

## கல்விநிதிச் சீட்டு விற்ற அன்பர்கட்கு அறிக்கை

சீட்டு வாங்கியவர்களிற் பலர் தாங்கள் வாங்கிய சீட்டின் கவுண்டர்பாயிலும் பணமும் வந்து சேர்ந்து விட்டதா என்பதைத் தெரிவிக்குமாறு கடிதங்கள் எழுதுகின்றனர். சீட்டுப் புத்தகம் விற்றவர்களிற் பலர் இன்னும் திருப்பியனுப்பாதிருப்பதால் வந்த கடிதங்கட்குப் பதில் எழுத முடியாமலிருக்கிறது. ஆகையால் பூரா புத்தகங்கள் விற்றவர்கள் உடனே கவுண்டர்பாயிலேயும் அதற்குப் பணத்தையும் விரைவில் அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

## செங்குந்தர் கல்விநிதி

இக் கல்விநிதி நமது முதலாவது மகாநாட்டின்கண் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் நம்மவர் கல்வி அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டது.

இதற்கு அன்பர்கள் மகாநாட்டின்கண் நிறைவேறிய தீர்மானத்தின்படி

1. மகமை ஏற்பாடு செய்யவும்
2. உண்டி வசூலித்து அனுப்பவும்
3. சடங்குகளில் கட்டணம் செலுத்தவும்
4. ஊர்ப்பொதுப் பணங்களிலிருந்து பங்கு தரவும்,
5. நன்கொடை அளிக்கவும்

வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
பி. சே. மாணிக்கவாசக முதலியார்,
தலைச்சங்க அமைச்சர்கள்.



## நமது இயக்கத்தை பலப்படுத்துவ தெப்படி?

### தீவிரபிரசாரம்.

சென்னையில் நிறுவப் பெற்றுள்ள நமது தலைச்சங்கமானது இதுவரையில் தூங்கிக்கொண்டு கிடந்த நம்மைத் தட்டியெழுப்பிவிட்டது. அதையும் சட்டை பண்ணாது கும்பகர்ணனைப் போல் கொரட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தவர்களை நமது முதலாவது மகாநாடு விழிக்கச் செய்தது. இன்னும் சிலர் பாதி உறக்கத்திலும் பாதிவிழிப்பிலுமிருக்கிறார்கள். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமல்லவா? ஆகையால் பாதி உறக்கக்காரரையும் தீவிர பிரசாரமென்னும் பறைசாத்தி விழிக்கச் செய்யவேண்டும். நமது தலைச்சங்கத்தார் இதுவரையில் மற்றைய இனத்துச் சங்கத்தார் 20, 25 வருஷங்களிலும்செய்து முடிக்காத வேலையை இரண்டொரு வருஷங்களில் செய்திருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். ஆயினும் நாம் செய்ய வேண்டிய முயற்சியில் நூற்றில் ஒரு பங்குகூட இதுவரையில் செய்ததாக நான் கருதவில்லை. நமது இயக்கத்தையும், நமது மித்திரனையும் பற்றி இன்னும் அறியாத செங்குந்த கிராமங்கள் நூற்றுக் கணக்காக இருக்கின்றன என்பது மிகையாகாது, நமது முதலாவது மகாநாடு நடந்த கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள சில செங்குந்த கிராமங்களுக்கே மகாநாடு நடந்த விஷயமே சரியாகத் தெரியாதென்றால் மற்றைய ஜில்லாக்களைப்பற்றி சொல்லுவானேன். எங்கள் இனத்தவரும் கூட ஏதோ ஒரு ஊரில் மகாநாடு கூடினதாகச் சொல்லக்கேள்வி என்று சொல்லும் பல செங்குந்தர்களை நான் சென்ற இரண்டொரு மாதங்களில் சந்தித்திருக்கிறேன்.

### கிளைச்சங்கங்கள்.

செங்குந்தர்கள் வதியும் ஒவ்வொரு கிராமத்திலும் நமது தலைச்சங்கத்தோடு இணைக்கப்பெற்ற கிளைச்சங்கங்கள் நிறுவப்பெறல் வேண்டும். உலகத்திலுள்ள செங்குந்தர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் எண்ணமுண்டாகுமாறு ஒரே தலைச்சங்கத்தில் சேர்ந்து ஒற்றுமையோடு அதை வளர்க்க வேண்டும். ஊர்க்கட்சிகளை ஒழிக்கவேண்டும். சிலர் சங்கத்திற்குப் போதிய வேலை செய்யப் பணமில்லையே என நினைக்கிறார்கள். அதைப் பற்றிய கவலை எனக்குக் கிடையவே கிடையாது. நாமெல்லோரும் அற்ப வித்தியாசங்களையும், அபிப்பிராய பேதங்கள் ஏதேனுமிருக்குமாயின் அவற்றையும் ஒழித்துவிட்டு ஒரே மனதாய் நின்று உழைத்தால்தான் சமூக மகா சபையிலே செங்குந்த சமூகம் ஒரு பெரிய சமூகமாகக் கருதப்படவேண்டும், நாமும் புகழ் பெற்ற ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களாக மதிக்கப்பெறவேண்டும், என்ற உண்மையான உணர்ச்சியானது நம்மிடையே உண்டாகும்படிச் செய்துவிடுவோமாயின் பிறகு நாம் எதைத்தான் சாதிக்க முடியாது. பணம் ஏராளமாகக் குவியும், இதுவரையில் நம்மவர்கள் கட்டியுள்ள கோயில்களும் மடங்களும் செய்துவரும் தர்மங்களும் கணக்கிலடங்காவென்றே சொல்லலாம். நம்மவர்கள் பெரும்பாலும், தெய்வபக்தியும், தருமசிந்தையும் உடையவர்களானபடியால் அவ் வழிகளில் செலவிடுகிறார்கள். சங்கம் செய்துவரும் இயக்கத்தால் நம் சமூகம் முன்னேற்றமடையும் என்கிற எண்ணமாத்திரம் தோன்றிவிடுமாயின் அதுவே போதுமானது.

இது முற்றுப்பெற வேண்டுமாயின் அதிதீவிர பிரசாரம் செய்து ஆங்காங்கு கிளைச்சங்கங்கள் ஸ்தாபித்து நமது மித்திரனுக்குக் குறைந்தது 25000 இருபத்தையாயிரம் சந்தாதார்களாவது சேர்க்கவேண்டும். இப்போதுள்ள பிரசாரகர்கள் போதாது. இன்னும் சிலர் இதே வேலையாக உழைக்க முன்வரவேண்டும். பிரசாரகர்களுக்குத் தேவையான உதவிபுரிய ஒவ்வொரு ஊரிலும் குலாபிமானிகள் இல்லாமற் போகவில்லை. இக்குலாபிமானிகளின் பேருதவியினாலேயே தலைச்சங்கத்தார் மிகுந்த ஊக்கத்தோடு இத்துணைப் பிரசாரமாவது செய்ய இயன்றது என்பதையும் மறக்கலாகாது. பிரசாரகர்களை அன்புடன் வரவேற்று அவர்கள் தொண்டிற்கு மனமுவந்து உதவிபுரிந்து வரும் அன்பர்கள் பெயர்கள் அடங்கிய ஜாப்தா ஒன்று தயாரித்து வெளியிடலாமென்றும் கருதுகிறேன். ஆகையால் நமது இயக்கத்தை வரவேற்போர் நிரம்ப இருக்கிறார்கள். சுய நலமற்ற தொண்டர்கள்தான் தேவை.

### கிளைச்சங்கங்களின் உரிமைகள்:

இவைதவிர தலைச்சங்க நிர்வாகிகள் கவனிக்கவேண்டிய விஷயம் மற்றொன்றுண்டு. பல கிராமங்களிலுள்ள கிளைச்சங்கப் பிரதிநிதிகள் சேர்ந்த கூட்டமே தலைச்சங்கப் பொதுக்கூட்டமென்றும், இப்பிரதிநிதிகள் கூட்டத்தைத்தவிர தலைச்சங்கமென்பது தனியே கிடையாதென்றும், அவர்கள் தங்களுக்குள்ளேயே தலைச்சங்க நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கிறார்கள் என்றும், ஆகையால் சங்கத்தின் சகல பொறுப்பும் அவர்களுக்கே உரியதென்றும் தலைச் சங்கத்தின் சட்டதிட்டங்களை வாசித்துணர்ந்தோர் நன்கறிவர். வருஷத்திற்கொருமுறை மகாநாடு முடிந்த மறுதினம் இக்கூட்டம் கூடுகிறது. அதற்கு ஒவ்வொரு கிளைச்சங்கமும் இரண்டு கனவான்களை மாத்திரந்தான் பிரதிநிதிகளாக அனுப்பக்கூடும். ஒவ்வொரு ஜில்லாவும் அப்பிரதிநிதிகளுக்குள்ளே இரண்டு கனவான்களைத்தான் நிர்வாகஅங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கஇயலும் என்பது தற்போதுள்ள சட்டம். தலைச்சங்கத்துப் பொதுக் கூட்டத்திற்கு அவசியம் வரவேண்டிய முக்கியஸ்தர்கள் பல ஊர்களில் இரண்டுபேருக்கு மேற்பட்டிருப்பார்கள். பிறகு தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினராக இருந்து குலத்தொண்டு செய்ய அவாவுள்ளவர்களும், முக்கியஸ்தர்களும் ஒவ்வொரு ஜில்லாவிலும் பலர் இருக்கிறார்கள். ஆகையால் தலைச் சங்கக்கூட்டத்திற்கு ஒவ்வொரு கிளைச்சங்கத்திலிருந்தும் ஐந்து பிரதிநிதிகளும் தலைச்சங்க நிர்வாக சபைக்கு ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் ஐந்து அங்கத்தினர்களும் தேர்ந்தெடுத்தல் வேண்டுமென சட்ட திட்டங்களை மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தற்போதுள்ள சட்டப்படி தலைச் சங்கத்துப் பொதுக்கூட்டத்திலும், நிர்வாக சபையிலும் இருக்கவேண்டியவர்கள் பலர் இருப்பதற்கு இடமில்லாமலிருக்கிறது. அநேக கனவான்கள் உடனிருந்து அதாவது நிர்வாக சபையில் இருந்து உழைக்கத் தயாராயிருப்பதாகக் காரியதரிசி அவர்களுக்குத் தெரிவித்திருப்பதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் சட்டதிட்டங்களை மேற்கூறியவாறு திருத்தி தொண்டியற்ற அவாவும் அன்பர்களுக்குச் சந்தர்ப்பம் தரவேண்டுமென சென்ற பொதுக்கூட்டத்தில் நியமிக்கப்பட்ட சட்ட திருத்த சபையாரை வேண்டிக் கொள்ளுகிறேன்.

### மகாநாடு.

ஒவ்வொரு கிராமத்திலும் கிளைச்சங்கம் ஸ்தாபிக்கவேண்டும் என்கிற எண்ணம் நம்மவரிடையே உண்டாக்க வேண்டுமாயின் கீழே குறித்துள்ள முறையை அநுசரிக்கவேண்டும். அதாவது நமது மகாநாட்டிற்குக் கிளைச்சங்கங்களின் மூலமாகவரும் பிரதிநிதிகள் மாத்திரமே டெலிகேட்டுகளாகக் கருதப்படல் வேண்டும். அவர்களுக்கே மகாநாட்டில் நடைபெறும் விஷயங்களில் கலந்து பேசும் உரிமையும், தீர்மானங்களை ஆதரித்தோ எதிர்த்தோ பேசும் உரிமையும், ஓட்டுக்கொடுக்கும் உரிமையும் தரல்வேண்டும். கிளைச்சங்கங்களில்லாத ஊர்களிலிருந்து வருவோர் சாதாரண விசிடர்களாகவே கருதப்படல் வேண்டும். அன்னோருக்கு மேற்கூறிய உரிமைகள் யாதொன்றும் மகாநாட்டில் இருத்தல்கூடாது. அன்றியும் கிளைச்சங்கங்களின் மூலமாக வரும் டெலிகேட்டுகளுக்கு விதிக்கும் கட்டணத்தைக் காட்டிலும் விசிடர்கள் கட்டணம் கொஞ்சமாவது அதிகமாக இருக்கவேண்டும். அதாவது மொத்தத்தில் கிளைச்சங்கங்களின் மூலமாக வருவோர்க்கு மகாநாட்டில்பல சுதந்தரங்கள் உண்டு. கிளைச்சங்கம் இல்லாத ஊரிலிருந்து வருவோர்க்கு அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை விசிடர்களாக இருந்து பார்ப்பதைத்தவிர வேறு யாதொரு சுதந்தரமுமில்லை. கிளைச்சங்கம் உள்ள ஊர்களுக்கும் இல்லாத ஊர்களுக்கும் மகாநாட்டில் இந்த வித்தியாசம் இருந்தால்தான் ஒவ்வொரு கிராமத்திலும் கிளைச்சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்கிற அக்கறை உண்டாகும். காங்கிரஸ் முதலிய பொது ஸ்தாபனங்களின் மகாநாடுகளிலும் இம்முறைதான் கையாளப்பட்டு வருகிறதென்பதும் கவனிக்கத்தக்கது.

தலைச்சங்க நிர்வாகிகள் மேற்கூறியவற்றைக் கவனித்து இரண்டாவது மகாநாடு கூடுமுன் நமது மித்திரன் மூலமாகவும், பிரசார மூலமாகவும், துண்டுப் பத்திரிகைகள் மூலமாகவும் தெரிவித்து ஆங்காங்கு சங்கங்கள் நிறுவும்படித் தூண்டுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

வா. பொன்னம்பலம்.

---

### விகடம்.

ஒருவன்—ஏனய்யா என்னைப்பின் தொடர்ந்து வருகிறீர்கள்.

மற்றவர்—உங்களுடன் இருந்தால் என் பெண்சாதி என்னை ஒன்றும் செய்யமாட்டாள்.

* * * *



## சுகாதாரப் பகுதி

### ஓஜோன் (Ozone).

தொகுதி 3 பகுதி 8, 307-ம் பக்கத்தொடர்ச்சி

பிராணவாயுவின் சக்திக்கொத்த மற்றோர் காற்று ஓஜோன் (ozone) ஆகும்.

பிராணவாயு தங்கிய இடங்களில் மின்சாரம் புக ஓஜோன் வெளியாகிறது. இரசாயன சாஸ்திரிகள் பற்பல விதங்களிலும் இதை வெளியாக்குகின்றனர்.

இதற்கு நீல நிறமும், ஓர்வித கெந்தக வாசனையும் உண்டு. ஆகாயம் நீல நிறமாகக் காணப்படுகிறது. ஓஜோன் நீல நிறமான காற்று. ஆகையால் ஆகாயத்தில் ஓஜோன் இருக்கிறதாகவும் தீர்மானம்.

ஓஜோன் பிராணவாயுவைக் காட்டிலும், ஒன்றரை பங்கு கனமும், அதிக சக்தியைத் தன்னுள் அடக்கியும் உள்ளது. இன்னும் வஸ்துக்களைப் பஸ்பஞ்செய்து சுத்தஞ்செய்வதில் பிராணவாயுவைக் காட்டிலும் இதற்கு அதிக சக்தி உண்டு. ஆகையால் தான் இதை ஜலத்தையும், காற்லறயும சுத்தம் செய்வதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். இது நீலி (indigo) யின் நிறத்தைச் சுலபமாகப் போக்கக்கூடியது.

இது வெகு சுத்தமான காற்றிலும் ஜன அடர்த்தியற்ற இடங்களிலும், பரவி இருக்கும். கடல் பக்கங்களின்மேல் புயல் காற்று வீசிவிட்ட பிறகு அங்கு ஓஜோன் பரவி இருக்கும்.

இது சிறறளவாயிருக்கு மட்டும் மனிதர்களுக்குச் சுகமே ஒழிய, அதிகரித்தால சுவாசக குழாயைக் கெடுக்குந் தன்மையை உடையது. ஆனால் இது சாதாரணமாக, பல இடங்களிலும, சுயமாகத் தங்கி இருத்தல் கடினம். கடறகரை ஓரமாகவுள்ள ஊாகளில் சமத்துவமாகவும, மனிதர்களுக்குச் சுகத்தைக கொடுக்கக்கூடிய தன்லமயையுடையதாகவும் இருக்கின்றது. ஆலகயால் தான் முக்கியமாக க்ஷய ரோக வியாதியஸ்தர்களுக்கு இத்தகைய ஊர்கள் மிகவும் அனுகூலம. ஆகவே இததகைய கொடிய வியாதியஸ்தர்களுக்கே இக்காற்று சுகத்லதக் கொடுப்பதெனறுல் சாமானிய மனிதர்களுக்கு இன்னும் அதிக சுகத்தைக் கொடுக்கும் என்பதில் என்ன சந்தேகம்? இதை அனுசரித்தே இக்காற்றின் விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாக இங்கு எடுத்துக் காட்டியது.

### இலவணவாயு (Nitrogen).

இனி இலவணவாயுவை கவனிப்போம். இதுவும் காற்றிலும், மற்ற இடங்களிலும், பொருள்களிலும், பிராணவாயுவைப் போலவே அவசியமானதாக இருப்பதைக் காணலாம்.

இதற்கும் நிறம், சுவை, வாசனை கிடையா. பிராணவாயுவைப் போல் நீரில் இது அதிகமாகக் கலறயாது. காற்றிலுள்ள பிராணவாயுவை நீக்க, இந்த உப்பு வாயு கிடைக்கிறது. ஓர் மூடிய ஜாடியில் எரி பாஷாண (phosphorus) ததை எரிப்பதனுல் இதைச் சொல்பமாக எடுக்கலாம். அதிகமாக வேண்டுபவர் சில கருவிகளைக் கொணடு செந்நிறமாகக் காய்ச்சிய செப்புக் கம்பியின் மேல், காற்றைவிட, அஙகு பிராணவாயு செம்பில் கலந்து விடவே, உப்பு வாயுவை வெளியாக்கி, வேறு பாத்திரங்களில் பிடித்துக் கொள்ளுகிறார்கள்.

இவ்வாயு கலந்த பொருள்கள் அனேகம் இருக்கின்றன. இன்னும் நிலத்திலும், எருக்களிலும் தாவரங்களிலும், கனிவாக்கங்களிலும் ஜீவராசிகளின் உடல்களிலும் இருக்கக காணலாம். இது அவ்விதம் வியாபித்திருப்பது அத்தியாவசியமாக இருக்கிறது. ஆலகயால தான் சில வஸ்துக்கள வெடிக்குந் தன்மைக்கும், அவசியமான நிறங்களையும், கண்ணைக் கவரும் அற்புதமான பல வர்ணங்களைக் கொடுககுங தன்மைக்கும் உபயோகப் படுத்துகின்றன. இன்னும் தேகவளமைக்கும் வேண்டி இருக்கிறது.

காற்றிலிருக்கும் ஆக்லைட்ஸ் ஆப் நைட்ரஜன் (Oxides of Nitrogen) எனனும் பொருள மாரிக்காலங்களில், பூமியிலிறங்கி, செடி, கொடி, புல், பூ முதலிய வஸ்துக்களுக்கு வேணடிய உணவை அளிக்கிறது.

மனிதர்களுக்கு வேண்டிய பதார்த்த வகையராக்கள், நெல முதலிய போஜன வகையராக்கள், கீரை தினுசுகள், பழவர்க்கங்கள், இன்னும் பல தாவர ஜீவோற்பததிகளுக்கும இது உதவுகிறது.

இதை, அவைகள், பூமியினின்று தங்கள் வேர் மூலமாக ஏற்றுக்கொள்ளுகின்றன. இங்கு அவற்றிலுள்ள உப்பு வாயு, தாவர ஜீவோற்பத்தியில், ப்ரோடீன்ஸ் (Proteins) என்னும் வஸ்துவாகிறது. பின்னும் தாவரங்கள் பட்டு பூமியில் கிடக்குங்கால் அவைகளிலுள்ள ப்ரோடீன்ஸ் நிலத்தில் கலக்கிறது. இன்னும் மிருகாதிகள் தழை, புல், கொடி முதலியவைகளையும் புசிப்பதனால், அங்குள்ள, ப்ரோடீன்ஸ் அவைகளின் உடலில் கலந்து, தங்கி, உபயோகமாகி சில வேறுபாடுகளை அடைந்து அனேக. வித இந்திரிய (organic) வஸ்துக்களாக மனிதர்களினின்றும், மிருகங்களினின்றும் வெளியாகி பின்னும் நிலத்தில் கலக்கிறது. ஆனால் நேராகவே தாவரங்களுக்கு அவை உணவாகாமையால் நைட்ரேட்ஸ் ஆக மாற்ற கடவுளின் அபார சக்தியை இங்குக் கவனியுங்கள் நிலத்தில் பாக்டீரியல் ப்லோரா (Bacterial flora) என்னும் ஓர் அற்புத தொழிலை ஏற்படுத்தி இருக்கிறார். அதன் மூலமாக அச்செயல் நடந்து வருகின்றது. அதாவது நிலத்தில் பாக்டீரியா (Bacteria) என்னும் ஓர்வித பூச்சிகளை வேண்டிய வரையில் உண்டாக்கி அவைகளுக்கு இத்தொழிலை நடாத்த சக்தி கொடுத்திருக்கிறார். அவை பூமியில் கிடக்கும் தாவரங்களை அருகச் செய்து முதலில் நவாச்சார வாயு (Ammonia) வாக மாற்றுகின்றன. பிறகு பிராணவாயுவின் உதவியால் ஓர்வித பூச்சிகள் நவாச்சார வாயுவிலுள்ள இலவண வாயுவை நைட்ரைட்ஸ் (Nitrites) ஆக மாற்றுகின்றன. மற்றோர் வித பூச்சிகள் நைட்ரைட்ஸை நைட்ரேட்ஸ் (Nitrites) ஆக மாற்றுகின்றன.

அங்ஙனம், ஆகவே தாவரங்களுக்கு உணவாகிறது.

இங்ஙனமாக மாறி மாறி ஒன்றுக்கொன்று உபயோகப்பட்டுக்கொண்டு வரும் விசித்திரத் தன்மையைப் பாருங்கள்.

ஆகவே உப்பு வாயு தாவர ஜீவோற்பத்திகளுக்கு எவ்வளவு உபயோகப்படுகிறதென்பதை ஆராய்ந்தோம். நிற்க, இவ்வுப்பு வாயு நெருப்பை எரிக்கச்செய்வதற்கும், ஜீவஜெந்துக்களின் ஸ்வாச உதவிக்கும் ஏற்றதல்ல அதற்கு பிராணவாயு தான் ஏற்றது. ஆனால் இது பிராணவாயுவை காற்றில் தணிக்கச் செய்யும் குணமுடையது. இக்குணம் காற்றில் அத்தியாவசியம். இல்லையேல், பிராணவாயு, ஆகாயத்தில், பொருள்களைத் தகித்துவிடும் ஆகவே பிராணவாயு, நமக்கு பிராணாதாரமாக இருக்கினும், தனியாக, நாம் சுவாசிக்க முடியாது. ஆகையால் தான் சர்வஜீவதயாபரர் உப்பு வாயுவைக் காற்றில் கலந்து வைத்திருக்கிறார்.

மனிதர்களின் சுகாதாரத்திற்கு முக்கியமாக வேண்டியவை தூ நறுங்காற்றும், சுத்த சத்துள்ள ஆகாராதிகளும் அல்லவா? பிராணிகள் காற்றை மட்டும் உட்கொண்டு ஜீவித்திருக்க முடியாது. சுக கரமான ஆகாராதிகளும் வேண்டி இருக்கிறது. ஆகாராதிகள் விர்த்தியாக இவ்வுப்பு வாயு எவ் எவ்விதங்களில் உபயோகமாகிற தென்பதையும் விசாரித்தோம்.

இங்ஙனமாக உப்பு வாயுவும் பிராணவாயுவும் ஒற்றுமைப்பட்டு, தங்கி, அதன் அதன் தொழில்களை சரிவர நடாத்தி இப்பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகளையும் விர்த்தி செய்கின்றன.

இதை நம்மவர்கள் அதிகமாக கவனிக்க வேண்டி இருக்கிறது. இவைகளின் ஒற்றுமையினால் உண்டாகும் நன்மைகளைப் பார்த்தோமல்லவா.

சாதாரண ஜடபதார்த்தங்களுக்கே, ஒற்றுமைத்து நன்மையைப் பயக்கக்கூடிய தன்மை இருக்க நம்மினத்தவர்கள் மட்டும் ஒற்றுமை எனும் சத்புருஷனை அருகில் அணுகா வண்ணம் தூரத்தில் தூரத்திவிட்டு; கக்ஷி என்னும் சகுனி மாமனை வெகு வினயத்துடன் அருகில் அனுசரித்துக்கொள்ளும் கொடுமை என்னே? யோசித்து உணருங்கள். தீர்க்காலோசனை செய்யுங்கள், வீண் பிடிவாதங்களை விடுங்கள், சென்ற நாட்கள் சென்றிடினும், முன்னேற்றமடைய வேண்டின், இதை யோசித்து, முன்னுக்கு வந்தவர்களுடன் கலந்தும, அக்லொற்றவர்களுக்கு உதவ்புரிந்தும்; தாஙகளும் பிராணவாயுவை சாந்தப்படுத்தி பிறருக்கு உபயோகமுள்ளவை ஆக்கும் உப்பு வாயுவின் தன்மை பூண்டு, கக்ஷி பேதங்களை உண்டாக்குபவர்களைச் சாந்த சீலர்களாக்கி ஒற்றுமைப் படுத்தி பிறருக்கு நன்மையைப் பயக்குமாறு பாடுபட வேண்டியது அத்யாவசியம்.

மா. பரமகுருநாத முதலியார்.
சானிடேரி இன்ஸ்பெக்டர், மயிலாப்பூர்.



## கண்டவிடமெல்லாம் கக்கூஸா ?

நம் நாட்டில் தெருப்பக்கங்களிலும், ஆற்றங்கரை குளக்கரைகளிலும், மைதானங்களிலும் மலஜலங் கழிப்பது மிகவும் சகஜம். வீட்டில் அழகிய கக்கூஸ் இருந்தாலுங்கூட இம்மாதிரி இடங்களில் மலஜலம் கழிக்கப் போனதென்றால் அதிக திருப்தி. கக்கூஸ் கட்டினபடியே யிருக்கும்! அதிலும் ஆற்றங்கரை, குளத்தங்கரை யென்றால் மிகவும் விசேஷம். அங்குதான் ஆண் பெண் எல்லோரும் ஆவலாய் ஆபாஸம்செய்வது. பாவம்! இக்கெட்ட வழக்கத்தினால் விளையும் தீங்கு இன்னும் அனேகருக்குத் தெரியவில்லை போலும்! இதைவிடக் கொடிய பாவம் வேறொன்றுமில்லை. ஆறு குளங்களின் நீரை ஆபாசப்படுத்துவது, இந்த வழக்கந்தான். காலரா சீதபேதி, வயிற்றுப்போக்கு முதலிய வியாதிகள் பரவுவதற்கு முக்கிய காரணமும் இதுவே!

மேற்கூறிய வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களின் வயிற்றில் அவ்வியாதிப் பூச்சிகள் லக்ஷக்கணக்காக யிருக்கின்றன. அவ்வியாதியஸ்தர்களுடைய மலத்தோடு இப்பூச்சிகளும் ஆயிரக்கணக்காய் வெளிவருகின்றன. இதுமட்டுமல்ல வியாதி சொஸ்தமான பிறகும் வயிற்றிலிருந்து பூச்சிகள் மலஜலம் கழிக்கும்போதெல்லாம் வெளிவருகின்றன. இப்படிப்பட்ட வியாதிகளில் மிகக் கொடியவை காலரா, சீதபேதி முதலியன. மேலும் அநேகர் கொக்கிப்புழு, நாக்குப்பூச்சி முதலிய புழுக்களால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மலத்தோடு இப்புழுக்களின் முட்டைகளும் ஏராளமாய் வெளிவருகின்றன.

இப்படி மலத்தோடு வெளிவரும் வியாதிப் பூச்சிகளும் புழுக்களின் முட்டைகளும் பலவிதங்களில் நம் தேகத்துள் செல்லுகின்றன, மலஜலங் கழிக்கும் பொது ஸ்தலங்களில் நடமாடுவோரின் காலில் ஒட்டிக்கொள்ளுகின்றன. தூசியோடு காற்றில் பறந்து நமது ஆகாரத்திலும், பானத்திலும் அமர்ந்து நமக்கும் அவ்வியாதிகளை உண்டாக்குகின்றன.

மழையில் கலந்து ஆற்றிலும் குளத்திலும் சேர்ந்து அந்தத் தண்ணீரை உபயோகிப்போருக்கெல்லாம் வியாதியை விளைவிக்கின்றன. ஈக்களும் மிகவும் ஆவலாய் மலத்திலும் ஆகாரத்திலும் மொய்த்து இப்பூச்சிகளை ஆகாரத்தில் சேர்த்துவிடுகின்றன.

ஒவ்வொரு வீட்டிற்கும் சரியான கக்கூஸ் கட்டி அதைத் தினந்தோறும் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். ஏழைகளுக்கு வேண்டிய போதுமான கக்கூஸ்கள் கட்டும்படி முனிஸிபாலிட்டியாரை நிர்ப்பந்திக்கவேண்டும். ஒருபொழுதும் பொட்டல் வெளிகளிலும் ரோட்டுப் பக்கங்களிலும், ஆற்றங்கரை, குளக்கரைகளிலும் மலஜலம் கழிக்கக்கூடாது. இந்தக் கெட்டவழக்கத்தை இன்றோடு நிறுத்துங்கள், இதனால் உண்டாகும் கேட்டை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லி அவரையும் அப்படிச் செய்யாமலிருக்கச் சொல்லுங்கள்.

Public Health Department.

விளம்பரத்திற் குகந்தது செங்குந்த மித்திரனே.
என் ? இது வெளிநாடுகளில் ஏராளமான சந்தாதார்களைப் பெற்றுள்ளது. மொத்தத்தில் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட சந்தாதார்கள் உடையது. இதன் சந்தாதாரர்கள் 100க்கு 80 பேர்கள் வர்த்தகர்களே. மற்றெந்த பத்திரிகையும் செல்லாத சிறுகிராமங்களிலும், மூலைமுடுக்குகளிலும் உலவிவருகின்றது. நிறைந்த பயன் தருமெனபதில் ஐயமில்லை.
ஒருமுறை உங்கள் விளம்பரத்தைக் கொடுத்துப் பரீக்ஷிக்கலாம்.
ஒரு மாதத்திற்கு ஒரு பக்கம் விளம்பரஞ் செய்ய பத்தே ரூபாய்.
நீடித்த விளம்பரத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.
மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், சென்னை.

## குலதிலகர் பகுதி

### காஞ்சீபுரம் ஸ்ரீசரவணதேசிகர்

நமது செந்தமிழ் நாட்டின்கண் சுமார் 130 வருஷங்களுக்கு முன் நகரங்களில் சிறந்ததென சிறப்பித்துச் சொல்லப்படும் காஞ்சிபுரமென்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ சரவண தேசிகர் என்னும் ஒரு செங்குந்த குலதிலகர் கற்றவர் யாவரும் போற்றும் கல்விமானாகவும், அநுபூதிமானாகவும் சிறந்து விளங்கியிருந்தார். இவர் நமது முதலாவது மகாநாட்டில் கொடியுயர்த்திய தலைவராகிய திரு. ம. த. சாமிநாதமுதலியாரவர்கள் ஐந்தாம் பாட்டனாராவர். இவர்கள் குடும்பம் பரம்பரையாக சைவாச்சாரத்தை மேற்கொண்டொழுகி வரும் காஞ்சி செங்குந்த குடும்பங்களுள் தலைசிறந்து விளங்குவதென்பதும், காஞ்சீபுரத்தில் நிரம்பிய செல்வாக்குள்ள குடும்பங்களுள் ஒன்று என்பதும் உலகமறிந்த விஷயமாகும்.

இத்தகைய செங்குந்த குடும்பத்தில்தோன்றிய நமது குலதிலகராகிய தேசிகமூர்த்திகள் பல மஹான்களை அடுத்து பல அரியபெரிய நூல்களைப் பாடங்கேட்டவர். திருவாவடுதுறை ஆதீனத்திற்கோர் மணிவிளக்கம்போன்றவரும், உபயபாஷா சிரோமணியும், திராவிட மஹா பாஷ்யம் என்னும் சிவஞான மஹாபாஷ்ய கர்த்தரும் ஆகிய மாதவச் சிவஞானமுனிவரிடத்து இலக்கியஇலக்கணங்கள் கற்றுத் தேர்ந்தவர். ஷை முனிவரது பிரபல மாணக்கரும், காஞ்சி புராணம், தணிகை புராணம், விநாயக புராணம், திருவானைக்கா புராணம் முதலிய அரியகற்பனைகள் நிறைந்த பல நூல்களின் ஆசிரியரும், தென்தமிழ்க் கடலையும் வடமொழிக்கடலையும் கரைகண்டவருமாகிய கச்சியப்ப முனிவரிடத்து பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மை இலக்கணத்தைத் தெளிவுற விளக்கும் பதிநூல்களாகிய சைவசித்தாந்த சாஸ்திரங்களில் பயின்று தெளிவடைந்தவர். சுவர்க்கபுரம் தவப்பிரகாசர் என்னும் பெரியாரை யடுத்து ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணம் மஹாகாரணம் என்று சொலலப்படும் பஞ்சாக்ஷர லக்ஷண உபதேசம் பெற்றவர். திருப்போரூரின்கண் எழுந்தருளியிருந்த சுத்தாத்வைத சித்தாந்த ஆசாரியராகிய சிதம்பர சிவாசாரியரிடத்தில் ஞானோபதேசம் பெற்று நெடுங்காலம் நெடுங்குன்றின் மேலிட்ட விளக்கமென விளங்கியவர்.

நமது தேசிக மூர்த்திகள் தமது ஆசிரியருள் ஒருவராகிய கச்சியப்ப முனிவரைக்கொண்டு, கச்சியானந்த ருத்ரேசர் வண்டுவிடுதூது, பதிற்றுப் பற்றந்தாதி முதலிய அரிய நூல்களைச் செய்வித்தனர். தம்மை யடுத்த அநேக பக்குவிகளுக்கு நல்லாசிரியராகவும், ஞானாசிரியராகவும் விளங்கினார். இவ்ஙனது 'வலைத்தலைமான் என மாமாந்திடும் எனை, அலைத்தலைச்செயும் பவ அரந்தை தீர்தர, உன்னரும் தத்துவ உணர்வு தந்து ஆண்டோன்' என்பன போன்ற நமது சுவாமிகளின் சீடர்களது வாக்கினால் யூகித்தறியக் கிடக்கிறது.

இம்மூர்த்திகள் 'விட்டு நெறியுண்மை' 'ஒருபாஉண்மை உபதேசம்,' பஞ்சாக்கரவநுபூதி' 'உபதேசசித்தாந்தம்,' 'முத்தி முடிவு,' 'ஒருபா ஒருபது' முதலிய பல வேதாந்த நூல்களை உலகோபகாரமாக இயற்றியருளி ஒரு சிறந்த ஞான நூலாசிரியராகவும் திகழ்ந்தவர்.

ஹைதர் கலாபனை காலத்தில் தேசிக மூர்த்திகளுக்கு வயது 95. வலுத்த நிலைத்த அரசாங்கமின்மையாலும், கொள்ளைக்காரர்கள் மிகுந்திருந்தமையாலும், அக்காலத்தில் பெரியகோயில்களிலும், செல்வந்தர் வீடுகளிலும், விலையுயர்ந்த சொத்துக்களை மறைவாக சேமித்து வைக்கும்பொருட்டு, பூமியில் ரகசியமான மண்டபங்கள் அமைத்து வைக்கப்பெற்றிருந்தன. அத்தகைய மண்டபம் ஒன்று நமது சுவாமிகள் இருந்ததும், தற்போது திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் வசித்து வருவதுமான வீட்டில் இன்றும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனால் திரு. சாமிநாத முதலியார் அவர்கள் குடும்பம் அநேக தலைமுறைகளுக்கு முன்னரும் கூட பொருட் செல்வததாலும்பேர் போனதென்று தெரிகிறது. கலாபனை காலத்தில் ஸ்ரீ சரவண தேசிகர் அவர்கள் குடும்பத்தவர் அனைவரும் தக்கவற்றை பூமியின் அடியில்



அமைத்துள்ள மண்டபத்தில் பத்திரப்படுத்திவிட்டுப் போய்விடும்போதும் சுவாமிகள் மாத்திரம் வீட்டில் நிஷ்டையிலிருப்பது வழக்கம். அப்போது கொள்ளைக்காரர்கள் சுவாமிகளிடத்து அணுகிக் கை காது முதலிய அவயவங்களை அசைத்துப் பார்த்தும் சுவாமிகள் அசையாமல் பதுமைபோல வீற்றிருப்பதைக் கண்டு வியந்து போய்விடுவார்கள் என சில வயோதிகர்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம்.

ஸ்ரீ சரவண தேசிகருக்கும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்ததாகத் தெரிகிறது. ஷை ஆதீனத்திலிருந்து நமது சுவாமிகளுக்கு வந்த நூற்றுக்கணக்கான சீட்டுக்கவிகள் அடங்கிய ஓலை ஏடுகள் ஒரு தனித்த பெருங்கட்டாகக் கட்டப்பட்டிருந்தன. வைத்திய சாஸ்திரங்கள் * காவியங்கள், புராணங்கள், ஞான நூல்கள், முதலிய பல்வகைபட்ட நூல்கள் தனித்தனிப் பேழைகளில் வைக்கப்பட் டிருந்தன. இந்நூல்கள் யாவும் திரு. சாமிநாதமுதலியார் அவர்கள் இளமைப் பருவத்தில் அவரது தந்தையாரால் அச்சிட்டு வெளியாக்குவதாக முயன்ற வித்துவான்களிடத்தில் கொடுத்துவிடப்பட்டன.

இம்மூர்த்திகள் 100 வயதிற்கு மேற்பட்டே சிவபெருமான் திருவடியில் இரண்டறக்கலந்தார்கள். இக்குலதிலகரது சமாதி காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையத்திற்குத் தெற்கே வேகவதி ஆற்றங்கரையில் இருக்கிறது. சுவாமிகளது முதல் குருபூசைக்காக அமைக்கப் பெற்றகொட்டகைக்குக் கால்களாக நாட்டப்பெற்ற ஆலங்கிளை யொன்றும், வாதநாராயணக் கிளை ஒன்றும் பெரிய மரங்களாக வளர்ந்து சமாதியைச் சுற்றி விசாலமாக நிழல் தந்து விளங்கி வருவதை இன்றும் காணலாம்.

வா. பொன்னம்பலம்.

* இதனால் இவர்கள் வைத்தியத்திலும் தேர்ந்தவர்கள் எனத் தெரிகிறது.

## விகடத் துணுக்குகள்

லேசன்—ராமு அவனுடைய பெண்சாதியை நடத்தினதைப் பார்த்தால் எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லை. என் நாயைக்கூட அம்மாதிரி செய்ய நான் துணியமாட்டேன்.

வேலன்—அப்படி என்னடா செய்துவிட்டான்?

லேசன்—முத்தமிட்டான்.

*   *   *   *

பெரியவர்—புராணிகரே! அதெல்லாம் சரிதான்; நான் ஒரு கேள்வி கேட்கிறேன், அதற்கு மாத்திரம் பதில் சொல்லி விடுங்கள்.

புராணிகர்—சரி; சொல்லித் தொலையும்.

பெரியவர்—ஸ்ரீராமனுடைய பெண்சாதி யார்?

புராணிகர்—அடே எழவே, நீ ஊரான் பெண்சாதியைக் குறித்துக் கேட்பதை விட்டால்தான் சுகப்படுவாய். மற்றவன் பெண்சாதியைக் குறித்து உனக்காவதென்ன?

*   *   *   *

ஒரு பெரிய சபையில் ஒருவரை யொருவர் நீர் எழுந்து பேசும், நீர்தான் எழுந்து பேசுமே, அட நீர் தான் எழுந்து பேசுமே என்ற விவாதமுண்டாயிற்று.

ஒருவர்—நீங்கள் எழுந்து எதையாவது பேசும்.

மற்றவர்—எதையாவது பேசுவதற்கு யோசனை வேண்டாமா, அய்சரப் படுகிறீரே,

ஒருவர்—அட வம்பே! வாயில் வந்ததை உளருவதற்கு யோசனை என்னத்திற்கு.

*   *   *   *

ஒருவன்—(சீட்டாட்டத்தில்) ஜாக்கி கீழே விழுந்ததை யாரும் கவனிக்கவில்லையே?

மற்றவர்—என்னடா! பேரிழவாயிருக்கிறது! கையிலிருக்கும் சீட்டெல்லாம் சொல்லித்தொலைத்துவிடுகிறாயே?

முதல்வன்—ஏன்டா! பிரமாதப் படுத்துகிறாய்! ஆடுநன் ஜாக்கி விழுந்ததை பார்த்தீர்களா என்று கேட்டால்தானே பிசகு.

மற்றவர்—மகாபுத்திசாலிதான் சும்மாயிரு போதும்?

*   *   *   *

மாப்பிள்ளை—ஆகா! பார்த்துக்கொள்ளுகிறேன்.

டாக்டர்—அதற்கு உன்னால் ஏதாவது பணம் போடமுடியுமா?

மாப்பிள்ளை—முடியும்.

டாக்டர்—(சந்தோஷத்துடன்) எவ்வளவு ரூபாய் போடக்கூடும்?

மாப்பிள்ளை—3000 ரூபாய்.

டாக்டர்—அப்படியானால் நான் கொடுக்கும் 3000 ரூபாயையும் சேர்த்தால்..........................

மாப்பிள்ளை—நீங்கள் கொடுக்கும் 3000 ரூபாயையும் சேர்த்துத்தான் நான் சொன்னேன்!

*   *   *   *

# ஆன்றோர் அமுதமொழிகள்

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உபதேசம்.

ஒரு சிறு பையனுடைய இருதயத்திலிருக்கிற அன்பு, பிரிவடையாததாயும், முழுதுமாகவும் இருக்கிறது. விவாகமாகிவிட்டால் பாதி அன்பு மனைவிக்கு கொடுக்கப்படுகின்றது. குழந்தைகள் பெற்றுவிட்டால் இன்னும் கால்பாக அன்புகுழந்தைகளுக்கு கொடுத்துவிடப்படுகிறது. மிகுதி கால்பாக அன்பு தாய், தகப்பன் கௌரதை, கீர்த்தி, ஆடை ஆபரணம் முதலியவற்றிற்கு கொடுத்துவிடப்படுகிறது. கடவுளிடத்தில் செலுத்துவதற்கு அவனிடத்தில் 'அன்பு மிகுதி யில்லை. ஆகையால், ஒரு பையனுடைய பிரிவையடையாத, அன்பானது இளமையிலேயே கடவுளிடத்திலே செலுத்தப்பட்டால் அவன் அவரிடத்தில் தனது முழு அன்பையும் செலுத்தி அவரைச் சுலபமாகத் தரிசிக்க முடியும். வயது முதிர்ந்தவர்கள் அப்படிச் செய்வது சுலபமான காரியமன்று.

(2) பலவித இச்சைகள் உண்டாகும் இடத்துக்குப் போக நேரிட்டால் எப்பொழுதும் ஜகன்மாதாவின் தியானத்துடன் செல். உன்னை ஜகன்மாதா ரட்சிக்க கூடும்.

(3) தனித்த காட்டில் ஒரு பருவமுள்ள அழகிய ஸ்திரீயைப் பார்த்தும் கடவுள் பார்க்கிறார் என்ற பயத்தினால் மயங்காமலிருப்பவன் எவனோ, தனது பார்வையைச் செலுத்தாதவன் எவனோ, அவனே சன்மார்க்கன்.

(4) முதலில் உனது ஆத்மாவை அறிந்துகொள். பின்பு ஈஸ்வரனை அறிவாய். "நான்" என்பது என்ன? எனது கையா? அல்லது காலா? அல்லது சதையா? அல்லது ரத்தமா? ஆழ்ந்து யோசனை செய்துபார். நான் என்று ஒன்று இல்லவே இல்லை என்று அறிவாய், ஒரு வெங்காயத்தினுடைய தோலை உரிக்க உரிக்க அதிகம் தோல் வெளிப்படுகிறது. நீ விதையை அதில் காணமுடியாது. அப்படியே "நான்" என்பதைப் பகுத்துப் பார்த்தால் நான் என்று சொல்லும்படியான உண்மையான வஸ்து ஒன்றுமே இல்லை. ஆராய்ச்சியின் முடிவு ஈஸ்வரனே யாம். நான் என்பது போய்விட்டபொழுது ஈஸ்வரன் தோன்றுகிறார்.

(5) ஈஸ்வரனை அடைவது எப்படி? உனது சரீரம் மனம், தனம், எல்லாவற்றையும் நீ தியாகம் செய்ய வேண்டும்.

* * *

ப. நஞ்சப்ப முதலியார்,
பள்ளிபாளையம்.

டாக்டர் சால்டர்:—மோட்டார் வண்டிகளை வேகமாகச் செலுத்துவதன் மூலமாக அநேக கிராமங்கள் நகரங்களாகிவிட்டன.

* * *

ஓர் அறிஞர்:—மதுசாரம் இரத்தத்தைக் கொடுக்கிறது. இரத்திலுள்ள ஜீவ அணுக்களின் வளர்ச்சியைத் தடை செய்கிறது.

* * *

கிளிப்டன் பிங்ஹிர்:—நீ நடக்கும் வழி நல்லதாகவும், உன் காரியங்கள் களங்கமற்றும் இருக்கட்டும்; அப்படி இருந்தால் நீ எங்கு சென்றாலும் நீ உன்னை உண்மையாய் நேசிக்கும் நண்பர்களைக் காண்பாய்.

* * *

டென்னிஸன்:—எந்த மனிதனுக்கும் மனத்தளர்ச்சியடைதல் அழகல்ல. ஆனால் எவ்வித கடுமையான பகைகள்வரினும் சாகுமளவும் மிகவும் யோக்கியமான வழியைப் பின்பற்றுவதே அழகு.

புகழை எண்ணாதே. உன் கடமையைச் சரிவரச் செய்தாயா என்று மட்டும் பார்த்துக்கொள்பொருளை எண்ணாதே. வேண்டியதில் செலவிடு. மேலும் மேலும் கடவுள் தருவார் உங்களுக்கு உழைக்கவே பிறந்ததாக நினை.

### அன்பர்கட்கு

சந்தா கல்விநிதிச் சீட்டுத்தொகை யாதியன மணியார்டரில் அனுப்புவோர் மணியார்டர் கூபனில் ஒன்றுமே எழுதாமல் அனுப்பிவிடுகின்றனர். அத்தகைய மணியார்டர்கள் தொகை அவர்கள் கணக்கில் வரவு வைக்கமுடியாமல் அனுமத்தில் வைக்க நேர்கிறது. ஆதலின், இனி மணியார்டர் அனுப்புவோர் தொகையையும், தங்கள் பெயர் விலாசத்தையும் கூபனில் தெளிவாய் எழுதுமாறு வேண்டுகின்றோம்.



# சாரதா மசோதா என்னும் பாலிய விவாகத் தடைச் சட்டம்.

## 1930 ஏப்ரல் 1-ந்தேதி முதல் அமுலுக்கு வரும்.

சமீபத்தில் இந்தியா சட்ட சபையிலும் ராஜாங்க சபையிலும் நிறைவேறி வைசிராய் அநுமதியும் பெற்றுவிட்ட பாலியவிவாகத்தடைச் சட்டத்தின் முழுவிவரம்:—

பால்ய விவாகம் நடைபெறாமல் தடை செய்ய வேண்டியது அவசியமாயிருப்பதால் கீழ்வருமாறு ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

1. (1) இந்தச் சட்டத்திற்கு 1929-வது வருஷத்திய பாலிய விவாகத் தடைச்சட்டம் என்று பெயர்.

(2) பிரிட்டிஷ் பலூஜிஸ்தானம், சந்தால், பர்கானு முதலிய பிரதேசங்கள் உட்பட பிரிட்டிஷ் இந்தியா முழுதும் இந்தச் சட்டம் பிரயோகம் செய்யப்படும்.

(3) 19௦0 ஏப்ரல் 1-ந்தேதி முதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்.

2. (1) 18 வயதுக்குட்பட்ட ஆண்களும் 14 வயதுக்குட்பட்ட பெண்களும் 'பாலியர்' எனப்படுவார்கள்.

(2) கலியாணஞ்செய்யும் தம்பதிகளில் மணமகனோ அல்லது மணமகளோ பாலியமாயிருந்தால் அந்த விவாகம் பாலிய விவாகம் எனப்படும்.

(3) விவாகம் செய்யும் ஆணும் பெண்ணும் "விவாகம் செய்பவர்"கள் ஆவார்கள்.

(4) 18-வயதுக்குட்பட்ட ஆண்களும் 14-வயதுக்குட்பட்ட பெண்களும் "பருவ மடையாதவர்கள்" (மைனர்கள்) ஆவார்கள்

3. 18 வயதுக்குமேல் 21-வயதுக்குட்பட்ட ஒரு புருஷன் பாலிய விவாகம் செய்தால் அவனுக்கு ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

4. 21-வயதுக்கு மேற்பட்ட புருஷன் பாலிய விவாகம் செய்தால் அவனுக்கு ஒரு மாதத்துக்குட்பட்ட சிறைத் தண்டனையோ ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

5. பாலிய விவாகம் நடத்தி வைக்கிறவர்களுக்கும் அல்லது நடத்தக் காரணமாயிருப்பவர்களுக்கும் ஒரு மாதத்துக்குட்பட்ட சிறைத் தண்டனையோ ஆயிரம் ரூபா அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும.

6. (1) 'பருவமடையாதார்' பாலிய விவாகம் செய்தால் அவர்களின் பெற்றோர் அல்லது கார்டியன்கள் அல்லது அவர்கள் பாதுகாப்புக்குச் சட்டப்படியோ மற்றப்படியோ கடமைப்பட்டவர்கள், அக்கலியாணத்தை நடத்தி வைக்கவோ அல்லது நடப்பதைத் தடுக்காமல் அசிரத்தையாக இருக்கவோ செய்தால், அவர்களுக்கு ஒரு மாதத்துக்குட்பட்ட சிறைத் தண்டனையோ ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும். ஆனால் பெண்களுக்கு சிறை வாசத் தண்டனை கிடையாது.

7. 1897-வது வருஷத்திய பொதுவிதிச் சட்டம் 25வது செக்ஷனிலும் இ. பி. கோ. 64வது செக்ஷனிலும் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் சரி, இச்சட்டத்தின் 3-வது செக்ஷன்படி குற்றம் செய்பவர் அபராதம் கொடுக்கத்தவறினால், அதற்குப் பதிலாக சிறைவாசத் தண்டனை விதிக்க எந்த கோர்ட்டுக்கும் அதிகாரமில்லை.

8. 1898வது வருஷத்திய கி. பி. கோ. 190-வது செக்ஷன் எவ்வாறு கூறினும் சரி, இந்தச்சட்டப்படியுள்ள குற்றவாளிகளை விசாரணை செய்யவும், நடவடிக்கை நடத்தவும் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டு அல்லது ஜில்லா மேஜிஸ்டிரேட்டுகளைத் தவிர வேறெந்தக் கோர்ட்டாருக்கும் அதிகாரமில்லை.

9. பாலியவிவாகம் நடைபெற்றது முதல் ஒரு மாத காலத்துக்குள் அதைப் பற்றிக் கோர்ட்டில் வழக்குத்தொடரவேண்டும். அதற்கு மேல்கொண்டு வரும் வழக்குகள் செல்லுபடியாகமாட்டா.

10. இச்சட்டப்படி வழக்குகளை ஒப்புக்கொள்ளும் கோர்ட்டார் 1898வது வருஷத்திய கி. பி. கோ 203-வது செக்ஷன்படி வழக்கைத் தள்ளுபடிசெய்யவில்லை யானால் கி. பி. கோ. 20, 21-வது செக்ஷன்படி விசாரணை செய்யவேண்டும் அல்லது தம் அதிகாரத்துக்குட்பட்ட ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு, அவ்வழக்கை விசாரணை செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

11. (1) வழக்கை ஒப்புக்கொண்டு எதிரிகோர்ட்டில் ஆஜராகும்படி சம்மன் அனுப்புமுன் (ஒரு கால் வழக்குத் தோல்வியுற்றால்) 1898-வது வருஷத்திய கி. பி. கோ. 250-வது செக்ஷன்படி எதிரிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதாக வருமாகையால், 100ரூபா ரொக்கஜாமீனாயினும் அல்லது 100ரூபாய்க்கு ஒரு முச்சலிக்காவோ கொடுக்கும்படி கோர்ட்டார் வாதிக்கு உத்தரவளிக்கவேண்டும். கோர்ட்டார் குறிப்பிட்ட காலத்துக்குள் வாதி அவ்வாறு செய்யாவிட்டால் வழக்கு தள்ளுபடி செய்யப்படும்.

(2) இவ்வண்ணம் வாங்கும் ஜாமீன் அல்லது முச்சலிக்கா 1898-வது வருஷத்திய கி. பி. கோ. படி வாங்கப் படுவதாகக் கருதப்படும். எனவே, அந்த கோடின் 42-வது செக்ஷன்படி அந்த ஜாமீன் அல்லது முச்சலிக்கா வாங்கப்படும்.

# நமது கடிதங்கள்

**சத்தியமங்கலம்.**

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தலைவரவர்களுக்கும் அமைச்சர் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். 16-9-29-ல் கிடைத்த மித்திரனில் தாடிமீசைச் சண்டை, கக்ஷிப் பிரதிகக்ஷிகள், ஆடு கோழி பலியிடுதல் முதலிய விஷயங்களைக் கண்ணுற்ற என்மனம் கவலுறுகிறது. ஆகையால் நமது 'மித்திர'னில் அடியிற்கண்டதைப் பதிப்பிக்குமாறு வேண்டுகிறேன் :—

அன்பார்ந்த செங்குந்தகுலச் சீமான்களே!

நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தலைவர்கள் நமது குலகுருமாராக விளங்கி, நம்மவர்களை முன்னேற்றத் துறையில் நடத்த வேண்டுமெனும் நோக்கத்துடன், அறிஞர் பலரது அரிய பெரிய நுட்பங்களடங்கிய கட்டுரைகளை நமது 'மித்திர'னில் மாதந்தோறும் அமைத்து, அதன் மூலமாக நம்மவரிடைப் பொதிந்துள்ள அந்தகார விருளை அகற்றி, ஒவ்வொருவரது இதயமுமாகிய இல்லந்தோறும் அறிவென்னுந் தீபத்தை ஏற்றுங் காரியத்தில் மூன்று வருடங்களாக பாடுபட்டும் இன்னும் நம்மவரது தாடி மீசைச் சண்டைகளும், கக்ஷிப் பிரதிகக்ஷிகளும் ஒழிந்த பாடில்லையே. அன்பர்களே, நமது முன்னோர்கள் நடத்தி வந்த ஆட்சி முறைகளையும், நியாயாதி பத்யங்களையும், அவரது நாட்டின் பெருமை, ஆசாரம், கல்வி, அறிவு, குலவொழுக்கம், நன்மை, சத்தியம், தர்மம், சாந்தம், தைரியம், பராக்கிரமம் ஒற்றுமை, அநந்தமது நீதிநூல்களைக் கற்றல், சைவ சித்தாந்த சிரத்தை முதலிய கண்ணிய குணங்களையும் நோக்குங்கால் அவர்களிடையே எங்கேயாவது தாடிமீசைச் சண்டைகள், சமயக்கக்ஷி சண்டைகள், பலியிடுதல், மது மாம்சம் புசித்தல், ஜாதிப்பிரஷ்டை செய்துகொள்ளுதல் முதலிய துர்வழக்கங்களிருந்ததாகத் தெரிகிறதா? இனி இத்தகைய கெடுதிகளை உண்டாக்கப் போகிறீர்களா? இவ்வாறான கொடிய பழக்க வழக்கங்களை நமது மரபினிடையே பரவச் செய்வதால் நங்குலச்சிலர்களையே மனங்கலங்கச் செய்கிறீர்கள். நீங்கள் வழக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கும் கொலை பாதகங்களுக்கும் மதுமாம்ச பக்ஷணத்திற்கும், சமயக்கக்ஷிப் பிரதிகக்ஷிகளுக்கும் ஏதாவது ஆதாரங் காட்டுவீர்களா? 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, எல்லா உயிரும் தொழும்'' என்னும் அமுதவாக்கிற்கும் ''கூடிக்கெட்டாருமில்லை; பிரிந்து வாழ்ந்தாருமில்லை'' என்னும் முதுமொழிக்கும் என்ன மறுப்பு கூறுவீர்கள்? இன்னும்,

''கள்ளினை நுகர்வோர், கள்விலை பகர்வோர்
கள்ளருந் துதற்குடன் படுவோர்
கள்ளருந் துனரை மகிழுனர் நரகில்
கற்பகா லங்கிடந் தழுந்தி
எள்ளருந் தீய மலப்புழு வாகி
மலத்தினை நுகர்ந்துபின் இறந்தும்
விள்ளருங் கொடிய ரவுரவ நரகில்
மீட்டுமீட் டுழன்றுநாள் கழிப்பர்''

என்றும்,

''எவ்வுயிரும் பராபரன்சன் னிதிய தாகும்
இலங்குமுட லத்தனையு மீசன் கோயில்
எவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி
இரங்காது கொன்றருந்து மிழிவி னோரை
வவ்விஎம தூதருமே தண்டஞ் செய்து
வல்லிரும்பை உருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்வியதீ எழுநரகில் வீழ்த்தி மாறு
வேதனைசெய் திடுவரென ஓது நூலே.

என்றும் மேலோர்கள் அருளிப்போந்ததை வெண்ணுது தீய செய்கைகளில் தலையிட்டுத் தடுமாற்றங்கொள்வதனால் உண்டாகும் பயன் யாதோ அறிகிலேன்.

அன்பர்களே பண்டைநாள் தொட்டேமகாத்மாக்களாலும்; சித்தர்களாலும், பல்வேறு மதங்களாலும், வேத புராண இதிகாசங்களாலும் புகழ்ந்து போற்றப்படும் நமது செங்குந்த மரபினிடையே துர்ப்பாக்கியத்தால் ஏதோ சில அறிவிலிகள் அநாகரீகமான செயல்களையும் கொடிய பழக்கங்களையும் பரவச்செய்து விட்டார்களேனும், கல்வி, அறிவு அந்தஸ்து முதலியவற்றில் மிகுந்த குலதிலகர்களாகிய நமது தலைச்சங்கத் தலைவர்கள் காலப்போக்கையும் நங்குலம் பின்னணியில் நிற்பதையும் உணர்ந்து, இனியும் நாம் உறக்கத்திலாழ்ந்திருத்தல் தகுதியுடைத்தல்லவெனக் கருதி, தமது உடல் பொருள், ஆவி மூன்றினையும் நங்குலத்திற்காக அர்ப்பணஞ் செய்ய முன்வந்து, சேற்றில் அழுந்திக்கிடந்த நம்மவர்களை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமென்னும் தூய நதியில் நீராட்டி நமக்குக் கல்வியென்னும் நல்லுடை நல்கி, அறிவென்னும் ஆபரணஞ் சூட்டி, கைத்தொழில் வியாபாரம் முதலிய வழிகளைக்காட்டி முன்னேற்றமென்னும் ஒண்முடி சூட்டப்பாடுபட்டுவர, அத்தகைய சிலர்களையும் அவர்கம் பெருங்காரியங்களையும் சாமான்யமாகக் கருதி தாடி மீசைச் சண்டைகளையும் மது மாம்சம் அருந்துதலையும், அவற்றோடியைந்த மற்றும் பல தீயவொழுக்கங்களையும் அறவே ஒழிக்காது இன்னும் வைத்திருப்பதென்னே? அவர்கள் கல்வி, அறிவு, அன்பு, பிரசாரம், பத்திரிகை முதலிய கூரிய ஆயுதங்களால் இத்தீமைகளைக் களைந்தெறிந்து வெற்றிச் செங்குந்தத்தையும் வீரப்புலிக் கொடியையும் நாட்டி விடுவார்களென்பது முக்காலும் உண்மையே. இத்தகைய சீரிய நன்மையினை ஈடேற்றுவதற்கு நமது 'மித்திரன்' தலைப்பில் நிலவும் பிரணவமும் அதன் மத்தியில் பொலியும் குந்தமும் அச்செங்குந்தப் படைதனை அங்கையிலேந்திய அறுமுகப் பெருமானும் உறுதுணையாவரென்பதிலையோ?

அன்புருவங்களே, நங்குலச்சங்கங்கள் பலவற்றினும் பிரதானமாய் விளங்கும் தலைச்சங்கத்தையும் அதன் தீவிர வேலைகளையும் கண்ணுற்று இனியேனும் துயில்விட்டெழுங்கள். நங்குலத்தைக் காக்கவந்த கருணை சிலர்களை அவதார புருஷர்களென்றே கருதுங்கள். இனியேனும் தீயவழக்கங்களை அகற்றுங்கள். நமது மரபு எல்லாத்துறைகளிலும் முற்போக்கடைய வேண்டுமென்னும் நல்லெண்ணம் உங்களுக்கிருக்குமாயின், முன்னேற்றத்தை நாடிச்செல்லும் நமது மக்களைத் தடுக்காது நம் தலைச்சங்கத்தின் சட்டங்களுக்கும் கோரிக்கைகளுக்கும் இடையூறு கோரவண்ணம் நடந்து அனைவரும் ஒன்றிய நோக்கத்துடன் தலைச்சங்கஞ் செழித்தோங்குமாறு உழைக்க முன்வாருங்கள் உங்களாலியன்ற உதவியைக் கரவாதீர்கள்; தலைச்சங்கத்தினைக் காணுவிடினும் ஈரோட்டில் கூடிய நமது முதல் மகாநாட்டின் வைபவத்தை எண்ணி உருகுங்கள். தலைச்சங்கத்தின் தீவிர முயற்சியினாலேயே முதல் மகாநாட்டிற்காகச் சேர்ந்த பெருந்தொகையில் மிகுதியான பொருளை அச்சங்கத் தலைவர்களிடம் கொடுக்கப்படாது போயினும், அது அவர்களது முக்கிய நோக்கமாகிய கல்விக்காகவே நியமிக்கப்பட்டிருப்பதை யுன்னி அவர்கள் சிறிதும் மனக்கலக்கமின்றி இன்னும் நம்மவரிடை ஓயாது அறிவுச் சுடர்கொளுத்தி வருகிறார்களன்றோ? இதனை மனத்திருத்தித் தலைச்சங்க அமைச்சர்களுக்குதவி புரியுமாறு ஒவ்வொரு செங்குந்தரையும் வேண்டுகிறேன். அத்தகையார்க்கு அறுமுகத் தண்ணலது அருள் சித்திப்பது திண்ணமே.

சில துர்வழக்கங்கள் பற்றி நமது குலத்தையும் குலமக்களையும் வெறுத்து அன்னிய குலஞ் சாரவிரும்பும் அறிஞர்களே, உங்களிடம் நான் ஒன்று வேண்டுகிறேன். நமதினும் மேம்பட்ட குலம் வேறு உண்டென்னும் எண்ணத்தை விட்டிடுங்கள். ஏதோ சில ஆபாச குணமுள்ளவர்கள் ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிடுவதற்காக வேறுமதஞ் சாரக்கருதினால் அதிலும் இவற்றையும் இன்னும் மாடு, கன்று வெட்டுதல் முதலியவற்றையும் நீங்கள் பார்க்க நேரிடுமென அறிவீர்களாக. எது நேர்ந்தபோதிலும் மனத்தினை ஸ்திரமாக நிறுத்தி, சற்று நிதானித்துப் பார்ப்போமானால் எக்குலத்திலும் நங்குலமும் எம்மதத்திலும் நம்மதமுமே சிறந்ததெனத் தோன்றும்.

''காம்புண்டோன் சிறியகுலம்
கனியுண்டோன் பெரியகுலம்
மணியுண்டோன் பிரமகுலம்
மகாமுத்த சிவகமே.''

என்னும் சற்குருவாக்கு இங்கு கவனிக்கத் தக்கது.

தென்னிந்திய செங்குந்தகுலத் தலைவர்களே!

நமது செங்குந்த மாணவர்கள் பொருட்டு ஏற்படுத்தப்படும் கல்வி நிதிக்காக எனது நிலத்தில் ஒரு ஏக்கர், இருபத்தேழு செண்டு அளவுள்ள பூமியை உதவவிரும்புகிறேன். பிரமோதூத வருடம் சித்திரைமீ அந்நிலத்தை நமது தலைச்சங்கத்துக்குச் சொந்தமாக்கி வருடாவருடம் எனது சொந்தச் செலவிலேயே அதனைச் சாகுபடிசெய்து அதில் விளையும் தானியங்களை விற்று அத்தொகை எவ்வளவானாலும் அதனை நமது ஏழைச் செங்குந்த மாணவர்களுக்காக அதிக அன்புடன் அனுப்

புகிறேன். நிலத்தை எவ்விதம் சங்கத்தின் பேரிலாக்குவதென்பதை விபரமாய்த் தெரியப்படுத்தவும். இதற்காகத்தாங்கள் செலவு செய்துகொண்டு இவ்விடம் வரவேண்டியதில்லை. மேற்கண்ட விபரப்படி, யானும் என் புத்திர பௌத்திர பாரம்பரியமும் இதில் மாறுதலடைவதில்லையெனக் கிரையப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பிவிடுகிறேன். இதுவரை 'மித்திரனுக்கேனும் கல்விநிதிக்கேனும் ஒருவித உபகாரமும் யான் செய்யவில்லையே என வருந்துகின்றேன். குமரன் துணை புரிவாராக.

**ப. அங்கமுத்து முதலியார்,**
சிகிச்சாஞான பண்டிதர், சத்தியமங்கலம்.

---

**குருவராஜப்பேட்டை,**
**6-11-29.**

செங்குந்த மித்திரன் ஆசிரியர் அவர்கட்கு, அன்புடையீர்! 4-9-29-ல் யான் யெழுதிய கடிதத்தில் மேன்மைதங்கிய சோளிங்கபுர நாட்டார் அவர்கள் அநுசரித்துவரும் உண்மையான விஷயங்களையே தெரிவித்திருந்தேன். அதுபோலவே, யான் கடிதம் யெழுதின சில தினங்களுக்குப் பிறகு எல்லோரும் அவர்களிடம் சென்று காலில் விழுந்து 'விதிதாசாரம் அபராதத்தையும் செலுத்தினோம். பிறகு யாங்கள் எல்லாரோடும் சேர்க்கப்பட்டோம்.

நமது தேசம் இதுசமயம் பலவிதமான கிளர்ச்சியோடு விளங்கிக்கொண்டிருக்கிறது. நமது சமூகத்தினரும் எல்லா சமூகத்தினரைப்போல முன்னேற்றம் அடையவில்லையே என்ற வருத்தத்தைக் கொண்டவரைப் நமது கண்ணெதிரிலிருக்கும் நாகரீகமான, கௌரவமான பழக்கவழக்கங்களைக்கொண்டு பழைய வழக்கங்களை நழுவவிட்டு ஒற்றுமையுடனும், சந்தோஷத்துடனும் நல்வாழ்வை அடையத்தக்க மார்க்கங்களைத் தாங்கள் நேராக வந்து போதித்து ஒற்றுமைப் படுத்துவீர்களென்றும், தங்களுக்கு இவ்விஷயம் தெரியவேண்டுமென்றும் எழுதினேனே யொழிய தாங்கள் இவ்விஷயத்தை மித்திரனில் பிரசுரிப்பீர்களென்று எதிர்பார்த்தவனல்ல மேலும் நாட்டாண்மைக்காரர்களை இழிவுபடுத்தவேண்டுமென்றோ பிறர் அவர்கள்மீது தப்பபிப்பிராயம் கொள்ளவேண்டுமென்றோ யான் எண்ணியவனுமல்ல. ஆனால், இம்மாத மித்திரனில் யான் யெழுதின விஷயங்களை தாங்கள் எக்காரணத்தால் பிரசுரித்தீர்களோ தெரியவில்லை. நான் அவர்களை பழிப்பதாகக் கருதி ஏதோ சில நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக வதந்தி உலாவுகிறது.

ஆகையால் தாங்கள் எளியவன்மீது கிருபை கூர்ந்து மேன்மை தங்கிய நாட்டாண்மைக்காரர்களோடு கலந்து ஓர் நன்முடிவு செய்ய வேண்டுகிறேன்.

**S. M. வீராசாமி.**

குறிப்பு:—இவ்வளவு விரைவாகக் குருவராஜப்பேட்டை செங்குந்த அன்பர்கள் ஒற்றுமைப்பட்டது கேட்டு அளவிறந்த மகிழ்ச்சி யுறுகின்றோம். இஃதொன்றே சோளிங்கபுர நாட்டினரின் சமூகப்பற்றினையும், தாராள சிந்தையினையும் விளக்குகின்றது. இவர்கள் இவ்வளவு விரைவில் சமூகநலங்கருதி ஒன்று பட்டமை ஏனைய கட்சிகள் நிறைந்த வூர்கட்கும் ஓர் வழிகாட்டியாகும். இனி எக்காலத்தும் பிளவு நோக்கவகையில் அன்பர்களனைவரும் நடந்து கொள்வார்களென எண்ணுகின்றோம். இது பற்றி கோர்ந்தமனத்தாங்கலெதுவாயிருப்பினும் அதனை இன்றே மறந்து ஒன்று பட்டவர்களை ஒற்றுமையுணர்ச்சி மிகுதற்குரிய செயலில் ஈடுபடுத்துமாறு சோளங்கிபுர நாட்டாண்மைக்காரர்களை வேண்டிக்கொள்ளுகிறோம். (ப-ர்):


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்

## கல்வி நிதிக்கு

முதன்முதலாக பூஸ்திதி வழங்க முன்வந்த பேருபகாரி யார் ?

சத்தியமங்கலம் சிகிச்சாஞான பண்டிதர்

### திரு. ப. அங்கமுத்து முதலியாரவர்களே யாவர்!

ஏனைய துலாபிமானிகளும் அவர்களைப் பின்பற்றி

பெரும் புகழ் நாட்டுவாராக.




800 009 ... 29812 எள்

## சிறு கதைத் திரள்

### மிராசுதார் சுந்தரப்பையர்.

**மீனாக்ஷி :**—பத்திரிகையில் என்ன அவ்வளவு விசேஷம்? காபி ஆறிப் போகிறதே?

**சுந்தரப்பையர் :**—நம் குடி கெட்டுப்போச்சு. ஊரே அழிந்து போய்விடும். காந்தி பேச்சைக் கேளாதீர்களென்று நான் அப்பொழுதே எச்சரிக்கை செய்தேன். ஊர்ப்பயல்கள் எல்லாரும் குதித்தார்கள். இப்பொழுது எல்லாரும் ஊரைவிட்டு ஓடவேண்டியது தான்.

**மீனாக்ஷி :**—சமாசாரம் என்னவென்று முதலில் சொல்லுங்கள்.

**சுந்தா :**—நேற்று இந்தியா சட்ட சபையில் மதுவிலக்குச் சட்டம் பாஸாய் விட்டது. இந்த வருஷம் ஏப்ரல்மீ முதல் அமுலுக்கு வந்துவிடப் போகிறதாம்.

**மீனாக்ஷி :**—அதனால் நமக்கு என்ன கெடுதல்?

**சுந்த :**—உன் புத்தி அவ்வளவு தான். வருஷந்தோறும் கள்ளுக் குத்தகையில் நமக்கு ரூ. 250 வருவது தெரியாதா? வயலுக்கு வெள்ளம் காய்ச்சல் உண்டு. நெல் விலை ஏறும் இறங்கும். ஆனால் இந்த 250 ரூபாயும் வருஷம் முதல் தேதியில் "டண்" என்று வந்து கொண்டிருந்தது. வாயிதாவிற்கு முடையில்லாமல் இருந்தது. இனிமேல் செட்டி வாசலில் போய் நிற்கவேண்டியது தான்.

**மீனாக்ஷி :**—சட்டசபையி லிருப்பவர்களுக்கெல்லாம் நிலம் கிடையாதா என்ன? அவர்கள் ஏன் இந்த சட்டத்தைச் செய்தார்கள்?

**சுந்த :**—ஏதோ ஏழைகளுக்கு நல்லதாம். தென்னாலி ராமன் கதையைப்போல் கறுப்பு நாயை வெள்ளை நாயாக்கப் போகிறார்களாம். அதிகமாகச் சொல்வதில் பயனென்ன? இதெல்லாம் அனர்த்தத்திற்குத் தான்.

* * * *

[10 வருஷத்திற்குப் பின்னால்! சுந்தரப்பையர் கடன் தீர்ந்து கையில் ரொக்கம் ரூ. 10,000 நிலத்தில் வருமானம் ரூ. 3000.

**சுந்த :**—மீனாக்ஷி நாளைக்கு நல்ல முதல் தரமான விருந்து செய்யவேண்டும். பத்து நண்பர்கள் சாப்பிடுவார்கள். சாயங்காலம் கூட்டத்துக்கு நீயும் வரவேண்டும்.

**மீனாக்ஷி :**—என்ன விசேஷம்? இரண்டு நாள் முன்னதாகவே சொல்லக்கூடாதா?

**சுந்த :**—மறந்து போய்விட்டேன். நாளைக்கு மதுவிலக்குச் சட்டத்தின் 10-வது வருஷ முடிவு.

**மீனாக்ஷி:**—அதை நாம் ஏன் கொண்டாடவேண்டும்? அதனால் நமக்கு நஷ்டம்தானே?

**சுந்த :**—அப்படியல்ல, நானும் முதலில் அந்த சட்டத்தினால் மிராசுதார்களுக்கெல்லாம் அதிக நஷ்டமென்றுதான் நினைத்தேன். ஆனால், சட்டம் ஏற்படுத்தி, 2, 3 வருஷத்திற்குள்ளேயே அதன் உண்மை வெளியாகிவிட்டது. அசல் பணகை ரூ. 1,500 வந்த நிலத்தில் ரூ. 3,000 குத்தகையில் வருகிறது. நம்முடைய கடனெல்லாம் போய் ரூ. 10,000 கையில் இருக்கிறது. இதற்கெல்லாம் அந்த சட்டந்தான் மூலம்.

**மீனாக்ஷி:**—மிகவும் ஆச்சரியமாயிருக்கிறதே! இதெப்படி, விவரமாய்ச் சொல்லுங்கள்—

**சுந்த :**—மதுவிலக்குச் சட்டத்திற்கு முன், நம்முடைய குடியானவர்களும் பண்ணையாட்களும் ஒரு காசும் மிச்சம் பிடித்ததில்லை. பண்ணையாட்களின் அவஸ்தை வருஷா வருஷம் ஏறி வந்தது. தாங்க முடியாமற்போனதும் அவர்கள் கண்டிக்கு போய் விடுவார்கள்., குடியானவர்கள் சரியாகக் குத்தகை கொடுத்ததில்லை. அவர்கள் மாட்டுக்கு நல்ல தீனி போடுவதில்லை. வருஷா வருஷம் புது மாடு வாங்குவதற்குக் கடன் கொடுக்க வேண்டியிருந்தது.

மதுவிலக்குச் சட்டம் வந்தது முதல் வீட்டிற்கு வருஷம் 40, 50 ரூ. மிச்சமாகிவிட்டது. ஒவ்வொரு குடியானவனும் தன் சொந்தமாக மாடு கன்று வைத்துக்கொண்டு அவைகளை நன்றாகப் பார்க்க ஆரம்பித்தான். குடியிருப்பு மனைகளுக்கு கிராக்கி ஏற்பட்டது. கண்டிக்கு ஓடுவதை நிறுத்திவிட்டார்கள் நிலத்திற்கு போட்டி வந்தது. ஏகராவிற்கு 15 கலம் கொடுத்தவர்கள் 25 கலம் கொடுக்க முன் வந்தார்கள். வருஷக் கடைசியில் பாக்கியும் வைத்துக் கொள்வதில்லை. இதைத் தவிர அநேக ஜில்லாக்களில் முன் சோளம் மட்டும் சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்கள், அரிசி வாங்க ஆரம்பித்தார்கள். அதனால் நெல் விலையும் கொஞ்சம் உயர்ந்தது. இதெல்லாம் கூடி நம்மைப்போல் கடனில் மூழ்கி யிருந்த மிராசுதார்களை யெல்லாம் காப்பாற்றி விட்டது.

**மீனாக்ஷி :** எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது. ஏழைகளின் துக்கத்தினால் ரூ. 250 லாபமடைவது போய்

அவர்கள் சுகத்தினுல் ரூ. 2500 பெறுவது எவ்வளவு மேன்மை? இதெல்லாம் சாந்தியால் தானே வந்தது? அவருடைய படம் கூட நம்மாத்தில் இல்லையே? எல்லாரும் வைத்திருக்கிறார்களே.

சுந்த: நல்லவேளையாக ஞாபக மூட்டினாய். இன்னைக்கே சென்னைக்குத் தந்தி யடிக்கிறேன். நாளைத் தபாலில் வந்து விடும்.

"விநோசனம்."

---

### மூழ மூடன்.


காட்டில் வேப்பம்பழம் பொறுக்கிக்கொண்டிருந்த ஒருவன் ஒரு புலி ஓடிவருகிறதைக் கண்டு மரத்தின் பின் மறைந்தான். புலி பாய்ந்து அம்மரத்துக்கு இடதுபுறம் ஒருகாலும் வலதுபுறம் ஒரு காலுமாகப்போட்டு மரத்தைப் பிடித்தது. உடனே அவ்வேடுவன் புலியின் இரண்டு கால்களையுங் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். புலி அங்கும் வேடுவன் இங்குமாக இழுத்துக்கொண் டிருக்கும்போது ஓர் மூடசிகாமணி குதிரையின்பேரில் ஏறிக்கொண்டு ஆயுத சகிதம் தோன்றினன். அவனை வேடுவன் வேண்டி ஐயா! தம்முடைய உடைவாளை உருவி இப்புலியை வெட்டி என்னைத் தப்புவியும் உமக்குக் கோடி புண்யமுண்டாகுமென்றான். அம்மூடசிகாமணி, உவே! என் மாமன்பேர் புலிவீரன், எனக்கும் என் மாமனுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது எனக்கூறிவிட்டு அப்புறம் நடந்தான். அப்போது வேடுவன் அவன் மூடனெனவுணர்ந்து ஓர் உபாயஞ் செய்தான். ஐயா பெரியவரே! கொஞ்சம் பொறும். எனக்கு ஒன்றுக்கு வருகிறது; தயவுசெய்து கொஞ்ச நேரம் இந்தப்புலியைப் பிடித்துக்கொள்ளும்; ஒன்றுக்கு இருந்துவிட்டு வாங்கிக்கொள்கிறேனென்றான் உடனே அம்மூட சிகாமணி, அப்படியானுற்சரிஎன்று திரும்பிவந்து புலியைப் பிடித்துக்கொண்டான். உடனே வேடுவன் இம்மூடசிகாமணியின் குதிரையின்மீது ஏறிக்கொண்டு பிரயாணமாயினன். அப்போது மூடன் வேடுவனைக் கூப்பிட்டு ஏ ஐயா! இது தானு உன் சமர்த்து, நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டாயே! என, வேடுவன் ஐயா, மாமன்பாடு மருமகன்பாடு, நான் அன்னியன் சென்று வருகிறேன், பொறுமையாயிரும்.

K. R. சர்க்கரையப்பன்
சாத்தூர்.


நீங்கள் வெகுநாளாய் ஆவலுடன் எதிர்பார்த்த புத்தகம் இதோ வெளிவந்து விட்டது

## ம ங் கை யி ன் மு த் த ம்

மங்கையரை அழகுபெற முத்தமிடும் ஆயிரமுறைகள்



இந்நூலில் முத்தத்தின் ஆதிசரித்திரமும், பிரபஞ்சத்தின் கண்ணுள்ள நாநு தேசங்களின் முத்த வகைகளும், அகசியமிகுந்த விகட முத்தங்களும், முத்த விளையாட்டுகளும் பொதிந்து விளங்குகின்றன. இது யோகிகளின் மனதைக்கூட இழுத்து இல்லற சுகத்தில் அமர்த்தும் சக்திவாய்ந்தது. யௌவன மிகுந்த காதல காதலியர்கள் தம்மில் மனஸ்தாபம் சிறிதுமின்றி காதற் சுகம்பெற உதவும் உத்தமமான நூல் இதுவேயாகும். இதில் கண்ணைக் கவரும் அழகிய ஆப்டோன் படங்கள் பல சேர்க்கப்பட்டிருக்கின்றன. இல்வாழ்க்கையை இன்பத்துடன் நடத்த விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீ புருஷர் கையிலும் இப்புத்தகம் இருக்கவேண்டியது அத்யாவசியமாகும். ஆர்டருக்கு முந்துங்கள். சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன.

சாதா பதிப்பு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2.
பெதர்வெயிட் பேபர் காலிகோபைண்ட் ரூ. 3.
(தபாற் செலவ வேறு.)

கல்பதரு பிரசுராலயம்,
88, ராமசாமி தெரு, சென்னை.




# பாமாலைப் பகுதி

### செங்குந்தர் சிறப்புந்தி.

(மித்திரன்-தொகுதி 2. 38-ம் பக்கத்தொடர்ச்சி).

#### கலித்தாழிசை உந்திகள்.

பூவுல கிற்பொலி தேவாலயப்பணி
மேவுநங் குந்தருக் குந்தீபற
வித்தக சீலரென் றுந்தீபற (கக)

தேவார மைந்தெழுத் துந்திரு வாசகம்
நாவார வோதுவோர்க் குந்தீபற
நற்சிவ பூடணர்க் குந்தீபற (கஉ)

வேலாயு தநவ வீரரிப் பூவினி
லூலாயு நெஞ்சினர்க் குந்தீபற
கோன்புபல் நோற்றோரென் றுந்தீபற (கங)

நாலா விதக்கவி நாவலர் போற்றிட
மேலாங் கவிபெற்றார்க் குந்தீபற
மென்மீசை யுள்ளாரென் றுந்தீபற (கச)

மன்னு மரன்கழு மாமலை பட்சிகட்
கன்ன மளித்தவா றுந்தீபற
ஆண்டகைக் கோளரென் றுந்தீபற (கரு)

முன்னை முசுமுக மன்னர்க் கமைச்செனுஞ்
சொன்னலந் தேர்ந்தவா றுந்தீபற
துரைத்தன முள்ளாரென் றுந்தீபற (கசு)

மாயை மகன்மகன் மாமுகன் மாமுகன்
தீமுகற் செற்றவா றுந்தீபற
சேனுப தியரென் றுந்தீபற (கஎ)

தாயைக்கொ லாவுந்தி தன்வழி யார்குகன்
கோழிக் கொடி யாரென் றுந்தீபற
கொற்றவை வீரரென் றுந்தீபற (கஅ)

வையக மீதின் வழங்குபல் சீர்த்தியின்
றெய்வீக முற்றவா றுந்தீபற
சிவகா ருண்யரென் றுந்தீபற (கக)

ஐவகைப் பூதப் புலனடங் கத்தவம்
செய்வகை யுற்றவா றுந்தீபற
செங்குந்தர் சீர்பாடி யுந்தீபற (20)

---

### செங்குந்தமித்திரன் சீர்விளையாடல்

புன்னுகவராளி—ஆதி.

#### பல்லவி.

ஆடு பாம்பே-கூத்தாடு பாம்பே—நம்
அயிலவ னிசைசொலி—ஆடுபாம்பே (ஆடு)

#### சரணங்கள்.

திருவளர் கயிலையின் சிவன்சேயாஞ்
செங்குந்தர் சிறப்பினை செறியச்செய்த
மருவளர் மணக்குடி வருகதிரோன்
வண்புகழ் மிகசொலி யாடாய்பாம்பே. (ஆ)(க)

காஞ்சிநா கலிங்க மாமுனிவர்
கவின்மிகு சென்னைசண் முகசுந்தரர்
ஆஞ்சபா பதிகச்சி சாமிநாதர்
அனைவரின் புகழ்சொலி யாடாய்பாம்பே.(ஆ)()

துறந்த ஞானிகளுஞ் சுயசாதி
துறந்திடா ரென்பதை மிகவோதி
பறந்து பகலிரவு பட்டபாட்டின்
பத்திரிகை யீதாமென் றாடாய்பாம்பே(ஆ) (ங)

தென்னிந் தியசென்னை செங்குந்தர்
சீர்க்குலமித்திர னெனத்தோன்றி
அன்னியர் மயங்கிட பலநாட்டின்
ஆடல் மகிழ்ந்து விளை யாடுபாம்பே (ஆ) (ச)

மண்டலப் பொழின்மிகு மீரோடு
மகிழ்வுடன் கூடிய மாநாடு
அண்டரும் புகழ்ந்திடு சீர்பாடி
அன்பு மிகுந்துகூத் தாடுபாம்பே (ஆ) (ரு)

திரு. ம. த. சாமிநாதர் கொடியுயர்த்த
திரு. ஆ. வே. முத்தையர் தலைமையிலே
அருமைகிருட்ணநாயர் திறந்துவைத்தார்
ஆதரவினை நினைந்தாடாய் பாம்பே (ஆ) (சு)

தலைவர்கள் சபவர வேற்பினரும்
தமிழ்ப் பெருக்கமுந்தினு மினியவரை
பலவித முயர்காரு ணியமுடனே
பகர்ந்த விதத்தைநினைந் தாடாய்பாம்பே(ஆ)()

பற்பல சமுகங்க ளிதுநேரம்
பாடு படுகின்றது வெகுதூரம்
அற்புத மித்திரன் அணிசேரும்
அனைத்தில வன்வாருமென் றாடுபாம்பே(ஆ) ()

நீராவி டெலிபோ னெலட்ரிசினிமா
　　நிலவுதல் பலகண்டுந் துயிலினமா
யாராவி சுய்நலப் புலி கொலுமோ
　　அயரா தெழுங்கோளென் ருடுபாம்பே (ஆ) (க)

படித்திடு மவர்கட்கு பொருளுதவி
　　பண்புடன் றருவதே பெரும்பதவி
அடுத்ததை மித்திரன் புதுபிரசில்
　　அச்சிட்டு மகிழ்வோமென் ருடுபாம்பே(ஆ)(கo)

பொன்பொருள் மலிகலி யாணம்பூண்டிப்
　　பொ. மு. வெ. முனிசாமி முதலிவேண்டி
அன்புடன் பலசந்தா சேர்த்ததுபோல்
　　அனைவருஞ் சேர்ப்பாரென் ருடுபாம்பே(ஆ) ()

பெற்றதாய்ப் பிள்ளைக்கு வழுதூட்டின்
　　பிரிய மிகுந்துவன்பு பாராட்டும்
பற்றுட ஞெருசிறு பொருளீட்டின்
　　பான்மை தால்நலமென் ருடுபாம்பே (ஆ)(கஉ)

பன்னல மேன்மையின் பதத்தாடே
　　பாரி மகவுடன லகத்தாடே
அன்னி யருக்குமுயர் சுகத்தாடே
　　அவனி யிலுயர்வாரென் ருடுபாம்பே (ஆ)(கஙு)


பத்திரா திபரும் தலைவர்களும்
　　படுபெரும் பாட்டிற்குப் பான்மகிழ்ந்து
அத்துணை குலத்தொண்டி லணியுடனே
　　ஆனந்த் மடைவரென் ருடுபாம்பே. (ஆ) (கச)

(தொடரும்)

நா. குமாரகுரு முதலியார், தமிழ்ப் புலவர்,
கலியாணம்பூண்டி.

---


எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்.




இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்தரவாதம். ரூ. 4-15-0 வி. பி. வேறு.

ஜினன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

---

A Gold-plated Lever wrist watch for Rs. 6-14-0.




எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும் சரியான டைம் காட்டும் வில்லிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்கு நின்று போவதல்ல 5 வருஷமல்ல, பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கடியார கைச்சங்கிலி இனாமாக சேர்த்து அனுப்பப்படும். வீணிலே வில்லிண்டர் கடியாரங்களில் பணத்தை இழக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக்கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள் வாங்கிக்கொண்ட ஒருவாரம் சரியாக ஓடவில்லையென்றால் வாபஸ் ஒப்புக்கொள்ளப்படும். 5 வருஷம் காரண்டியுடன் அனுப்புகிறோம்; இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. ஸ்டாக் கொஞ்சம் உடனே எழுதுங்கள்.

FANCY WATCH HOUSE, *119, G. P. O., Madras.*

---

ரூ. 2-15-0 பௌண்டன் பேனா ரூ. 2-15-0

நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!



இங்கிலாந்தில் செய்து மாகஷிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழ்பெற்றுப் பிரக்யாதி யடைந்த ரிஜஸ்டர்டு W. B. பௌண்டன் பேனா தங்க ப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட் வாட்சு இனாமாய் அனுப்பப்படும். W. B. பவுண்டன் பேனாவும் கடியாரமும் விலை ரூ. 2—15—0.

THE KRISHNA AGENCY,
119, G. P. O. Madras.




# நமது இரண்டாவது மகாநாடு காஞ்சிபுரத்தில் அடுத்த வைகாசிமாதம் நடைபெறும்.

தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு :—ஈரோட்டில் சென்ற வைகாசிமாதம் நடைபெற்ற நமது முதலாவது மகாநாட்டில் தீர்மானித்தபடி செங்கற்பட்டு ஜில்லாவில் தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டை நடத்த வேண்டியதைப்பற்றி ஆலோசிப்பதற்காக 24-11-29உ காலை காஞ்சிபுரம் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் மடத்தில் காஞ்சி செங்குந்த வாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அச்சமயம் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சர்கள் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் ஆகிய இருவரும் திரு. மா. அ. கனகசபை முதலியார் முதலியவர்களுடன் வந்து சேர்ந்தனர். கூட்டத்திற்கு திரு. ம. சாமிநாத முதலியாரவர்கள் தலைமை வகித்தனர். திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் அன்று கூடிய பொதுக்கூட்டத்தின் நோக்கத்தையும் இரண்டாவது மகாநாடு காஞ்சிபுரத்தில் கூட்ட வேண்டியதன் அவசியத்தையும் நன்கு விவரித்தனர்.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன. காஞ்சிபுரத்தில் நம்மவர் இரண்டாவது மகாநாட்டைக் கூட்டவேண்டியதின் காரணமாய் பெரியோர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் நமது வாலிபர் சங்கத்திற்கு அவசியமாக இருப்பதால் இன்று முதல் நமது பெரியோர்களும் அங்கத்தினர்களாக இருக்கும்படி அதன் பெயரைக் காஞ்சிபுரம் செங்குந்த மகாஜன சங்கம் என மாற்றிவைத்துக்கொள்ள வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. அடுத்த வைகாசி உற்சவத்தின்போது மகாநாட்டைக் கூட்டவேண்டுமென இக்கூட்டம் முடிவு செய்கிறது.

3. கீழ்க்கண்ட புதிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் திரு. ம. த. சாமிநாத முதலியார், உபதலைவர்கள் திரு. வி. திருஞானசம்பந்த முதலியார், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், காரியதரிசி சி. அருணாசல முதலியார், உபகாரியதரிசி ம. ப. கோபால் முதலியார். இதுவன்றி பழைய நிர்வாக உறுப்பினர்களோடு ஒவ்வொரு தெருவிற்கும் முக்கியஸ்தர்கள் நிர்வாக உறுப்பினராகச் சேர்க்கப்பட்டனர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வேண்டுகோட்கிணங்கி மகாநாட்டை காஞ்சியில்கூட்ட முடிவு செய்தமைக்குத் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். பின்னர் திரு வி. திருஞானசம்பந்த முதலியாரவர்களால் அனைவர்க்கும் வந்தனங் கூறச் சபை இனிது கலைந்தது.

## எல்லா கிளைச்சங்கங்களின் பொதுக்கூட்டம்,

மகாநாட்டின் வரவேற்புச்சபை அமைப்பதற்காகவும், மகாநாடு சம்பந்தமான ஏனைய ஏற்பாடுகள் செய்வதற்காகவும் நிகழும் கார்த்திகை மாதம் 27உ (12-12-29) வியாழக்கிழமை மாலை 4½-மணிக்குப் பெரிய காஞ்சிபுரம் ஸ்ரீகச்சபேசர் ஆலயத்தில் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள எல்லா கிளைச்சங்கங்களுடையவும் முக்கியஸ்தர்களுடையவும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும் ஒவ்வொரு கிளைச்சங்கமும், கிராமமும் தத்தம் பிரதிநிதிகளை அனுப்பி கூட்டத்தைச் சிறப்பிக்க விரும்புவதோடு மகாநாட்டிற்கான எல்லா ஏற்பாடுகளையுஞ் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

ம. சாமிநாத முதலியார், தலைவர்.
செங்குந்த மகாஜன சங்கம், காஞ்சிபுரம்.

---

### விகடம்

தகப்பனார்—ஏண்டா பையன் அழுகிறான்?
அண்ணன்—ஜலதோஷம் பிடித்திருக்கிறதனால் அழுகிறான்.
தகப்பனார்—அதற்காகவா அழுகிறான்.
தம்பி—இந்த நோய் சனிக்கிழமை பார்த்து வந்ததே; திங்கட் கிழமை வந்திருந்தால் பாடசாலைக்குப் போகாமல் ஒரு நாள் மட்டும் போட்டிருக்கலாமே என்றழுகிறான்.

‘பல் ஜாக்கிரதை’

தங்களுடைய விலாசம் தெரிவித்தால் சுகஜீவி

கல்நார் பற்பொடி

இனுமாக அனுப்பப்படும்.

எங்கள் விலாசம்:—

A. E. முகையத்தீன் மெடிக்கல் ஹால்,

வலங்கைமான், தஞ்சை ஜில்லா.

மாதம் 100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பாதிக்கலாம்

கைத்தொழில் முறைகள்

(திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு)

இந்நூலின் முதற்பதிப்பு 2000 பிரதிகள் சில மாதங்களில் விற்றுப்போயின: இந்தியாவின் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சூரியனைக்கண்ட பனிபோல் போக்கக்கூடிய அரிய புஸ்தகம். சோப்புகள், மெழுகுவர்த்திகள், பிஸ்கத்துகள், இங்கிள், தீக்குச்சிகள், சகலவிதமான வசனை சாமான்கள், மருந்துகள் இதுபோன்ற 1000 இரகசிய முறைகள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. பிறர் உதவியின்றி நாமே தொழில்செய்து சம்பாதிக்கத்தக்க அரிய போதனைகள் அடங்கிய இந்நூலுக்கு விலை மிகவும் சொற்பம் என்பதைக் கவனியுங்கள்.

300 பக்கங்களுள்ளது. எரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது. விலை ரூபா 1—8—0

வாஸன் புஸ்தகசாலை, 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

ஆனந்த விகடன்

(12,000 சந்தாதாரர்களுடையது)

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன; ஆனந்த விகடனில் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதாரர். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா? தபால் கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருடசந்தா ரூ. 1—0—0 அயல் நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1 4—0

மாதிரி காப்பி இனாம். ஆனந்த விகடன் ஆபீஸ்,

தந்தி விலாசம்:—"விகடன்", சென்னை. 244, தங்கசாலை வீதி, மதராஸ், டெலிபோன் 3311.



# செங்குந்தர் கிளர்ச்சி.

## பிரெஞ்சு இந்தியா (புதுச்சேரி).

நமது சங்கத்தின் தலைவர் திரு. ஆ. வே. முத்தையா ஐரோப்பா யாத்திரை செய்து வந்ததைப்பற்றி அன்னோரிடம் அன்பு பாராட்டி வரும் புதுச்சேரி விஸ்வகர்ம பங்காரு வாசகசாலையார் நாளது 1929ளு அக்டோபர்மீ 2-உ ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு ஒரு வரவேற்பு உபசாரம் நடத்தினார்கள். அக்கூட்டம் புதுச்சேரி ப்ரோகூரே சிஸ்து சபைக் கட்டடத்தில் நிறைவேறியது. அது சமயம் நாலு வகுப்பு மரபினர்களும் வந்திருக்க திரு. முதலியாருக்கு வாழ்த்துப்பா வாசிக்கப்பட்டது.

பின்னர் நமது தலைவர் தனது மேல் நாட்டு யாத்திரை அனுபவங்களைப்பற்றி சொற்பொழிவு ஒரு மணி நேரம் நிகழ்த்தினார்கள். அந்த உபந்யாசத்தின் சாரம்:

கேட்டறிவதற்கும் கண்டறிவதற்கும் வித்தியாசமுண்டு. ஒன்றைப்பற்றி கேட்டலால நம்பிக்கையும் அதையே காண்டலால் நிச்சயமும் ஏற்படுகிறது. இந்த வகையில் புத்தகங்கள், பத்திரிகைகள் வாயிலாக நாம் மேல் நாட்டார்களைப்பற்றி கேட்டிருப்பதில் சில பாகத்தையேனும் நேரே கண்டு வந்தது எனது சொந்த அனுபவமாகையால் அதை நண்பர்களுக்கும் தெரிவிப்பது எனது முக்கிய கடமையாகிறது. யான் சொல்லப்போவது எனது சொந்த அனுபவமாகையால் அதற்காக பிறரும் அதை நம்பியாக வேண்டுமென்பதில்லை. சொல்லும் விபரங்களை, நன்காராய்ந்து நமது முன்னேற்றத்திற்கும் நம் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்தவைகளை, சகாயமாக, விருப்பவைகளை நாம கொள்ளுவதே மேல். வெளி நாடுகளில் யாத்திரை செய்வதாவது:—க-வது நமது தேக நிலையை சீர்படுத்துவதற்கும், உ-வது மனப்பான்மையை நோக்குவதற்கும், ௩-வது புத்தி விசாலத்தை அதிகப்படுத்துவதற்கும் சாலப் பொருத்தமானது.

தேக நிலையானது நாம் வதியும் தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்காப்போல விருக்கிறது. வேறு தேசங்களில் நாம பிரயாணம் செய்து வருகையில், அவ்வூர் சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்காப்போல நமது தேகத்தை வைத்துகொள்ள வேண்டி வருகிறது. அதனால் உடைகளின் வித்தியாசங்கள் ஏற்பட வேண்டியிருக்கின்றன. வெளியே சஞ்சாரஞ் செய்யாதவர்களுக்கு உடைகளின் வித்தியாச உண்மைகள் புலப்படா.

மனப்பான்மை அனேகமாக தேக நிலையையும் பொருத்து அதிக சூடான நாடுகளில் நம் தேக வலிகுன்றி நரம்புகள் வெதும்பி அதனால் மனயா... சில துன்ப வழிகளில் நம்மைச் செலுத்துகிறது. அதற்கு விரோதமாக குளிர்ந்த தேசங்களில் தேகம் உறப்பட்டு நரம்புகள் வலிமை யடைந்து நிற்கிறபடியால் மனத்தின் விகாரங்கள் நம் வசப்படக்கூடியனவாயிருக்கின்றன. சில விஷயங்களை, சில பொருட்களைப் பார்த்ததும் நமக்கு இங்கு ஞாபகமாக உண்டாகிற சில தடுமாட்டங்கள் ஆங்கு அதுபோல உண்டாவதற்கு இடமில்லை, நாமே வாதனையைப் பழக்கத்தால் உண்டாக்கினாலன்றி அந்த தடுமாட்டங்கள் தாமாகவே உண்டாகிறதைக் காணவில்லை.

இது மாதிரி ஒரு புதிய உணர்ச்சி நமது மனதில் ஏற்படுவதைப்பற்றி நாம் ஆராய்ந்துவக்கும்போது அனேக மாற்றங்கள் உண்டாகின்றன. நமது புத்தி விசாலமடைகிறது. சில கோணல் அபிப்பிராயங்கள் தொலைக்கின்றன. விஷயங்களைப்பற்றி நடுநிலையாகப் பொது யெண்ணங்கள் தீர்மானங்கள் உதிக்கின்றன.

இவைகளுக்குக் காரணம் வெளிநாட்டு சஞ்சாரமேயாகும். வெளி நாடென்றால் நமது தேசம் நமது இந்தியாவாக விருக்கப்படாதா? ஐரோப்பாவிற்குத் தானு போகவேண்டும் என்று கேழ்க்கலாம். நம் நாடு வெளி நாடல்ல. நமது பழக்க வழக்கங்களுக்கும் நமது மத விஷய நடவடிக்கைகளுக்கும், நமது புதிய போக்குகளுக்கும் ஐரோப்பாவில் நடைபெறும் வாழ்க்கைகளுக்கும் சால வேற்றுமைகளுண்டு. ஆகவே இந்த குறைகளில் வெளி நாடென்பது ஐரோப்பாவாக விருத்தல் பொருத்தமுடைய தென்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்.

இந்த யாத்திரையில் நாம் கண்டு கொள்ள வேண்டியன யாவை?

உடைகளின் நேர்மை—சுத்தம் வெளியே புறப்படக்கூடிய தேகப்பகுதிகளின் அமைப்பைப்பற்றி கவனித்தல், சுத்தம், சுத்தம் என்ற வகையில் மேல்நாட்டாருடைய சுத்தத்திற்கும் நமதோாது சுத்தத்திற்கும் வித்தியாசமுண்டு. அன்னோர்களுக்கு நீண்டல் பார்த்தல் இவைகளில் சுத்தமில்லை. நமக்கு ஆடை அழுக்காயிருந்தாலும் அதை இன்னும் ஆபாசமான குட்டையில சலத்தில் அமிழ்த்தி யெடுத்தால் சுத்தமாய் விடுகிறது. இதன் வித்தியாசங்களைத் தெளிந்துணர்க.

பேசும் மொழிகளில் சிறப்பு, அமைதி, அன்பு, நயம், பாஷாபிமானம்.

தொழில்களில் அபிவிருத்தியை எப்பொழுதும் நாடுதல், எத்தொழிலும் நற்றொழிலென்ற எண்ணம். வேலை செய்தலில் ஆசை, ஊக்கம், நாணயம்.

மதசம்பந்தமாக, குருட்டபிப்பிராயங்களில் அவர்கள் நமக்குப் பின்னிட்டவர்களல்ல. பழகிப் புதுமைகள், அண்ணாமலை ஆரவாரங்கள் போன்ற பன்

மடங்கதிகமான கும்பல் கேளிக்கைகளுண்டு. கோயிலில் ஆண்டவனை வந்துக்கண்டு போனதை யெண்பிக்க சிறு துணித்துண்டை வெட்டி வைத்துவிட்டுப் போகிறார்கள். காலடக்கம், கண்ணடக்கம் முதலியவைகளுண்டு. ஆனுலிவைகளெல்லாம் அறிவின்மையென்று சொல்பவர்களும் உண்மை விசாரணை செய்பவர்களும் காணப்படுகிறார்கள். இவர்கள் விரிந்த நோக்குடன் துவேஷமின்றி, ஆராய்ச்சி செய்பவர்களாவார்கள். நம் தேசத்தில் காண்பதுபோல இவர்கள் மதம், கட்வுள் யென்பதாக ஆகாயத்திலேயே பறந்துக்கொண்டில்லாமல் இத்திலும் முக்கியம் கவனிக்கவேண்டிய வாழ்க்கையிருக்கிறது. தனி வாழ்க்கை சமூகவாழ்க்கை இவைகளைச் சீர்படுத்துவதே இறைபணி செய்தலென்னும் முன்னோக்கமுடையோர்கள்.

இது போன்ற பல நுணுக்க விஷயங்களை உதாரணங்களுடன் விளக்கிக் காட்டியதை இங்கு சுருக்கமாகவே குறிப்பிடப்பட்டது.

உ.பன்னியாசம் கரகோஷத்துடன் முடிவுபெற்றது.

இந்த உபசரணை நடப்பதற்கு முன்னதாகவே திரு. முதலியாரவர்களை புதுவை செங்குந்த சங்கத்தாரும் அவருடைய கழகம் சென்று உபசாரணைசெய்தார்கள்.

**சென்னை திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கம்.**

1929-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27-ம் நாள் கூடிய நிர்வாகசபைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறப்பெற்றது பாராட்டற்குரியதாகும்.

"செங்குந்த குல வள்ளலான திருவாளர் இ. நா. சபாபதி முதலியார் அவர்களும் திருவாளர் S. இரத்தினவேலு முதலியார் அவர்களும் முறையே திருவாரூர் முனிசிபல் தேர்தலிலும், சைதாப்பேட்டை முனிசிபல் தேர்தலிலும் வெற்றியடைந்தமை குறித்து இச்சங்கம் மிக மகிழ்வதாக அறிவித்துக் கொள்ளுகிறது.

1929-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 7-ம் நாள் மாலை 5½-மணிக்கு ஷை சங்க ஆதரவில் திருவாளர் P. M. முனுசாமி முதலியார் அவர்கள் அவைத் தலைமையில் திரு. M. S. கானத்தி முதலியார் அவர்கள் "அறம்" என்பதைப்பற்றி விரிவுரை நிகழ்த்தியபின் இதைத் தழுவி 9 நண்பர்கள் பேசினார்கள். இறுதியில் அவைத் தலைவர் முடிவுரை கூறிய பின் வந்தனோபசாரம் கூறப்பட்டதும் இரவு 8-மணிக்குக் கூட்டமினிது கலைந்தது.

1929-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 22-ம் நாள் மாலை 6-மணிக்கு மாஜி உப தலைவர் திருவாளர் கா. முனிசாமி முதலியார் அவர்கள் அவைத் தலைமையில் மகாஜன சங்க உப தலைவரும் இச்சங்கத் தலைவருமான திருவாளர் S. குழந்தைவேலு முதலியார் அவர்கள் Manager F. P. B. திருமயிலை ஸ்ரீசெல்வ விநாயகர் வெள்ளீசர் தேவஸ்தான மூன்றும் தர்மகர்த்தராக நியமிக்கப் பெற்றமையைக் குறித்துப் பாராட்டக் குலத்தவர் கூட்டமொன்று ஷை சங்க வாசகசாலையில் கூடிற்று.

அவ்வமயம் திருவாளர்கள் M. சரவண முதலியார் அவர்கள், E. L. கந்தசாமி முதலியார் அவர்கள், P. M. முனுசாமி முதலியார் அவர்கள் ஆகிய மூவர்கள் பாராட்டிப் பேசிய பின்பு திரு. S. குழந்தைவேலு முதலியார் அவர்கள் தக்க பதிலளித்தலும் திருவாளர்கள் M. தனகாளத்தி முதலியார், A. வேலு முதலியார், S. குழந்தைவேலு முதலியார் ஆகிய ஷை மூன்று தேவஸ்தான தர்மகர்த்தர்களுக்கும் நீண்ட கரகோஷத்தினிடையே மாலை மரியாதை செய்யப்பட்ட பின்பு வந்தனோபசாரம் கூறியவுடன் இரவு 8-மணிக்கு கூட்டமினிது கலைந்தது.

1929-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் நாள் மாலை 5½-மணிக்கு புராணிகர் திருவாளர் கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் அவைத் தலைமையில் திருவாளர் M. V. சிங்காரவேலு முதலியார் "ஆலய வழிபாடு" என்பதைப்பற்றி நீண்டநேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்பு அவ்விஷயத்தைத் தழுவி 3 நண்பர்கள் பேசிய பிறகு அவைத்தலைவரின் முடிவுரை கூறலும் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 8-மணிக்குக் கூட்டமினிது கலைந்தது என காரியதரிசி எழுதுகிறார்.

## தென்னாற்காடு ஜில்லா.

**நாட்டார்மங்கலம் செங்குந்த வாலிபர் சங்கம்.**

18-11-29உ கூடிய பொதுக்கூட்டத்தில் சோதிடம் ச. சு. நடராஜ முதலியார் முன்னுரை கூறியதும் திருவாளர்கள் உபதலைவர் மு. க. ச. மாணிக்க முதலியார், அமைச்சர் ப. ஆ. முருகேச முதலியார், க. அ. பிச்சாண்டி முதலியார், ஆ.பழனி முதலியார், கொ. சா. மாணிக்கமுதலியார், பு. ஆ. வைத்தியலிங்கமுதலியார் ஆகியோர் முறையே கல்வியும்ஞானமும், கொல்லாமை, ஆலயவழிபாடு, இல்லறம், நல்லொழுக்கம், உபவாசம் முதலிய பொருள்பற்றி உபந்யசித்தனர். தலைவர் கல்விநிதிச்சீட்டை ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டுமென வற்புறுத்தினர்.

பின்னர், இவ்வாலிபர் சங்கத்தைத் தலைச்சங்கத்தோடு இணைக்க வேண்டுமென்றும், ஆண்டுக்கட்டணம் செலுத்தவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டு இரவு 11-மணிக்கு கூட்டம் இனிது நிறைவேறியது என காரியதரிசி எழுதுகிறார்.

## தஞ்சாவூர் ஜில்லா.

**சைவசமாச சன்மார்க்க செங்குந்தர் சங்கம்.**

**சுந்தரப்பெருமாள் கோவில்.** 16-11-29உ சனிக்கிழமை மாலை 6-மணிக்கு மேலவீதி செங்குந்தர் பொதுமண்டபத்தில் நமது சங்கம் கூடப்பட்டது தலைவர் அவர்கள் தலைமையின்கீழ் திரு. சா. ப. முருகையா முதலியார் தூர்வையின் (அருகு) மகிமையையும் அதற்கும் விநாயகருக்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றியும் முயற்சி என்பது பற்றியும், நான்காம் வகுப்பு M. கணபதி விப்பிர விநாயகர் அவதாரத்தைப்பற்றியும் கோகரண ஸ்தலத்தைப்பற்றியும் மிகத் தெளிவாக இனிய மொழிகளால் சொற்பொழிவு நிகழ்த்தியபின் காரியதரிசி அவர்கள் முடிவுரையுடன் சந்தன புஷ்ப தாம்பூலம் வழங்கப்பெற்று பெருத்த கரகோஷத்தினிடையே நமது கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது நிறைவேறியது.



**அனுதாபம்.** குலப்பற்றும் சமூகசீர்திருத்தங்களில் ஆர்வமுமுடைய நம் குலப்பெரியார் நாட்டாண்மை திரு. சு. மருதை முதலியார் அவர்கள் 19-11-1929 இரவு 8 மணிக்கு காலஞ்சென்றதைக் குறித்து இச்சங்கம் வருந்துகின்றது. மேலும் அன்னார் ஆன்மா சாந்தியடையுமாக அவர் குமாரர் திருவாளர் ம. அப்பாசாமி முதலியார் அவர்களுக்கு இவ்வநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறதென காரியதரிசி எழுதுகிறார்.

சுந்தரப்பெருமாள் கோவில் மேலவீதி செங்குந்தர்கள்பொதுமண்டபத்தில் 30-11-29 சனிக்கிழமை மாலை 4-மணிக்கு திரு. மு. ச. நடராஜ முதலியார் தலைமையில் பொதுக்கூட்டம் கூட்டப்பெற்றது.

திரு. மு. சா. நடராஜ முதலியார் கணபதி பூஜை நடத்தியபின் செல்வத்திருவாளன் M. கணபதி வல்லானால் பூஜிக்கப்பட்ட வல்லாள கணபதியின் மகிமையைப்பற்றியும் அவர் பூஜையைத் தடுத்த தகப்பனாகிய கல்யாணன் அடைந்த துன்பங்களைப்பற்றியும் P. நடராஜ முதலியார் கல்வி என்பதைப்பற்றியும், பேசியபின் M. நடராஜ முதலியார் சங்கத்தின் நோக்கம் என்பதைப்பற்றி கேட்பவர் மனங்கவரும்படி உபந்நியாசித்தார்.

பிறகு தனுர்பூஜைக்காலமாகிய மார்கழித்திங்களில் பிராதக்காலத்தில் இச்சங்கத்தின் ஆதரவில் நடப்பிக்கும் தேவார கோஷ்டிக்கு ஒவ்வொரு அங்கத்தினர்களும் தவறாது விஜயம் செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பெற்று காரியதரிசி அவர்களின் முடிவுரையுடன் சந்தன புஷ்ப தாம்பூலம் வழங்கப்பெற்று இரவு 9-மணிக்கு கூட்டம் இனிது நிறைவேறியதென காரியதரிசி எழுதுகிறார்.

**உள்ளிக்கடை செங்குந்தர் சங்கம்.**

6-10-29உ இரவு 8-மணிக்கு இவ்வூர் பாலசுந்தரமூர்த்தி விநாயகர் மடத்தில் திரு. பெ. சாமிநாத முதலியாரவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் கூடியது. திரு N. G. சாமிநாதமுதலியாரவர்கள் சென்ற மீட்டிங் நடவடிக்கைகளை எடுத்துக்கூறியபின், சி. க. சா. நடராஜன், M. S. சிவகுருநாத முதலியார், V. S. குமாரசாமி முதலியார், V. C. முருகேசமுதலியார், ம. கு. சாமிநாத முதலியார், N. T. பரமசிவ முதலியார், நா. சாமிநாத முதலியார், ஆ. நாராயணசாமி முதலியார் முதலியோர் முறையே அம்மையாரின் அற்புதம், அன்னதான மகிமை, ஊக்கம், ஒழுக்கம், சுகாதாரம், கைத்தொழில் என்பனபற்றி உபந்யசித்தபின் வந்தனோபசாரம் கூறியதும் சந்தனதாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது நிறைவேறியது.

13-10-29-ல் மேற்படி மடத்தில் திரு. சி.க. சாமிநாத முதலியார் தலைமையில் கூடியபொதுக்கூட்டத்தில் திரு. வா. சி. முருகேச முதலியார் ஞானசம்பந்தர் சரித்திரத்தைத் தெளிவுபட உபந்யசித்ததும் திரு ம. சிவகுருநாத முதலியார் அனைவருக்கும் வந்தனோபசாரம் கூற சபை இனிது நிறைவேறியது.

20-10-29உ இரவு 7-மணிக்கு செங்குந்த வாலிபர் சங்க ஆதரவில் ஷை மடத்தில் புரசகுடி பண்டார்த்திகா ஐய்யாவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் கூடியது. கடவுள் வாழ்த்துக்குப் பின், சென்னை ஸ்ரீ வீ. ராமநாதய்யரவர்கள் தாயுமானார் சரிதத்தை விளக்கமாக உபந்யசித்தனர். பின்னர் காங்கிரஸ் மெம்பரி லொருவரும், அகரமாங்குடி கோகலே வாசகசாலை ஸ்தாபகருமான ஸ்ரீஜப்பேசய்யரவர்கள் ஒற்றுமை, புலான் மறுத்தல், மதுபானத்தால் நேரும் தீமைகள் முதலியவற்றை தெளிவுபடக் கூறினர். திரு. வா. சி. முருகேச முதலியார் பஞ்சமாபாதகங்களைப் பற்றியும், திரு. ம. சா. சிவகுருநாதமுதலியார் மோக்ஷ நெறிபற்றியும் திரு. வா. ச. குமாரசாமி முதலியார் அன்னதானச் சிறப்பு பற்றியும் உபந்யசித்ததும் N. G. சாமிநாத முதலியார் அனைவர்க்கும் வந்தனோபசாரம் கூறசசபை இனிது நிறைவேறியது.

1-11-29உ மாலை 4-மணிக்கு திரு. வா. சக்திவேல் முதலியார் இல்லத்தில் கூடிய கூட்டத்தில் திரு. ம. சா. சிவகுருநாதமுதலியாரவர்கள் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சரிதையை விரிவாக உபந்யசித்தார். பின், சுந்தரப் பெருமாள் கோவில் திரு. ராமய்ய முதலியார் ஜீவகாருண்யம் என்பதுபற்றி அரிய உபந்யாசம் செய்தபின் கா. சாமிநாத முதலியாரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபைகலைந்தது.

திரு. சி. க. சாமிநாத முதலியார் இல்லத்தில் சூரசமஹாரம் நடத்தவேண்டியதற்கு ஏற்பாடு செய்து வீரவாகுதேவர் ஆறுமுதல் சமஹாரம் வரைக்கும் ஸ்காந்த புராணம் வாசித்து கந்தர சஷ்டிவிரதம் அனுஷ்டித்து 7-ம் தேதி ஸ்ரீமுருகப்பெருமானுக்கு பட்டத்திற்கு அலங்கார ஆராதனைகள் முடிந்தபின் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டது.

## இராமநாதபுரம் ஜில்லா.

**செங்குந்த வாலிபர் சங்கம்.**

**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

15-11-29உ வெள்ளிக்கிழமை மாலை 7-30-மணிக்கு ஸ்ரீ ஜெகந் விநாயகர் கோவிலில் திரு.சு. மாயாண்டி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஷை சங்கக்கூட்டம் கூடியது. அவ்வமயம் ஷை சங்க பிர

சாரகர் திரு. ச. சோமசுந்திர முதலியாரவர்கள் ஒற்றுமை யென்பதுபற்றி நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பின் திரு. கி. கு. சிவசுப்ரமணிய முதலியாரவர்களும் திரு. ரு. சுப்பையா முதலியார் அவர்களும் பொது விஷயங்களைக் குறித்துப் பேசியபின் தலைவர் முடிவுரையானதும் திரு. ரு. சுப்பையா முதலியார் அவர்கள் வந்தனோபசாரம்கூற இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

## திருநெல்வேலி ஜில்லா.

### செங்குந்த குலகுருவின் சமயப் பிரசாரம்.

திருநெல்வேலி ஜில்லாவிற் பெரும்பாலான செங்குந்தர்களுக்குக் குருவாக இருக்கிற காஞ்சீபுரம் ஸ்ரீகச்சயாளவாந்த வள்ளலார் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவசுவாமி தேசிகர் அவர்கள் கடந்த ஒரு மாதகாலமாக இச்ஜில்லாவிற் பல பாகங்களிலுமுள்ள செங்குந்தர்கள் அற ஒழுக்கங்களில் முன்னேற்றமடையப் பிரயாசை எடுத்துவருகிறார்கள். அவர்கள் 25-9-29-ல் திருநெல்வேலிக்கு வந்தார்கள். ரயில்வண்டி நிலையத்திலேயே குலப்பிரமுகர்கள் வரவேற்றனர். அன்று இரவு குருபக்தி என்பதுபற்றியும், பின்னர் 27-9-29: 6, 7-10-29தேதிகளில் முறையே திருக்குறிப்புத் தொண்டர், சிவநெறி செங்குந்தர் முன்னேற்றம் என்பன பற்றியும் சொற்பெருக்கிட்டார்கள். கடைசி நாளில் திருநெல்வேலியில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் திருத்தி அமைக்கப்பட்டு, உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின் பல மெம்பர்களும் சேர்க்கப்பட்டனர். பின்னர் கன்யா குமரி தெரிசித்துவிட்டு, 20, 21 தேதிகளில் வடசேரியில் முறையே நன்னெறி, நாவுக்கரசரும் நமதுகடமையும் என்பவை பற்றி பிரசங்கஞ் செய்தார்கள். பின் 26, 27, 28 தேதிகளில் திருநெல்வேலி நெல்லையப்பர் தேவஸ்தான ஆதரவில ஆறுமுக நயினர் சன்னிதியில் பிரசங்கங்கள் நடைபெற்றன. முதலில் தேவஸ்தானத்திலிருந்து குருக்களுக்கு பட்டுக் கட்டுதல் முதலிய மரியாதைகள் விமரிசையாக நடந்தன. முதல் நாள் தேசிகர் அவர்கள் தலைமையில் ஸ்ரீமான் முத்துக்குமாரசுவாமி பிள்ளை திருப்பணி என்பது பற்றியும் ஸ்ரீமான் வச்சிரவேலு முதலியார் B. A. நாவுக்கரசும் நமது கடமையும் என்பதுபற்றியும் பேசினார்கள். மறுநாள் கந்தர் கருணை என்பது பற்றியும், கடைசி நாள் மாணிக்கவாசகர் என்பதுபற்றியும் தேசிகரவர்கள் குழலும், யாழும் குழைத்தன்னமொழியில் இனிமையாகப் பேசினார்கள். முடிவில் தேவஸ்தானத்தின் சார்பில் தருமகர்த்தர் ஸ்ரீமான் சுப்பிரமணிய பிள்ளையவர்களும் நகரத்தினர் சார்பில் ஸ்ரீமான் சுந்தரஓதுவா மூர்த்தியவர்களும், செங்குந்தர்களின் சார்பில வக்கீல ஸ்ரீமான் சங்கரசுப்பிரமணிய முதலியார் பி.ஏ., பி.எல், அவர்களும் வந்தனங்கூறி தேசிகரவர்களுக்கு பூமாலை சூட்டினார்கள். பின்னர் ஸ்ரீ ஆறுமுக நயினர் சந்நிதியிலிருந்து பிரசாதம், பூமாலை முதலியன தேசிகரவர்களுக்கு வழங்கப்பெற்று கூட்டம் இனிது கலைந்தது.

5-11-29-உ மாலை 5-30-மணிக்கு திருநெல்வேலி பெரிய தெரு பஜனை மடாலயத்தில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் திரு அ.சு.வ. சிதம்பரநாத முதலியார் தலைமையில் கூடிய போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. இச்சங்கத்தின் சார்பாக பஜனை மடாலயத்தில் ஒரு வாசகசாலை கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்த வேண்டுமென்றும் அவ்வாசக சாலைக்கு அறிஞர்களாலும் மெய்யன்பர்களாலும் உபசரிக்கப்படுகின்ற சிவநேசன், சித்தாந்தம், செங்குந்த மித்திரன், ஞான அரசு, நவசக்தி முதலிய கடவுள் கொள்கைக்கும் சமய உண்மைக்கும் முரண்படாத பத்திரிகைகளை வருவித்தல் வேண்டுமென்றும், தேசீய உணர்ச்சி உண்டாக்குதற் பொருட்டு தமிழ் நாடு; சுதேச மித்திரன் வருவித்தல் வேண்டுமென்றும் ஏகமனதுடன் நிறைவேற்றப்பெற்றன.

14-11-29 வியாழக்கிழமை மாலை 7-மணிக்கு ஷை தெரு பஜனை மடாலயத்தில் காஞ்சிபுரம் ஸ்ரீமான் க. வச்சிரவேலு முதலியாரவர்கள் B.A., ஆலய வழிபாடு என்பது பற்றி உபந்யாசித்தார்கள். இடையிடையே தேவாரங்கள் நடைபெற்றது. அன்பர்கள் யாவர்களும் வந்து கேட்டு இன்புற்றார்கள். ஷையூர் சங்கக காரியதரிசி S. கணபதி முதலியார் B.A., மாணவர் அவர்கள் வந்தனம கூறியபின் கூட்டம் இனிது கலையப்பெற்றது என காரியதரிசி எழுதுகிறார்.

### சிந்தாமணி செங்குந்தர் சங்கம்.

1105ஆம் புரட்டாசி௴ 5௳ வெள்ளிக்கிழமை கூடிய கூட்டத்தில் சங்க நிர்வாகஸ்தர்களாக கீழ்க்கண்டவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

திரு. கி. வ. கோட்டியப்ப முதலியார் அவர்கள் பிரசிடெண்டு. திரு. T. R. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் வைஸ்பிரசிடெண்டு. திரு. N. பூரணலிங்க முதலியார் அவர்கள் செக்ரடேரி. திரு. S. K. ராமஸ்வாமி முதலியார் அவர்கள் சீனியர் பொக்கிஷதார். திரு. A. S. ராமஸ்வாமி முதலியார் அவர்கள் ஜூனியர் பொக்கிஷதார்.

மெம்பர்கள்

திருவாளர்கள், S. S. சின்னி செட்டியார், பா. வ. சுப்ரமண்ய முதலியார், பா. ந. பரமசிவ முதலியார், பெ. ப. முப்புடாதி முதலியார், ச. மீ. கோபால்முதலியார், மா. சி. முப்புடாதி முதலியார்.

பின்னர் சங்கம் மெம்பர்கள் மாதம் ஒன்றுக்கு ஒரு அணா சந்தா செலுத்த வேணுமாயும் இச்சங்கத்திற்கு வேண்டிய விதிகள் கொண்டுவந்து அடுத்த மகாசபையில் ஆஜர் செய்யவேணுமாய் சங்கம் செக்ரட்டேரி அவர்களை கேட்டுக் கொள்வதாயும் ஒவ்வொரு மாத கார்த்திகையிலும் கடைசி சுக்ரவாரத் தன்றும் மகாசபை கூட்ட வேணுமாயும் தீர்மானிக்கப்பட்டபின் உயர்திரு பா. நயினர் முதலியார் அவர்கள் நல்லொழுக்கத்தை யெடுத்துச் சொல்லிய பின் புஷ்பஹாரம் சூட்டப்பட்டு இரவு 9-மணிக்குக் கூட்டம் கலையப்பெற்றது.

1105ஆம் புரட்டாசி௴ 7௳ ஞாயிற்றுக்கிழமை அன்று கூடிய நிருவாக சபைக்கூட்டத்தில் இந்த மாத சந்தாவை வசூலிக்கவேண்டியதற்காக பொக்கிஷதாரர்களோடு 5 பேர்கள் அடங்கிய டைரக்டரூவ் எக்ஸ்பான்சன் கமிட்டியாக இசனடியில் கண்டவர்கள் இருக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

1105ஆம் புரட்டாசி௴ 8௳ திங்கட்கிழமை இரவு 7-மணிக்குக் கூடிய பொதுக்கூட்டத்தில் உயர் திரு. பா. நயினர் முதலியார் அவர்கள் ஒட்டக்கூத்தரைப்பற்றி ஓர் உபன்யாசம் செய்தனர். அதன்பின் கூட்டம் கலையப் பெற்றது.

கி. வ. கோட்டியப்ப முதலியார்,
தலைவர்.

## கோயமுத்தூர் ஜில்லா

### குளத்துப்பாளையம் முன்னேற்றக் கழகம்.

17-11-29-௳ மாலை 3-மணிக்கு குளத்துப்பாளையம் விநாயகராலயத்தில் இலவம் பாளையம் திரு. E. V. துரைசாமி முதலியார் தலைமையின்கீழ் 5வது பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுற்றுப் பக்கத்து ஊர்களாகிய தொண்டாமுத்தூர் முக்திபாளையம், புத்தூர் கொண்டிபாளையம், உலியம் பாளையம் முதலிய ஊர்களிலிருந்து செங்குந்தர்கள் இச்சங்கத்திற்கு வந்திருந்தனர்.

தன்னலம் கருதாது பிறர் நலத்தையே கருதும் திரு. E. V. துரைசாமி முதலியார், நாம் எவ்விதமாக ஒழுகினால் முன்னேற்றத்தையும், பேரின்பத்தையும் அடையலாம் என்பதுபற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்.

முத்திபாளையம் M. R. பெருமாள் பெரியோருக்கு ஒரு விண்ணப்பம் என்னும் விஷயத்தைக் கொண்டு, செங்குந்த மித்திரனை ஆதரிக்கவேண்டுமென்றும் கல்விநிதிக்குப் பெருங் கொடையளிப்பதோடு கல்விநிதிச்சீட்டை ஆதரிக்க வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்.

K. P. ராமசாமி விடாமுயற்சி என்பதைப்பற்றி உபந்யாசம் செய்தார். V. K. M. அப்பா அவர்கள் ஞான உலகம் என்பதைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினர். பின்பு அடியிற்கண்ட உத்தியோகஸ்தர்களை திரு. E. V. துரைசாமி முதலியாரால் நியமிக்கப்பட்டது.

தலைவர் ஷையூர் திரு. சிதம்பர முதலியார், உபதலைவர் புத்தூர் திரு வடிவேல் முதலியார், காரியதரிசி திரு. K. P. ராமசாமி, உதவிக்காரியதரிசி M. R. பெருமாள், பொருள் காப்பாளர் S. தேவண முதலியார், கணக்குப் பரிசோதகர் திரு. பெரியதனம் வேலாயுத முதலியார் இன்னும் 20 மெம்பர்கள் அங்கத்தினராகச் சேர்க்கப்பட்டனர்.

இச்சங்கம் மாதாமாதம் தவறாமல் நடந்துவரவேண்டுமென்றும் இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மாதந்தோறும் 1 அணா சந்தா செலுத்தவேண்டு மென்றும் இச்சங்கத்தைச் சென்னையிலிருக்கும் நமது தலைச்சங்கமாகிய தென்னிந்தியசெங்குந்த மகாஜனசங்கத்தின் கிளைச்சங்கமாக்கி வருடந்தோறும் ஐந்து ரூபாய் செலுத்தி வரவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன.

இரவு 7-மணிக்கு வந்தனோபசாரத்தோடு சபை இனிது கலைந்ததென காரியதரிசி எழுதுகிறார்.

## மலையாளம் ஜில்லா.

### கொச்சி.

கொச்சி தேசத்தை (Cochin state)ச்சேர்ந்த, வித்தலஞ்சேரியில், அவ்வூர் நாட்டாண்மைக்காரர், திரு. மு. முத்து சிதம்பர முதலியார் அவர்களுடைய நன்முயற்சியால், புரட்டாசி௴ 16௳ பகல் சுமார் 3-மணிக்கு, மாரியம்மன் கோயிலில் ஒரு பொதுக் கூட்டம் கூடி, "செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்" என்னும் பெயருடன் ஒரு சங்கமும் ஏற்படுத்தி, மாதாமாதம் பொதுக்கூட்டங்கள் நடத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தலைவர் நாட்டாண்மை மு. முத்துசிதம்பர முதலியார், உபதலைவர் ரா. குப்ப முதலியார், காரியதரிசிகள், சா முத்துகருப்ப முதலியார், மு. நாராயண முதலியார், நிர்வாகசபை அங்கத்தினர்கள் ப. சின்னு முதலியார், வை, நாகு முதலியார் ரா. சுப்பிரமண்ய முதலியார், ப. மாரியப்ப முதலியார், கூடலூர் மா. முருக முதலியார்.

## தலைச்சங்கப் பிரசாரம்

### சேலம் அம்மாபேட்டை.

சேலம் அம்மாபேட்டை செங்குந்த மகாஜன சங்கத்தின் முதலாவதாண்டு விழா நிகழும் கார்த்திகை௴ 22, 23௳ (7, 8-12-29) சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் ஷை சங்க மாளிகையின் முன்பாக இதற்கென அமைக்கப்பட்ட ஓர் பெருங்கொட்டகையில் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சரும், செங்குந்த மித்திரன் ஆசிரியருமாகிய திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருநெல்வேலி வக்கீல் திரு. V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் B.A., B.L., அவர்கள் செங்குந்தர் கொடியுயர்த்தினர். தலைச்சங்க அமைச்சரும், நமது மித்திரனின் உதவி ஆசிரியருமாகிய திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் கூட்டத்தைத் திறந்து வைத்தார். இரு தினங்களிலும் பல அறிஞர்களது உபந்யாசங்கள் நடை

பெற்றன. அபிரச்சனைக்கான மகா ஜனங்கள் கூடியிருந்தனர். இடையிடையே ஜே என்ற கோஷ்டம் வானைப்பிளந்தது. முக்கியமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. இரண்டாவது நாள் முடிவில் சங்கத்திற்கு 1930-ம் ஆண்டிற்குப் புதிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனோபசாரத்துடன் ஆண்டு விழா இனிது நிறைவேறியது.

முழு விவரம் அடுத்த மாத மித்திரனில் வெளியிடப்பெறும்.

**காஞ்சி—ஐயர்பேட்டை**
**செங்குந்தர் வாலிபர் சங்கம்.**

இச்சங்கத்தின் ஆதரவில் 25-11-29ௗ மாலை 6-மணிக்கு போர்டு பாடசாலைக் கட்டடத்தில் ஓர் பொதுக் கூட்டம் கூடியது. இக்கூட்டத்திற்குச் சென்னையிலிருந்து திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், திரு. மா. அ. கனகசபை முதலியார், காஞ்சி. திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், திரு. கா. செ. கந்தசாமி முதலியார், பரமானந்த முதலியார், முதலியோர் வந்திருந்தனர். கட்டடம் முழுதும் கூட்டம் நிறைந்திருந்தது. திரு. ம. செய்வசிகாமணி முதலியாரவர்கள் தலைமை வகித்தார். கடவுள் வாழ்த்து ஆனதும் தலைவர் முன்னுரைக்குப்பின் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் "தலைச்சங்க வேலைகள்" என்பது பற்றியும், திரு. மா. அ. கனகசபை முதலியாரவர்கள் "நமது மகாநாடு" என்பது பற்றியும் திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள் "செங்குந்தர் கடமையும், இரண்டாவது மகாநாடும்" என்பது பற்றியும் உபந்யசித்தனர். பின்னர், தலைவர் முடிவுரை கூறியதும் வந்தனோபசாரத்திற்குப் பின் இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

**செங்கற்பட்டு ஜில்லா**
**திருக்கழுக்குன்றம்.**

26-10-29 மாலை 5 மணிக்குத் திருக்கழுக்குன்றம் தேசமுகிப்பேட்டை, உய்யால்வார் பேட்டை, கானகோயில் பேட்டை, ஆகிய மூன்று பேட்டையிலுள்ள செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று மூவர் கோயில் மகா மண்டபத்தில் திரு. செங்கல்வராய முதலியார் தலைமையில் கூடியது. அவ்வமயம் தலைச்சங்கப் பிரதிநிதிகள், திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியார், சு. திருநாவுக்கரசு முதலியார் ஆகிய இருவரும் வந்திருந்தார்கள். திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் செங்குந்தர் முன்னேற்றம் என்னும் விஷயத்தை 2-மணி நேரம் வரை உபந்யசித்தார். திரு வே. நடேச முதலியார் அவர்கள் பிரதிநிதிகளுக்கும் தலைவருக்கும் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இரவு 10-மணிக்கு இனிது நிறைவேறியது.

**உறத்தாட்டுப்பேட்டை.**

27-10-29 இரவு 7-மணிக்கு ஸ்ரீகுணந்தந்த ஈஸ்வரன் கோயில் அலங்கார மண்டபத்தில் திருவாளர் வீ. சுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய செங்குந்தர் பொதுக் கூட்டத்தில் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் "இனி நாம் செய்ய வேண்டிய வேலை" என்பதைபற்றி உபந்யசித்தார். இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

**நந்தீவரம்.**

5-11-29-ல் மாலை 3-மணிக்கு நந்தீவரம் திரு. மா. முனிசாமி முதலியார் தலைமையில் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் திரு. தி. அ. சண்முக முதலியார் "நாம் செய்யவேண்டியது என்ன" என்பதைப்பற்றியும், திரு. மா. அ. கனகசபை முதலியார் "தலைச் சங்கமும் கிளைச்சங்கமும்" என்பது பற்றியும் உபந்யசித்தார்கள். உபந்யாசத்தின் பயனாய் அவ்வூரில் நந்தி விநாயகர் செங்குந்தர் சங்கம் என்ற பெயருடன் ஒரு கிளைச் சங்கம் நிறுவப்பெற்றது.

தலைவர் திரு. மா. முனிசாமி முதலியார், உபதலைவர், திரு. கு. வேதாசல முதலியார், காரியதரிசி, திரு. ப. கா. திருவேங்கட முதலியார், கமிட்டி மெம்பர்கள், திருவாளர்கள் தி. நமசிவாய முதலியார், வே. முருகப்ப முதலியார், தி. ராமசாமி முதலியார், சை. பொ. ரத்தின முதலியார். வருடப்பிரதி வருடம் சென்னையிலுள்ள தலைச்சங்கத்திற்கு 5 ரூபாய் கட்டணஞ் செலுத்தி வரவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு இரவு 6-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

---

**சொன்னவாறு செய்யும் ரயில்வண்டிகள்.**

வாயால் சொன்ன மாத்திரத்தில் இயங்கக்கூடிய ரயில் வண்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த வண்டிகள் 'நில்' என்று சொன்னால் நிற்கின்றன. 'பின்னால்போ' என்று சொன்னால் பின்னால் நகர்கின்றன. இவ்வண்டிகள் சமீபத்தில் லண்டனில் பரீட்சை செய்து காட்டப்பட்டன.

* * *

**விவாக கோலம்**

பால்ய விவாகத் தடை மசோதா அடுத்த ஏப்ரல் மாதமுதல் அமுலுக்கு வரப்போகிறதென்பதைத் தெரிந்து, அச்சட்டத்தை அங்கீகரியாத பலரும் இப்பொழுதே, தங்கள் மக்களுக்கு விவாகங்களை நடத்தத் தொடங்கிவிட்டனர். சென்ற சில நாட்களாக இத்தகைய பால்ய விவாகங்கள் குஜராத் மாகாணத்தில் ஏராளமாக நடைபெறுகின்றன. சூரத் நகரத்தில் மாத்திரம் இன்னும் சில நாட்களுள் இரண்டாயிரம் விவாகங்களுக்குமேல் நடைபெறுமாம். சிசுக்குழந்தைகட்கும் விவாகம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

* * *



# மதிப்புரை

**கோ ஸம்ரக்ஷண சாஸ்திரம்.**

தஞ்சை ஜில்லா புலிவலம் ஸ்ரீ R. கோபாலய்யரவர்களால் இயற்றப்பட்ட கோ ஸம்ரக்ஷண சாஸ்திரம் என்ற நூல் ஒன்று எமது பார்வைக்குக் கிடைக்கப்பெற்றோம். மனையடி சாஸ்திரம், ஜலாசய நிர்மாண லக்ஷண சாஸ்திரம், விருக்ஷாதி சம்ரக்ஷண சாஸ்திரம் முதலிய விவசாயிகட்கு இன்றியமையாத பல அரிய ஆராய்ச்சி நூற்கள் இயற்றி தமிழுலகில் பெயர் பெற்ற ஆசிரியரால் இந்நூலும் யாக்கப்பட்டது கண்டு மகிழ்கின்றோம்.

பால் முதலிய உணவுகளைத் தந்து, உணவுப் பொருள்களின் உற்பத்திக்கும் உறுதுணையாயிருப்பது பசுவர்க்கங்களேயாகும். இதனைக் கருதியே இந்துக்கள் பசுவைத் தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். ஆயினும், தற்காலத்தில் மாடுகளை வளர்க்கும் வகையறியாது அவற்றை வதைப்போர் பலர். இக்கொடுமை ஒழிய வேண்டுமாயின் கோ ஸம்ரக்ஷண சாஸ்திரமென்ற இந்நூலை இந்தியா எங்கும் பரப்ப வேண்டியது அவசியம். இந்நூலில் பல தேயத்திய மாடுகளின் லட்சணம, குணம், திறமை, நிறமாதியன விளக்கப்பட்டிருக்கின்றன. மாடுகளைக் காப்பாற்ற வேண்டிய விதங்கள், அவைகட்குண்டாகும் வியாதிகள், அவைகளைத் தீர்க்கும் தமிழ், ஆங்கில வைத்திய முறைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் தமிழுலகிற்குப் பெரும்பயன் தருமென்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும், பசு மடங்களிலும், ஆலயங்களிலும் இந்நூல் இருக்கவேண்டியது அவசியமாகும். விலை ரூபா ஒன்று.

வேண்டுவோர் R. கோபாலய்யர், புலிவலம், தஞ்சை ஜில்லா என எழுதிப் பெற்றுக்கொள்க.

**கந்தரானுபூதி.**

வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவரவர்களால் பதிப்பிக்கப்பெற்ற கந்தரனுபூதி என்ற சிறு நூல் ஒன்று கிடைக்கப்பெற்று மகிழ்கின்றோம். இதுவரை பலர் இதனை ப்திப்பித்திருப்பினும் இது பிழையின்றி, வெள்ளிய தாளில் பாக்கெட் அளவில் பாராயணத்திற்கேற்ற வகையில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் காஞ்சி நாகலிங்க முனிவர், "காமாட்சி விலாசம்", கீழ்ப்பாக்கம், சென்னை என்ற விலாசத்திற்கெழுதவும்.

**பித்தன்.**

சென்னை வனமலர்ச் சங்கத்தின் வெளியீடாகிய 'பித்தன்' என்னும் அழகிய மாதப்பத்திரிகையின் இரண்டாவதாண்டு முதலாவது சஞ்சிகை ஒன்று நமது பார்வைக்கு அனுப்பப்பெற்றோம். பலவாண்டுகளாகச் சிறந்தவை எனக் கருதப்பட்டு வந்த கொள்கை, பழக்கம் முதலியவற்றைக் காலப்போக்கிற்கேற்பப் பயன் தருமாறு மாற்றிக்கொள்ள வேண்டும் என்று மன்றாடிக் கூறுவோரைப் பழமை பாராட்டுவோர் பித்தரென்றே சொல்லுவது, எக்காலத்தவர்க்கும் எத்தேசத்தவர்க்கும் இயல்பாகவே இருந்து வருகிறது. ஆகையால் நமது தேச முன்னேற்றத்தில் பித்து கொண்டு அதாவது தேசமுன்னேற்றத்தையே தலைமை முக்கிய நோக்கமாகக் கொண்டு தற்காலம் பயன் படாதவற்றை ஒழித்து பயன் தரும் புதிய முறைகளைக் கைக்கொள்ளுமாறு பலமுறை பலவிதமாக எடுத்தோதவே தோன்றிய இத்தமிழ் பத்திரிகைக்குப் பித்தன் என்னும் பெயர் சூட்டப்பெற்றது எனக் கருதுகிறோம். நமது முன்னேற்றத்திற்கான அரிய வியாசங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. மத சமூக வித்தியாசங்கள் பாராட்டாது பொதுவாக இந்தியர்கள் சீர்பெற வேண்டுமென்ற சமரச தீவிர நோக்கத்தோடு உழைத்து வரும் சில பத்திரிகைகளுள் பித்தனும் ஒன்றாகும்.

வருஷ சந்தா { ரூபா. 1-0-0 உள்நாடு
{ ,, 1-4-0 வெளிநாடு.

49, பஜார் ரோட்டு, மயிலாப்பூர், சென்னை.

**'ரிவோல்ட்'**

'ரிவோல்ட்' என்பது பல்லாண்டுகளாக உறங்கிக்கிடந்து சமீபத்தில் திடீரென விழித்தெழுந்து தீவிர வேலை செய்து தற்போது முன்னணியில் நிற்கும் ருஷியா, துருக்கி முதலிய நாடுகளைப்போல் பொதுவாக இந்தியாவையும், சிறப்பாக இந்துக்களையும் சீர்திருத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும் ஆங்கிலப்பத்திரிகையாகும். இத்தகைய உணர்ச்சி சமீபத்தில் நடந்த ஐரோப்பிய மகா யுத்தத்தின் பிறகு பல ஆசிய நாடுகளில் உண்டாயிருக்கிறதென்பது மிகையாகாது. இப்பத்திரிகை நமது நாட்டிலுள்ள பல தீவிர சீர்திருத்தக்காரர்களாலும் ஆதரிக்கப்பட்டு வருகிறதாகத் தெரிகிறது. இது வரையில் நமது நாட்டில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் வைதீக வாழ்க்கையையும் லௌகீக வாழ்க்கையையும் அடியோடு மாற்ற வேண்டும் என்ற கொள்கையுடையது. இது தான் இத்தகைய நோக்கத்தைத் தைரியமாக முதல் முதல் எடுத்துக்கூற முன் வந்த ஆங்கிலப் பத்திரிகையாகும். இப்பத்திரிகையின் கொள்கைகளைப் பின்

பற்றி இப்போது பம்பாய், பஞ்சாப், பங்காளம் முதலிய வடநாடுகளில் சில பத்திரிகைகளும், சங்கங்களும் தோன்றியிருப்பதாகவும் தெரிகிறது.

### தினகரன் கல்நார் பற்பொடி

மெஸர்ஸ் கே. எஸ். ஏ. எஸ். பிரதர்ஸ் அவர்களிடமிருந்து கல்நார் பற்பொடி டப்பிகள் சில வரப்பெற்றோம். இப்பொடியை ஒருவாரமாக நாங்கள் உபயோகித்துப் பார்த்ததில் இது அசல் சீமைக் கல்நாரினால் தயாரிக்கப்பட்ட தென்றறிந்தோம். நல்ல மணமும் நிறமும் வாய்ந்துள்ளது. இதனை உபயோகித்தால் வெகு விரைவில் பற்களின் அழுக்குகள் நீங்கி சுத்தப்படுவதோடு பற்களும் கெட்டிப்படுகின்றன. நீடித்து உபயோகித்தால் பற்சொத்தைகளும் நீங்குமென எண்ணுகின்றோம். இதனை ஒருமுறை உபயோகித்துப் பார்க்குமாறு நமது நண்பர்கட்கு சிபார்சு செய்கிறோம்.

## வர்த்தமானப் பகுதி

### முனிஸிபல் சட்டத்திருத்த மசோதா.

ஜில்லா முனிசிபாலிடிகளின் சட்டத்திருத்த மசோதா ஒரு கமிட்டியாரின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களில் முக்கியமானவை :—அங்கத்தினரின் நியமனம் ஒழிதல், பெண்பாலர்க்கு கவுன்சில் உரிமை, வரிசெலுத்துவோர் அனைவர்க்கும் வாக்குரிமை, தேர்தல் நடத்தும் வேலை சேர்மனைவிட்டு விலகுதல், டோல்கேட்டு சுங்கவரி வசூல் நிறுத்தம் முதலியனவாகும். 21 வயதடைந்த எல்லாரும் ஓட்டு கொடுக்கலாமென்னும் பிரேரணையை இந்தக் கமிட்டியார் அங்கீகரித்துள்ளதாகத் தெரிகிறது.

* * *

### பாடசாலைகளில் தீண்டப்படாத மாணவர்

காஞ்சிபுரம் சங்கராச்சாரி மடத்தில் நடந்து வந்த பள்ளிக்கூடத்தில் தீண்டப்படாதவர்களைச் சேர்த்துக் கொள்ளாததற்காக கிராண்டு மறுக்கப்பட்டு பள்ளிக்கூடம் மூடப்பட்டது.

* * *

### ராஜா சர். அண்ணாமலை மண்டபம்.

வித்தியாதானத்திற்கு 40லட்சம் ரூபாய் வழங்கிய ராஜா. சர். அண்ணாமலை செட்டியாரவர்களின் ஞாபகார்த்தமாக சென்னை பேப்பியர் பார்க்கில் ஒரு மண்டபம் கட்டுவதற்காக இதுவரை 2,50,000 ரூபாய் வசூலாகியிருக்கிறது. இன்னும் ஐம்பதாயிரம் வசூலாகுமென அதிர்பார்க்கப்படுகிறது.

* * *

### ரயில் மாற்றம்.

டிஸம்பர் முதல் தேதி முதல் சென்னையிலிருந்து சிலோன் போட்மெயில் இரவு 8-45-க்கும், எக்ஸ்பிரஸ் காலை 7-45-க்கும், மதுரை பாசஞ்சர் மாலை 6-55-க்கும் புறப்படுமென்று அறிவிக்கப்படுகிறது.

* * *

### சர். கே. வி. ரெட்டி நாயுடு.

தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்திய ஏஜண்டு சர். கே. வி. ரெட்டி நாயுடு தமது உடல் அசௌகரியத்தை முன்னிட்டு ஓய்வெடுத்துக் கொண்டு 2-12-29-ல் தென்னாப்பிரிக்காவை விட்டு இந்தியாவுக்குப் பிரயாணமானார்.

* * *

### ஒரு வக்கீலின் திண்டாட்டம்.

சென்னை ஹைகோர்ட் வக்கீல் டி. கே. பஞ்சாபகேச அய்யர் தம் கட்சிக்காரர் பணத்தைக் கையாண்டதால் 3 வருடம் வக்கீல் தொழில் நடத்தக்கூடாதென ஹைகோர்ட் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

* * *

### பீங்கான் பாலம்.

சீன தேசத்தில், அதன் தலைநகராகிய பெக்கினுக்கருகே ஓரிடத்தில், முழுதும் பீங்கானாலேயே செய்யப்பட்ட பாலம் அல்லது வாராவதி ஒன்றிருக்கிறதாம்.

* * *

### பத்திரிகைப் பெருக்கம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனத்தொகை 12 கோடி. அந்நாட்டில் தினந்தோறும் காலையில் 1,30,00,000 பத்திரிகைகளும் மாலையில் 2,60,00,000 பத்திரிகைகளும் வெளியிடப்படுகின்றனவாம். ஆகவே சராசரி குழந்தைகளைத் தள்ளினால் இருவருக்கு ஒரு பத்திரிகையாம். பெண் ஜனத்தொகை பாதியைத் தள்ளிவிட்டால் ஒவ்வொரு ஆண்மகனும் பத்திரிகை வாசிப்பவனாக இருக்கிறான்.

* * *

### சட்டசபை.

சென்னை சட்டசபை அடுத்த ஏப்ரல் மாதம் 13-ந்தேதி கலைக்கப்பட்டு ஜுன் அல்லது ஜுலை மாதத்தில் தேர்தல் நடைபெறு மெனத்தெரிகிறது.

* * *

### குதிரைப் பந்தயம்.

சென்னை நகருக்குள் குதிரைப்பந்தயக் கடைகள் (Race Club) இருக்கக்கூடாதென சட்டசபையில் நிறைவேறிய தீர்மானம் 19-11-29ல் அமுலில் கொணரப்பட்டது.

* * *

### மதுபானக் கடையடைப்பு.

ஞாயிற்றுக் கிழமைகளிலும், இதர விடுமுறை நாட்களிலும் சட்டசபை முனிசிபாலிடி ஜில்லா போர்டுகளின் தேர்தல் தினங்களிலும் சாராயக்கடைகளும், கள், அபின், கஞ்சா முதலிய வெறி சரக்குகள் கடைகளும், மூடப்பட வேண்டுமென சென்னை சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கின்றது.

* * *

சென்னைச் சூளையில் வசித்துவரும் கண்டிராக்டரும் பிரசுகாரருமான ஸ்ரீமான் டி. பி. இராமசாமி பிள்ளை என்பவர் சென்னையில் ஒரு பிரசவ ஆஸ்பத்திரி ஏற்படுத்துவதற்கு நன்கொடையாக 40 ஆயிரம் ரூபா சென்னை நகரசபைக்குக் கொடுப்பதாக முன் வந்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

* * *

காந்தியடிகள் ஐக்ய மாகாணத்தில் செய்த சுற்றுப் பிரயாணத்தில் சென்றவாரம் வரை மூன்று லட்சம் ரூபா வசூலாயிருக்கிறதென அறிவிக்கப்படுகிறது.

### சென்னை சர்வகலாசாலை.

சென்னை, சர்வகலாசாலைக் கழகத்தினர் பூகோள சாஸ்திரப் பயிற்சிக்கெனத் தனிப்பாடசாலை யொன்று ஸ்தாபிக்கவும், ஏப்ரல் 15௳ முதல் ஜுன் மாதம் 15௳ வரையிலுமுள்ள பாடசாலைகளின் கோடைகால விடுமுறையை மே௴ முதல் தேதியிலிருந்து ஜுன்மாதம் முதல் வரையில் மாற்றவும் தீர்மானித்திருக்கின்றனர்.

---

## விநோத உலகம்.

### திருமணத்தில் விநோதச் செயல்கள்.

சிங்கப்பூரிலுள்ள சீனர்களுக்குள் திருமண காலத்தில் ஓர் விநோத வழக்கம் நடைபெற்று வருகிறது. அதாவது மணம் முடிந்த பின்னர் மணமகனும் மணமகளும் தங்கள் சுற்றத்தார், சிநேகிதர் முதலியவர்களின் வாழ்த்து பெறுதற்காக கல்யாண மண்டபத்தில் நின்றுகொண்டிருப்பர். இந்த சமயத்தில் தம்பதிகளின் சிநேகிதர்கள் பரிகாசம் செய்வது வழக்கம். ஏன் இவ்வாறு பரிகாசம் செய்யப்படுகிறதெனின் பரிகாசம் செய்வதைக் கண்டு கல்யாணப்பெண் சிறித்துவிட்டால் மாப்பிள்ளையின் செலவில் வந்திருப்பவர்களனைவருக்கும் ஓர் விருந்து நடத்தப்படவேண்டும். அன்றியும் சிரித்துவிட்ட அப்பெண் சமர்த்துடையவளல்ல என்பதும் அவர்களது அபிப்பிராயம். கல்யாணப்பெண்கட்குச் சிரிப்பு உண்டாக்குவது மிகக்கஷ்டம். மணப்பெண் வாயில் ஒரு பாக்குத் துண்டைப் போட்டு பல்லால் கெட்டியாய்க் கடித்துக் கொண்டிருப்பாள். பெண்ணின் தோழி பக்கத்தில் நின்று கொண்டு யார் எவ்விதமான பரிகாசங்கள் செய்தாலும், அதைப்பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல் பெண் சாதாரணமாய் நின்று கொண்டிருக்கிறதா என்று கவனித்து வருவாள். பெண் இப்பரிகாசங்களால் சற்று சிரித்து விடுமெனத் தோன்றினால் தோழி நன்றாகக்கிள்ளியாவது, ஊசியால் குத்தியாவது, காதைக் கடித்தாவது எச்சரிக்கை செய்வாள். பெண் கல்யாண உடையுடன், ஒரு சிறிய கோப்பையில் ஒயின் வைக்கப்பட்ட தட்டைக்கையில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அந்த ஒயினை விருந்தினர்கள் யாவரும் எடுத்துக் கொஞ்சம் குடித்துவிட்டு தட்டில் வைக்கும் போது தங்கள் மனம்போனபடி யெல்லாம் பரிகசிப்பர்.

மணவறையில் ஒரு எலியை விட்டுவிடுவதும் நாட்டியமாடுவதும், மணவறையிலேயே சீட்டாடுவதும் சீனருக்குப் பெரிய வேடிக்கையாக இருக்கிறது.

(Straits Timel

## 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

சுக்கிலஞூ மார்கழிமீ (1929ஞூ டிசம்பர்மீ 193( ஞூ ஜனவரிமீ )தக்ஷிணாயனம், ஹேமந்தரிது,

| ஆங்கிலம். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | நேத்திரம். | ஜீவன். | வாக்கிய [illegible] | யோகினி. | விசேட நாட்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | ஞா | சது 35-5 | ஓ 0-50<br>ரோ 54-48 | சி 60 | 2 | 1 | சூன் | தெமே | |
| 16 | 2 | திங் | ○ 26-40 | மி 47-53 | அ 47-53 சி | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 17 | 3 | செவ் | பிர 17-35 | தி 40-38 | ம 40-38 சி | 2 | 1 | பிர | மேற்கு | |
| 18 | 4 | புத | துதி 8-28<br>திரி 59-35 | பு 33-18 | சி 60 | 2 | 1 | துவி<br>திரி | வடமே | |
| 19 | 5 | வியா | சது 51-33 | பூ 26-38 | அ 26-38 சி | 2 | 1 | சது | ஆகாசம் | |
| டிசம்பர் 20 | 6 | வெ | பஞ் 44-35 | ஆ 20-55 | ம 60 | 2 | 1 | பஞ் | பூமி | |
| 21 | 7 | சனி | சஷ் 38-53 | ம 16-25 | அ 16-25 சி | 2 | 0 | சஷ் | கிழக்கு | |
| 22 | 8 | ஞா | சப் 35-0 | பூர 13-28 | சி 13-28 அ | 2 | ½ | சப் | வடக்கு | |
| 23 | 9 | திங் | அஷ் 32-50 | உ 12-18 | சி 60 | 1 | ½ | அஷ் | தென்கி | |
| 24 | 10 | செவ் | நவ 32-28 | அ 12-53 | சி 60 | 1 | ½ | நவ | தெமே | |
| 25 | 11 | புத | தச 33-45 | சி 15-8 | சி 60 | 1 | ½ | தச | தெற்கு | |
| 26 | 12 | வியா | ஏகா 36-28 | சு 18-43 | அ 18-43 சி | 1 | ½ | ஏகா | மேற்கு | |
| 27 | 13 | வெ | துவா 40-23 | வி 23-33 | சி 60 | 0 | ½ | துவா | வடமே | |
| 28 | சுக்கில ஞூ மார்கழி 14 | சனி | திர 45-13 | அ 29-18 | சி 60 | 0 | ½ | திர | வடகிழ | பிரதோஷம் |
| 29 | 15 | ஞா | சது 50-40 | கே 35-45 | ம 35-45 சி | 0 | ½ | சது | ஆகாசம் | |
| 30 | 16 | திங் | ● 56-35 | மூ 42-40 | சி 42-40 ம | 0 | 0 | அமா | பூமி | அமாவாசை |
| 31 | 17 | செவ் | பிர 60 | பூ 49-58 | சி 49-58 அ | 0 | 0 | பிர | கிழக்கு | |
| 1 | 18 | புத | பிர 2-45 | உ 57-20 | அ 57-20 சி | 0 | 0 | துதி | கிழக்கு | |
| 2 | 19 | வியா | துதி 9-10 | தி 60 | சி 60 | 0 | ½ | திரி | வடக்கு | |
| 3 | 20 | வெ | திரி 15-33 | தி 4-45 | ம 4-45 சி | 0 | ½ | சது | தென்கி | |
| 4 | 21 | சனி | சது 21-38 | அ 11-50 | சி 11-50 அ | 0 | ½ | பஞ் | தெமே | |
| 5 | 22 | ஞா | பஞ் 26-58 | ச 18-30 | சி 60 | 1 | ½ | ... | தெற்கு | |
| 6 | 23 | திங் | சஷ் 31-20 | பூ 24-10 | ம 24-10 சி | 1 | ½ | சஷ் | மேற்கு | |
| 7 | 24 | செவ் | சப் 34-13 | உ 28-33 | அ 28-33 சி | 1 | ½ | சப் | வடமே | |
| 8 | 25 | புத | அஷ் 35-20 | ரே 31-15 | ம 60 | 1 | ½ | அஷ் | வடகி | |
| 1930 ஞூ ஜனவரி 9 | 26 | வியா | நவ 34-30 | அ 32-0 | அ 32-0 சி | 2 | ½ | நவ-த | ஆகாசம் | |
| 10 | 27 | வெ | தச 31-40 | பர 30-45 | சி 60 | 2 | 0 | ஏகா | பூமி | |
| 11 | 28 | சனி | ஏகா 26-50 | •கி 27-35 | அ 60 | 2 | 0 | துவா | கிழக்கு | கிருத்திகை வை |
| 12 | 29 | ஞா | துவா 20-3 | ரோ 22-33 | சி 60 | 2 | 1 | திர | வடக்கு | [குண்ட ஏகாதசி |
| 13 | 30 | திங் | திர 11-50 | மி 16-10 | அ 16-10 சி | 2 | 1 | சது | தென்கி | |


உலகத்தில் நீங்கள் உயர்பதவி யடையவேண்டாமா ?

சகலவித வசிய மர்மங்களை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா ??

இவை எப்படி அடைவது ?!? கீழே கவனித்து வாசியுங்கள்!!

பூலோகத்தின்கண் புண்ணிய கீர்த்தியாய் விளங்க—உயர்பதவி—சுயமரியாதை—கௌரவம்—மஹத்துவம்—புகழ்ச்சி—ஆரோக்கியம்—அதிர்ஷ்டம்—ஜீவசக்தி—கார்யசித்தி—ஹிப்னாடிசம்—மெஸ்மரிஸம்—முதலானவைகளை—அனுபவிக்கவேண்டி அபூர்வ ரகஸ்யங்களை சுலபமாக அறிந்து அனுஷ்டிப்பதற்கு—ஸ்வாமி ப்ரேமானந்த யோகீஸ்வரர் அவர்களினால் லோகோபகாரமாய் எழுதப்பட்ட

# வசீகரண தந்த்ரம்

என்னும் அதியற்புத கிரந்தத்தை உடனே விலைக்குவாங்கி வாசித்து லாபம் அடையுங்கள்! இதில் கோரிய பெண்ணை மணமுடித்தல், மணமகள் மணமகனுடைய காதலை விருத்தி செய்தல், கன்னிகை வசீகரணம் மணமில்லா மணத்தை மகிழ்வு பெறச்செய்தல், ப்ரேமாபிவிர்த்தி, நிரந்தரமான நட்பைப்பெறல், மணத்திற்கு முந்தி மணப் பெண்ணின் ப்ரீதியைப் பெறல், ஸ்த்ரீகளிடத்தில் கௌரவம் பெறுதல், பிரிவுற்ற தம்பதிகள் கூடுதல், வேண்டுமளவு சந்ததிபெறல், கணவனின் கெட்ட நடத்தைகளைத் திருத்துதல், பெண்களின் துர்நடத்தைகளை நிறுத்துதல், தனவந்தனைத் தன் வயமாக்கிக் கொள்ளல், உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தைப் பெறுதல், பேய் பிசாசுகளை ஓட்டுதல், சூன்யம் திருப்புதல், பைத்தியம் போக்கடித்தல், மானவ வசியம், ஜீவஜந்துக்களின் வசியம், தனாகர்ஷணம், களாகர்ஷணம், ஜனாகர்ஷணம், மோஹனம், ஸ்தம்பனம், உச்சாடனம், வித்வேஷணம், மாரணம், சாந்தி முதலாக 100 ப்ரயோகங்கள் சிறுவர் முதல் பெரியவர் ஈறாக அறிந்துகொள்ளும்படியான சுலபமான நடையில—இனியமொழியில எழுதப்பட்டன.

மேற்சொன்ன விஷயங்களெல்லாம இப்புத்தகத்தில் இல்லையென்று எவரேனும் நிரூபித்தால் அவருக்கு இப்புத்தகத்திற்கு வாங்ககொண்ட விலையை யாதொரு ஆக்ஷேபணையின்றி திருப்பிக்கொடுத்து விடப்படும். இன்னும் இதைவிட திடமாக வேறு என்ன உறுதிசொல்லலாம்?

அதிர்ஷ்டம் உள்ளவர்கட்கே இப்புத்தகம் கிடைக்கும்! நாளை எழுதலாம் என்று காலம் தள்ளாமல மறந்துவிடுமுன—இன்றே—இப்பொழுதே—ஒரு புத்தகத்திற்கு—ஆர்டர் செய்து வாங்கிப் படித்து அதிலுள்ள இன்பத்தைக் கண்டு களிகூருங்கள் !!!

விலை ரூபாய் இரண்டே ! (தபால் செலவு 0-5-0).

**எம். எஸ். ராமுலு கம்பெனி,**

புத்தக வியாபாரிகள், 88, மன்னார்சாமி கோயில் தெரு, ராயபுரம், மதராஸ்

**M. S. RAMULU & Co., Booksellers and Publishers,**
**Rayapuram, Madras.**

## மகா மன்மத

# சிந்தாமணி

## லேகியம்

அபாரமான தாதுபுஷ்டி, ஜீரண சக்தி, திடகாத்திரம், புத்தி கூர்மை, பரமானந்தம், சுறுசுறுப்பு ஞாபக சக்தி, போக போக்கியம், புத்திர சந்தானம், உற்சாகம் முதலியன தேவையுள்ளவர்கள் நமது ஒப்புயர்வற்ற இம்மகா மன்மத சிந்தாமணி லேகியம் ஒன்றினாலேயே அடையக் கூடும். எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

**முதல் நெம்பர் முதல் தரம் அதிக திடமுள்ளது**

**1 சேர் டின் (8 பலம் அல்லது 24 ரூபா எடை) விலை ரூ 3 0 0**

**இதா எல்லா வியாதிகளுக்கும் நம்மிடம் உயர்ந்த உத்தரவாதமுள்ள சிறந்த மருந்துகள் கிடைக்கும்**

### சில முக்கியமான மருந்துகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அஜீரணத்தைப் போக்கும் அமிர்தம் 1 சேர் டின் ... ... | ரூபா | 2 | 0 |
| வலிகளைப் போக்கும் அமிர்த ரசம் 1 புட்டி ... ... | ,, | 1 | 0 |
| போக சக்தியைப் பூரணமாகக்கொடுக்கும் தங்கரேக் மன்மத குளிகை 100-க்கு ரூ. 15, 50-க்கு ரூ. 8-8, 25-க்கு ... ... | ,, | 5 | 0 |
| விபசார வியாதிகளை ஒழிக்கும் பிரமேக நிவாரணி 1 புட்டி ... ... | ,, | 2 | 4 |
| சிரசைப்பற்றிய தீமைகளை ஒழிக்கும் வில்வாதி தைலம் 12 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 2-4-0, 6 அவுன்ஸ் புட்டி 1-க்கு... ... | ,, | 1 | 3 |
| சர்ம வியாதிகளுக்குப் படை மருந்து 1 புட்டி ... ... | ,, | 0 | 8 |
| தண்டபாணி பற்பொடி டப்பிகள் டஜன் 1-க்கு ... ... | ,, | 1 | 8 |

எல்லா விபரமும் அடங்கிய பெரிய கேட்லாக்கிற்கு எழுதவும்.

**குறிப்பு:**—நமது வைத்தியசாலையில் கூலிக்கு வேலை செய்துகொண்டிருந்தவர்களிற் சிலர் தம்மைப் பெரிய டாக்டர் என்றும், தமது மருந்துகள் பணத்திற் குறைந்தும், குணத்திற் சிறந்தும் விளங்குவதாகவும், புதிய வைத்தியசாலைகளின் பெயரால் போலி மருந்துகளை நமது மருந்துகளுக்குச் சமம் என்று விளம்பரப்படுத்தி விற்பனை செய்வதாகவும் தெரிய வருகிறது. பொது ஜனங்கள் ஏமாராமலிருக்கும்பொருட்டு எச்சரிக்கை செய்கிறோம்.

**அறிவிப்பு:**—சிலோன், பர்மா, மலாய், பினாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களில் நமது வைத்தியசாலைக்குச் சுமார் 500 ஏஜண்டுகள் வரையில் இருக்கிறார்கள், ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் தேவையுள்ளவர்கள் எழுதினால் ஏஜன்஭ி நியமிக்கப்படும்.

**தண்டபாணி வைத்தியசாலை, தபால் பெட்டி 292, மதராஸ்.**

---

## ஒரு புட்டி மருந்தினால் அடைவதைவிட நாம் வாழும் வாழ்விலேயே தேகாரோக்கியத்தை அடையலாம்.

### ஆரோக்கிய மார்க்கங்களை போதிக்கும் ஆரோக்கிய தீபிகையானது இம்மாதிரியாகவே ஆரோக்கியத்தை அடையச்செய்கிறது.

**ஆனரபில் டாக்டர் யூ. ராம ராவ். யூ. கிருஷ்ண ராவ், எம். பி. பி. எஸ், இவர்களால் பிரசரிக்கப்பட்டது.**

ஆரோக்கியம் வியாதி இவைகளைக் குறித்து வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை **ஆரோக்கிய தீபிகையானது** உங்கள் வீடுகளில் நுழையச் செய்கிறது. வெகுநாள் அனுபோக முள்ளவரும் விஸ்தாரமாய் வைத்தியம் செய்து வருபவருமாகிய, வைத்தியத்திலும் ரண வைத்தியத்திலும் பெயர் பெற்ற ஒருவர் உங்கள் வீட்டிற்குள்வந்து, உங்களுக்கும் உங்கள் குடும்பத்தார்க்கும் ஆவசியகமான ஆரோக்கிய விஷயங்களை, நேரில் எளிய நடையில் நீங்கள் தெரிந்து கொள்ளும்படி உங்களுக்குப் போதிப்பின் அது எவ்வளவு நலம் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். "ஆரோக்கிய தீபிகையானது" அதை வாசிப்போர்க்குச் செய்யும் தொண்டு இதுதான். பிரதி மாதமும், இதில், ஆரோக்கியத்திற்கு முக்கியமான விஷயங்கள், அதாவது, உணவு, போஷிப்பு, நோய்களைத் தடுக்கும் மார்க்கம், சிசுக்கள் பராமரிப்பு, அவைகளின் ஆகாரம், குழந்தைகளைப் பழக்குதல், நோயாளிக்குச் செய்யவேண்டிய சிசுருஷை, கர்ப்பிணி நடந்து கொள்ளவேண்டிய முறைகள், ஆரோக்கியமும், அழகும், வியாயாமம், விளையாட்டுகள், தொத்து வியாதிகள் ஆகிய இவைகளைப்பற்றி வியாசம் எழுதப்படுகின்றன. தாய்மார், உபாத்தியாயர், மாணாக்கன், ஆரோக்கிய பிரசாரகர்கள், குழந்தை இவர்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டிய விஷயங்களை இதில் காணலாம். ஆரோக்கிய தீபிகையை குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் உபயோகமாயுள்ள 'வீட்டு ஆரோக்கிய போதகர்' என்னலாம். எந்த பாஷையிலும் ரூ. 1—8—0க்கு இது கிடைக்கக்கூடியது.

**இதைக் கத்தரித்து தபாலில் போடுங்கள்.**

---

ஆரோக்கிய தீபிகை மானேஜர்—தபாற்பெட்டி 166, சென்னை.

ஐயா,

நான் ஆரோக்கிய தீபிகைக்கு சந்தாதாராகவிருக்க, விரும்புகிறேன். தயவு செய்து என்னை......................முதற்கொண்டு ஒரு சந்தாதாராகச் சேர்த்துக்கொள்ளுங்கள். * இன்று ரூ. 1—8—0 மணியாடர் மூலமாய் அனுப்பியிருக்கிறேன்............................சஞ்சிகையை தயவு செய்து ரூ. 1—10—0க்கு வி. பி. மூலமாய் அனுப்புங்கள்.

முழுப்பெயர்.....................................................

தொழில்.....................................................

விலாசம்.....................................................

கையொப்பம்.............................தேதி.......................

---

* இதில் எது வேண்டியதோ அதை நிறுத்திக்கொண்டு மற்றதை அடித்துவிடுங்கள்.

## மகாநாட்டு மலர்.

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள், தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள் 40-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணா 8 தபாற் செலவு அணா 3

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ், பவழக்காரத் தெரு, சென்னை.



ஒவ்வொரு குடும்பத்திற்கும் டாக்டரைப்போல உதவக்கூடியது

## மின்சார ரசம்

ஒன்றேயாகும்.

—:o:—

சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம்போன்றதென உலகப்பிரசித்தி பெற்றது.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.

ஒரே முறை பரீக்ஷியுங்கள். கேட்டலுக் இனாம்.

புட்டி 1-க்கு ரூ 2. தபாற் செலவு வேறு.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

டி பி சுந்தரேசன், B.A., மார்த்தாண்டம் :— "மின்சார ரசத்தினால் இருமல், ஜலதோஷம், ஜுரம் உடனே நிவர்த்தியாயிற்று பல்லின் ஈறின் மேலிருந்த வீக்கம் மிகவும் ஆச்சரியகரமாக உடனே குணமடைந்தது

விலாசம்: மின்சார ரசம் கம்பெனி, லிமிடெட், சேலம்.

(4)



(3)F

## திருக்குறள்

### மூலமும் பொழிப்புரையும்.

பொருளீட்டும் கருத்தின்றி தமிழ் நாகரீகத்தின் புகழ்நாட்டும் கருத்தோடு நல்ல கிளேஸ் காகிதத்தில் பாக்கட் அளவில் அச்சிடப்பட்டுள்ளது.

300 பக்கங்கள் உள்ள பெரிய புத்தகம்.

விலை அணா எட்டு.

இதுவரை இத்தகைய உரை வெளிவந்ததில்லை.

சமத்துவம் சகோதரத்துவம் பெண்ணுரிமை முதலிய தமிழ்நெறிபற்றி எழுதப்பட்ட புத்துரை

தமிழர் அனைவரும் ஓதி ஒழுகவேண்டிய முக்கியமான நூல்.

"நவசக்தி" ஆசிரியர் : திரு. வி. கலியாணசுந்தர முதலியார் முதலியோரால் நன்கு மதிக்கப் பெற்றது.

சொற்ப காப்பிகளே உள்ளன! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!!

ஒரு புத்தகம் வேண்டுவோர் தபால் செலவு சேர்த்து பத்தணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். 2 அல்லது 3 புத்தகங்கட்கு வி. பி. உள்பட தபால் செலவு அணா 7. ஆறு புத்தகங்கட்கு அணா 10.

செங்குந்தமித்திரன் புத்தகசாலை பவழக்காரத் தெரு, சென்னை.



## ஸ்ரீலோலன்

(ஓர் இனிய துப்பறியும் நாவல்)

எளிய நடை! இனிய உரை!

மற்ற நாவல்களைப்போலின்றி நன்னீதிகளைப் புகட்டுவது.

இன்றே வாங்கிப் படியுங்கள்.

விலை ரூ. 1-4-0.

செங்குந்தமித்திரன் புத்தகசாலை,

(9)F பவழக்காரத் தெரு, சென்னை.



## கற்பகத் தைலம்

குழந்தை வியாதிகட்கு அமிர்தம் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது.

பாக்கிங் தபால் செலவு உள்பட ஒரு புட்டியின் விலை ரூபா 1—4—0.

3 புட்டி வாங்கினால் செலவின்றி அனுப்பப்படும். உபயோகிக்கும் முறை புட்டியின்மேல் காண்க.

முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டா.

எல்லா வியாதிகட்கும் ஏற்ற மருந்துகள் கிடைக்கும்.

ப. அங்கமுத்து முதலியார்,
சிகிச்சாஞான பண்டிதர்,
கற்பக மெடிகல் ஹால், சத்தியமங்கலம்
(1) கோயம்புத்தூர்.

எங்கள் மருந்துச்சாலை கடந்த 25 வருட காலமாய் உள்ளூரிலும், வெளியூரிலும் அநேக வைத்தியர்களுக்கும் நோயாளிகளுக்கும் மருந்துகள் செய்து அனுப்பி அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று வருகிறது. அநேக நண்பர்கள் இவ்வளவு சிறந்த மருந்துகள் வெளியூர்களிலுள்ள நண்பர்களுக்குப் பயனளிக்காமல் போய்விடுகிறதென்பதை உணர்ந்து வற்புறுத்திச் சொன்னதின்மேல் விளம்பரம் செய்ய முன்வந்துள்ளோம். நண்பர்கள் பலரும் எங்களுடைய மருந்துகளை யாதொரு பயமுமில்லாமல் வாங்கியுண்டு நலனமைந்து எங்களை மேன்மேலும் ஊக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

முதலாவதாக நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் திடகாத்திரமுள்ளவர்களாக விளங்க வேண்டுவது அவசியம். தற்கால இளைஞர்கள் பாலிய சேஷ்டையாலும் மிதமிஞ்சிய போகத்தாலும் உடல் நலன் கெட்டுச் செல்லெரித்த மூங்கில்போல் மேலே மனிதராகவும் உள்ளே ஆண்மை இழந்த நிர்ப்பாக்கிய நிலைமையிலும் இருக்கிறார்கள்; இவர்களுக்கும், ஜுரம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டு ரத்தம் கெட்டுப் பலம் குன்றி இருப்பவர்களுக்கும், சாதாரணமாய் பலமுள்ளவர்களாய், வீரியமுள்ளவர்களாய் இருக்க விரும்பும் ஒவ்வொரு ஆண் பெண் இருபாலர்க்கும், உலகவாழ்க்கையின் இன்பத்துக்கும், ஆண் சிங்கம் போன்ற பலம் தருவதற்கும்,

## நாராயணசஞ்சீவி லேகியமும் அயத்தங்கச்செந்தூரமும்

மிக்க சிறந்தவை என்று உறுதி கூறுகிறோம்.

**இந்த லேகியம் செந்தூரம் சித்த வைத்திய முறைப்படி மிக ஜாக்கிரதையாயும் முறை தவறாமலும் செய்து முடிக்கப்பட்டது. வைத்திய முறைப்படி இதைக்காட்டிலும் சிறந்த பலம் தரும் மருந்து வேறென்றில்லை.**

### இந்த லேகிய செந்தூரங்களால் தீரும் முக்கிய வியாதிகள்.

தற்காலம் மானிட வர்க்கத்தை நிழல்போல் தொடர்ந்து அரிக்கும் 20 வகை மேகரோகங்கள், குன்மம், பித்த பாண்டு சூலை, ஓடுவாய்வு, கை கால் முடக்கு, நெஞ்சு தொண்டை எரிச்சல், பித்த வெப்பம், அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசியின்மை, சோம்பல், நித்திரை வாராமை, நீர் இறங்கும்போது பொறுக்க முடியாத பாதையைத் தரும் தந்திமேகம், தாது நஷ்டம், தேக உளைச்சல், கண்களில் நீர் வடிதல் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். பயங்கரமான மேகவியாதிகளைப் போக்கி தேகத்தைப் புஷ்டியாக்கிச் சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியை உண்டாக்கும்.

மனக் கவலையினாலாவது துர் அப்பியாசத்தாலாவது அடிக்கடி வரும் நோயினாலாவது மற்றெந்தக் காரணத்தினாலாவது பலம் கெட்டவர்கள் நமது லேகிய செந்தூரங்களைச் சாப்பிடுவார்களானால் அழகு தேகாரோக்கியம், தேக வலிவு முதலியவற்றைக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யும். நோயுள்ளவர்கள் தான் இவற்றைச் சாப்பிடவேண்டுமென்பதில்லை. **நோயில்லாதவர்களும் இவற்றை ஆரோக்கியத்திற்காகச் சாப்பிடலாம். இதற்கு பத்தியமே கிடையாது.** காலதேச வர்த்தமானமில்லாமல் எல்லா காலங்களிலும் சாப்பிடலாம். பசி அதிகமாய் எடுக்குமாகையால் ஜீரணிக்கக்கூடியதும் கொழுமையுள்ளதுமான ஆகாரங்களை வேளை தவறாமல் சாப்பிடவேண்டும். இச்சிறந்த லேகிய செந்தூரங்களை டைரெக்ஷனில் சொல்லியபடி 48 நாள் சாப்பிடுவார்களானால் அவை தேகத்தில் ஊறி மேகங்களை நெருப்புப்பொறி பட்ட பஞ்சுப் பொதியென நாசம் செய்து, புதிய ரத்தத்தை உற்பத்தி செய்து தேகத்தை இளைக்காமலிருக்கச் செய்யும். இவற்றை ஒற்றுமையாய் மனைவியும், கணவனும் ஏககாலத்தில் சாப்பிட்டால் அவர்களுக்கு உற்பத்தியாகும் குழந்தைகள் மிக அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் ஒரு புட்டி செந்தூரமும் ரூ. 2-4-0. தபால்செலவு அணா 6. 48-நாள் மருந்து தபால் சார்ஜ் உள்பட ரூ. 4-12-0.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு 24-நாள் மருந்து தபால்சார்ஜ் உள்பட ரூ.3-8-0. 48-நாள் மருந்து ரூ.6-4-0. வெளிநாட்டு அன்பர்கள் பூராவும் முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

**நாராயண சஞ்சீவித்தைலம்:—** பச்சிலை மூலிகைகளாலும் பசும்பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டது. தேகவரட்சியைப் போக்கி மூளையைக் குளிரச்செய்து புத்தி கூர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25 வருடகாலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள் வாடிக்கையாய் வாங்கி ஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தோடு வாழ்ந்துவருகிறார்கள்.

5 பல டின் 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

**நாராயண திராட்சைப்பழ லேகியம்:—** மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நமதுநாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதைச் சரியாய் கவனிக்காமையினால் அநேகவித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கொச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்துக்கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாய் இருக்கும். டப்பி 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகைக்கு V. P. அனுப்பமுடியாது.

(7) ஸ்ரீநாராயண மெடிகல் ஹால், காஞ்சீபுரம்.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the **South Indian Seuguntha Mahajana Sangam Madras**, at 31 Armenian Street, Madras, and is printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Press 2/19-A, Armenian Street, Madras.

129812

JL

N29.1.12